# ஞானச்சுடர்

## சந்நிதியான் ஆச்சிரமம்

சித்திரை

208 ஆவது மலர்

2015




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**அஃகி யகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்**
**வெஃகி வெறிய செயின்.**

**பொருள் :** கற்றவனொருவன் பொருளை விரும்பி எவரிடத்தும் அறி வில்லாத செயலைச் செய்வானாயின் அவன் நூல்களை எல்லாம் நுணுகி ஆராய்ந்து பெற்ற அறிவினால் ஆகிய பயன் யாது?

(175)

**அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்**
**பொல்லாத சூழக் கெடும்.**

**பொருள் :** அருள் ஒழுக்கத்தில் நிற்கின்றவன் பிறர் பொருள்மீது ஆசைப் பட்டு அதனைக் கவரத் தீயவழிகளை நினைப்பானாயின் அவன் கெட்டுவிடுவான்.

(176)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்



ஊனா யுணர்வா யுயிருக் குயிராய்
நானாய் நீயாய் நன்மையாய்த் தீமையாய்
வானாய் மதியாய் வாயுவாய்த் தேயுவாய்த்
தானாய் நின்றான் சச்சிதா னந்தனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 26

ஊழிக் காலத்து மொருவா வொருவனை
வாழி வாழியென் றேத்தி வணங்கி
ஆழிசூ ழுலகி லாசை யெலாம்போய்
தாளி ரண்டுஞ் சரணெனச் சாருதும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 27

ஊமத்தை கொன்றை யுவந்த பிரானைப்
பாவத்தை நீக்கும் பராபர வஸ்துவைச்
சேமத் தைத்தருந் திறமெனக் கொண்டு
ஓமத்தை யாற்றி யொருவழிப் படுவோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 208



2015 பொருளடக்கம் சித்திரை


| | | |
|---|---|---|
| பாடும் பணியே பணியாய்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 01 -03 |
| போற்றித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 04 -08 |
| அடக்கமும் பணிவும் | ஜீவிதா பியசேன | 09 -10 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 11 -12 |
| சனிபார்வையில் சிவன் | செல்வி பா. வேலுப்பிள்ளை | 13 -14 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 15 -17 |
| வல்லை முனீசுவரருக்குச்... | ச. லலீசன் | 18 -19 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 20 -21 |
| அன்பு தரும் தெய்வசிந்தை | எம். சுகந்தினி | 22 -23 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 24 -25 |
| ஊக்கம் உயர்வு தரும் | ம. விமலகாந்தன் | 26 -27 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 28 -33 |
| பஞ்சாட்சர மந்திரம் | திருமதி நா. சந்திரலீலா | 34 -37 |
| ஸ்ரீ கருட புராணம் | இரா. செல்வவடிவேல் | 38 -40 |
| எமது வாழ்க்கையில் சமயம் | செல்வி செ. ஐடா | 41 -42 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 43 -44 |
| இந்து சமயப் பண்பாட்டில்... | கு. கோபிராஜ் | 45 -47 |
| இந்து மதமும் பசுவும் | வி. செல்வரத்தினம் | 48 -49 |
| செய்தவினை இருக்க... | நீர்வை மணி | -50 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 51 -56 |
| கந்தபுராணம் போதிக்கும்... | கு. சிவபாலராஜா | 57 -59 |
| ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம் | வல்வையூர் அப்பாண்ணா | 60 -62 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் பங்குனிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

பங்குனிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திரு வ. கணேசமூர்த்தி (இளை. அதிபர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் சந்நிதியான் ஆச்சிரமமானது பல்வேறு சேவைகள் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. அந்தவகையில் ஞானச்சுடர் மலர்வெளியீடும் ஒன்றாகும். இச்சுடரானது கிரமம் தவறாது ஒவ்வொரு மாதமும் வெளிவருகின்றது என்பது ஆச்சரியமான விடயமாகும்.

அடுத்து அவர் தனது உரையில், சந்நிதியான் ஆச்சிரமத்தால் இலவச வைத்திய சேவை நடாத்தப்படுகின்றது. இதன்மூலம் பல நோயாளிகள் பயன்பெறுவதை நாம் எமது கண்களூடாகக் காணமுடிகின்றது.

இறுதியாக அவர், சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்படும் பணிகள் யாவும் சிறப்பானதாகவும், பயனுடையதாகவும் அமையவேண்டும் என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

207ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு க. ஆனந்தராசா (இளை. அதிபர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் ஞானச்சுடர் மலரை மதிப்பீடு செய்வதென்பது யாராலும் இயலாத காரியம். ஆனால் நான் ஒரு வரையறைக்குட்படுத்தி மதிப்பீடு செய்கின்றேன் என்று கூறினார். தொடர்ந்து கூறுகையில் ஞானச்சுடர் மலரில் இடம்பெற்றுள்ள ஆக்கங்கள் யாவும் மனித வாழ்க்கைக்குத் தேவையான ஆன்மீகக் கருத்துக்களைக் கூறுவனவாய் அமைந்துள்ளன.

அடுத்து அவர் தனது உரையில், ஞானச்சுடர் மலரை சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் படித்து இன்புறும் வகையில் அமைக்கப்பெற்றவை குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் இச்சுடரானது உலகத்தில் எங்கெல்லாம் சைவர்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் சென்று ஆன்மீகத்தை வளர்த்து வருகின்றது என்பது வியக்கத்தக்க விடயமாகும்.

மேலும் இச்சுடரானது பிரகாசிக்கவேண்டும் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

மனித உடல் வளர்ச்சிக்கு சத்துள்ள உணவு எவ்வளவு முக்கியமோ அதுபோலவே மனிதனது ஆன்மீக அறிவு வளமுற, வாழ்வு வளம்பெற, வாழ்க்கையின் தத்துவத்தை உணர சமயம் அவசியமாகின்றது. தெய்வ சிந்தனையுடன் நாம் செய்யும் எக்காரியமும் தர்ம காரியமாக அமைந்து அது எமக்கு நன்மையை அளிக்கும் என்ற பூரண நம்பிக்கையுடனும், மனத்திருப்தியுடனும் வாழ்ந்து எமக்கு வழிகாட்டியவர்கள் நமது முன்னோர்கள்.

எல்லாம் அவன் செயல், அவனன்றி ஓர் அணுவும் அசையாது, அன்பே சிவம் என்ற வாழ்க்கைத் தத்துவங்களை நமது வாழ்வு பண்படைய வழங்கியது சைவசமயம். கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்றார் பகவான் கிருஷ்ணன்.

வீணாக அலையும் மனத்தினை ஒருமைப்படுத்த சமய தத்துவங்கள் மிகவும் உறுதுணையாக உள்ளன என்பதை அனுபவமூலம் பெற்றவர்கள் பலர். எல்லாம் எப்பவோ முடிந்த காரியம் என்ற யோக சுவாமிகளினதும், உன்னைத் திருத்து உலகம் திருந்தும் என்ற இராம கிருஷ்ணரினதும் அருள் வாக்குகள் எம்மால் மேற்கொள்ளப்படும் தீய செயல்களைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

தற்கால சூழலில் வாழும் நாம் தெய்வ சிந்தனையுடன் செயற்பட்டு சாதி, சமய வேறுபாடுகளைக் களைந்து, மனித நேயத்தை வளர்த்து எல்லோரும் இறைவனின் குழந்தைகள், அன்பே சிவம் என்ற பாங்குடன் செயற்பட வேண்டும்.

தெய்வ சிந்தனை நம் உள்ளத்தில் என்றென்றும் பசுமையாக நிலை நிற்கச் செய்வதுதான் சமயம். சமயம் ஒருவரது வாழ்க்கையை வளமாக்கும் என்று பூரண நம்பிக்கை கொண்டவர்களே சமய வாழ்வைக் கடைப்பிடிப்பார்கள். சமய வாழ்வு வேறு, சமூக வாழ்வு வேறு என்று வாழ்கின்ற காரணத்தினால்த்தான் மனித சமூகம் பலவாறான இடர்பாடுகளை அனுபவித்து துன்பமடைகின்றது.

மனிதர்கள் அன்றாட வாழ்வில் தத்தம் சமயக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்து வாழும் பொழுது தர்மம் தழைக்கும். அன்பே சிவமான கடவுளின் அனுக்கிரகம் கிட்டும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தநாளும்

எந்த நாளு முந்தன்
சன்னிதிக் கோயில் நான்
இருக்க வேண்டுமையா - முருகையா
(எந்)

இந்த நாளும் எமக்கு
ஏதும் குறைவில்லை
இரும் பெரும் உனதாடல்
என்றும் பார்த்திட அடியேன்
(எந்)

கன்னல்மா பலா வாழை
கடம்புடன் நெல்லி வில்வை
கடிகமழ் மலர்ச் சோலை
கலந்து நிழலைச் செய்ய
மன்னவ னாய் முருகனே
மகிழ்ந்திட அடியவர்க்கு
வாரி வழங்குவதை
நேரில் பார்த்து மகிழ
(எந்)

சென்னெல் வயல்கள் சூழ்ந்த
சிறந்த தொண்டைமானாற்றில்
திகழும் பெருவிழாவில்
சேயுன் அடிபரவி
முன்னைநல் வினை கூட்ட
முந்தும் அடியவர்க்கே
முறையா யருளு முன்தன்
முகத்தை ஒருகால் பார்க்க
(எந்)

*-முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

திருமதி S. சிவக்கொழுந்து
(சிரேஷ்ட முகாமையாளர், நிதிப்பிரிவு ம.வ தலைமை அலுவலகம், கொழும்பு)
திருமதி புரந்தகி சுபதேவன்
(முகாமையாளர் மக்கள் வங்கி சுதுவெல்ல, கொழும்பு)
திருமதி எழில்மதி ஜெயநாதன்
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி தெமட்டகொட, கொழும்பு)
திருமதி சோபனா முகுந்தன்
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, நாரகென்பிட்டி)
திருமதி G. பாலமதி
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, செட்டித்தெரு, கொழும்பு)
திருமதி S. லோஜினி
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, வெள்ளவத்தை)
திருமதி S. சாஜிசுதா
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி வெள்ளவத்தை)
திருமதி T. நாராஜனி
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, வெள்ளவத்தை)
S. சிந்துவர்மன்
(உத்தியோகத்தர் மக்கள் வங்கி, வெள்ளவத்தை)
நா. உமாசங்கர்
(கயூரி வீடியோ விஷன், அச்சுவேலி)
நா. குகன்
(குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை)
பொ. பாலசிங்கம்
(பத்தமேனி, அச்சுவேலி)
இராசையா சற்குணதாஸ்
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
திருமதி ஸ்ரீனிவாசன்
(பழம்றோட், கந்தர்மடம்)
Dr R. பாக்கியநாதன்
(பொன்னையா வைத்தியசாலை, திருநெல்வேலி)
திருமதி சிவராஜா
(நல்நடத்தை உத்தியோகத்தர், கொழும்பு)
க.வ. இரவீந்திரநாதன்
(விஞ்ஞானபீடம், யாழ் பல்கலைக்கழகம்)
செல்வி சாவித்திரி செல்வரெத்தினம்
(யாழ்ப்பாணம்)
வீ. கிருஷ்ணராஜா
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. கனகசபாபதி
(சிவன் கோயிலடி, ஆவரங்கால்)

மா. குலநாதன்
(நாதன் கராஜ், ஆவரங்கால்)

க. பாலசுப்பிரமணியம்
(பதிவாளர், இமையாணன்)

ஐயாத்துரை முருகதாசன்
(யாழ். போதனா வைத்தியசாலை பரிசாரகர்)

செ. சிவராசா
(வாசிகசாலையடி, உடுப்பிட்டி)

S. தர்மபாலகிருஷ்ணன்
(தும்பளை பருத்தித்துறை)

த. நடேசன்
(உரும்பராய் தெற்கு, உரும்பராய்)

க. கிரிதரன்
(திரு இல்லம், கரவெட்டி)

வீரையா சிவஞானம்
(நவக்கிரிமேற்கு, புத்தூர்)

க.கு. கிருபாகரராசா
(பிரதானவீதி, ஆவரங்கால்)

இ. மனோகரன்
(மனோ லைற், கோப்பாய்)

சி. நந்தகுமார்
(வங்கி ஊழியர், உரும்பராய்)

ச. கனகராசா
(யாழ்ப்பாணம்)

சின்னத்தம்பி கிருஷ்ணானந்தன்
(உமாபதி தொலைத்தொடர்பகம், உரும்பராய்)

வ.க. சாம்பசிவம்
(வில்லூன்றி, யாழ்ப்பாணம்)

சி. அமிர்தசாகரன்
(அம்பாள் மோட்டோர்ஸ், ஆவரங்கால்)

தி. பாலசிங்கம்
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

சி. சுகிர்தலிங்கம்
(புலோலி கிழக்கு, பருத்தித்துறை)

T. இரவீந்திரதாஸ்
(சாமியன் அரசடி, கரவெட்டி)

சி. குமாரவேல்
(தலைவர், சுண்ணாகம் ப.நோ.கூ. சங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையாளர்
(ஏகாம்பரம் ரெக்ஸ், யாழ்ப்பாணம்)
க. ஞானச்சந்திரன்
(நாகலிங்கம்வீதி, கொக்குவில்)
ஐ. வேலாயுதர்
(வேல்வாசம், கோப்பாய்)
ஐ. நற்குணநாதன்
(உடுவில், சுண்ணாகம்)
தம்பு சற்குருநாதன்
(ஏழாலை மேற்கு, சுண்ணாகம்)
இரா. சிவலிங்கம்
(கேசரிவிலா, கரவெட்டி)
வே. சந்திரசேகரம்பிள்ளை
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
K. இராமச்சந்திரன்
(சங்கானை)
த. இராஜசிங்கம்
(நீர்வேலி)
ம. புலேந்திரன்
(கரணவாய், கரவெட்டி)
கி. தவராசா
(காந்தியூர், புலோலி)
V. கனகநாயகம்
(கனகேந்திரா தொலைத்தொடர்பு நிலையம், இணுவில்)
உரிமையாளர்
(அரவிந் போட்டோ, ஆனைப்பந்தி)
ஐ. சத்தியபாலன்
(பலாலி வீதி, உரும்பராய்)
க. இராஜேஸ்வரி
(சுண்ணாகம்)
செ. ஸ்ரீனிவாசன்
(அல்வாய்)
செல்வி சந்திரலிங்கம் மாதுமை
(இன்பர்சிட்டி, பருத்தித்துறை)
சுப்பிரமணியம் சுரேஸ்குமார்
(மயிலணி வீதி, சுண்ணாகம்)
க. கணேசதேவா
(மாதகல்)
அதிபர்
(தமிழ்க் கந்தையா வித்தியாலயம், கந்தரோடை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி. செல்வரெத்தினம் J.P
(அராலிமத்தி, வட்டுக்கோட்டை)
ஐ. குகேந்திரராணி
(ஐயனார் கோயிலடி, சுண்ணாகம்)
N. பாலசுப்பிரமணியம்
(நீர்வேலி வடக்கு)
ம. கந்தையா
(சிவன்கோவிலடி, சாவகச்சேரி)
க. மகேந்திரன்
(சங்கத்தானை, சாவகச்சேரி)
தங்கராசா கலாஜோதி
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
செல்வி பாலாம்பிகை கந்தசாமி
(கட்டைவேலி, கரவெட்டி)
A. தயாவதி
(வேம்படி, வல்வெட்டித்துறை)
S. தங்கேஸ்வரா
(காட்டுப்புலம்)
ம. சிவானந்தம்
(நாவலர் றோட், யாழ்ப்பாணம்)
எஸ்.ரி. குமரன்
(மல்லாகம்)
பொ. காசிலிங்கம்
(கொக்குவில்)
கா. செல்லத்துரை
(உடுவில், சுண்ணாகம்)
வீ. புஸ்பநாதன்
(உரும்பராய் வடக்கு)
சந்திரசேகரம் மகிந்தன்
(சிறுப்பிட்டி மேற்கு)
தர்சினி பகீரதன்
(உப தபாலதிபர், நீர்வேலி)
கு. குணரூபன்
(மீசாலை கிழக்கு)
வ. ஆறுமுகம்
(இளை. அதிபர், ஆவரங்கால்)
கி. வரதராசன்
(அச்சுவேலி தெற்கு)
அ. சந்திரகுமாரன்
(சந்திரகோட்டம், சுழிபுரம்)
வி. நாகம்மா
(பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடும் பணியே பணியாய் அருள்வாய்

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் –

இசை கேட்டால் புவி அசைந்தாடும் அது
இறைவன் அருளாகும்.

இசையின் இனிமையில் எல்லா உயிர்களும் மயங்கி மகிழ்ந்து இன்புறும். மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள எல்லா சுக துக்க நிகழ்ச்சிகளிலும் இசை இடம்பெறுகிறது. செடி கொடிகளும் இசையைக் கேட்டு மகிழ்ந்து தழைத்து வளர்கின்றன. நோயாளர்கள் பலர் மன அமைதியுற்று நோய் தீர்ப்பெறுகின்றனர். ஆழ்வார்கள், நாயன்மார்கள் இசைக் கலையின்மூலம் இனிய பாடல்களைப் பாடித் துதித்து இறைவன் அருளைப் பெற்றனர். கோவிலில் செய்யும் திருத்தொண்டுகள் எல்லாவற்றிலும் இன்னிசை பாடித் துதிப்பவர்களுக்கே இறைவன் எல்லையற்ற அருளைச் செய்கிறார்.

இறைவனை வழிபடும்போது கூட்டுப் பிரார்த்தனைமூலம் எல்லோரும் சேர்ந்து இறைவனைப் புகழ்ந்துபாடிப் பரவி போற்றிப் பணிவதே முதன்மை வாய்ந்தது. நாயன்மார்கள், அருளாளர்கள், முனிவர்கள் நமக்குக் காட்டிய வழியாகும். மக்களின் துன்பங்களைத் துடைப்பதற்கும், மன நிம்மதியை, சாந்தியை, சந்தோசத்தை அளிப்பதற்கும் இறை பக்தியே அருமருந்தாகும். இதற்கு கூட்டுப்பிரார்த்தனை சிறந்த பலன் தரும்.

நாம் பெற்ற அறிவும், ஞானமும் கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறுவதற்கேயாகும். அதற்கு இறைவன் புகழைப் பாடிப் பரவுதலே சிறந்த வழியாகும். நாயன்மார்களும், அடியார்களும் பாடிப் பணிந்தே முத்தியடைந்தார்கள். “வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே” என ஞானசம்பந்தரும், “உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்” என நாவுக்கரசரும், “நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே” என சுந்தரரும், “பாடவேண்டும் நான் போற்றி நின்னையே” என மணிவாசகரும், “நாராயணா! என்று சொல்லாத நா என்ன நாவோ” என ஆழ்வார்களும் இப்படியாக இறைவனைப் புகழ்ந்து போற்றிப் பாடி முத்தியின்பம் பெற்றார்கள்.

இறைவன் மாபெரும் இசைப்பிரியர். அர்ச்சனை பாட்டேயாகும். மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் மயங்கிய இறைவன் உலகம் உய்யவும், பக்தி பெருகவும் பாடப்பாட தனது திருக்கரத்தினாலே “பாவை பாடிய வாயால் கோவை பாடுக” எனக் கூறி எழுதி வைத்து இசையின் மகிமையையும், பக்தியின் பெருமையையும் எடுத்துக் காட்டியுள்ளார். இராவணன் சாம வேதத்தினை இசையுடன் பாடித் துதித்து சிவபெருமானால் மன்னிக்கப்பட்டு வாளும், தேரும், முக்கோடி வாழ்நாளும் பெற்றான்.

ஆனாயர் நாயனார் வேய்ங்குழலில் திருவைந்தெழுத்தை இசையினால் ஓதி இறையருள் பெற்றார். அவரது குழலிசையைக் கேட்டு, பசுக்கள் மேய்ந்த புல் வாயில் இருக்க அசையிட மறந்தன. கன்றுகள் பாலருந்த மறந்து நின்றன. ஆடும் மயிலினங்கள் அசைவற்று நின்றன. பாம்பும், மயிலும், அரியும், கரியும், மானும், புலியும் தம் பகைமை மறந்து ஒன்றி நின்றன. இசைகேட்டு உருகாத நெஞ்சம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று கிருஷ்ணாவதாரத்திலே பால கோபாலன் தனது வயதுச் சிறுவர்களுடன் யமுனை நதியோரம் விளையாடச் செல்வர். மாடுகளையும், புல்வெளிக்கு அழைத்துச் செல்வார். மதுரமான கானங்களைப் பாடுவார். பசுக்கள் மேய்வதைவிட்டு, கன்றுகள் பால்குடிப்பதைவிட்டு தெய்வீக நாதத்தைப் பருகும். புருஷோத்தமன் புல்லாங்குழல் ஊதி வேணு கானத்தால் உலகையே மயக்குவான். அவன் குழலூதும் சிறப்போ கொள்ளை அழகு. தேவர்கள், கந்தர்வர், அரம்பையர், தும்புரு, நாரதர், கின்னரர், தேவலோகத்துப் பெண்கள் எல்லாம் கண்ணனின் அமுத கீதத்தில் மயங்கினர். கோபிகைகள் எல்லாம் குழலோசை கேட்டதும் வீட்டையும், குடும்பத்தையும் துறந்து வந்து விடுவார்கள். பறவைகள் எல்லாம் கூட்டைவிட்டு, குஞ்சைவிட்டு விட்டு வந்துவிடும். பசுக்களோ கன்றுகளை மறந்து, செவி ஆட்டுவதை மறந்து குழலோசையில் மயங்கும். மான்கள் எல்லாம் மேய்வதைவிட்டு, மேய்ந்த புல்லும் கடைவாய் வழிசோர அசையாது எழுது சித்திரம்போல் நின்றுவிடும். கண்ணனின் தெய்வீக மதுர கான அமுத கீதத்தில் உலகமே மயங்கும்.

ஆண்டவனும் தனது பக்தர்களின் பாட்டுக்கு, அடியார்களின் தேனூறு சொல்லுக்கு வாயூறி நிற்கிறான். தானே அடியெடுத்துக் கொடுத்து அடியார்களைப் பாடும்படி அருள் செய்தார். சுந்தரரை "பித்தன்" என்று என்னை ஏசினாய். அதனால் "பித்தா" என்று பாடுக என்று தெய்வீகத் தமிழிசை கேட்டு இறைவன் மகிழ்கிறார்.

தில்லைச் சிதம்பரத்திலே நடராஜப் பெருமான் ஆனந்தத் திருநடனம் புரிந்தருள அவரது அடியார் சேந்தனார் கண்டு மகிழ்ந்தார். அவரின் அன்பின் உயர்ச்சியை பக்தர்களுக்குக் காட்டவேண்டுமென திருவுளம் கொண்டு மார்கழித் திருவாதிரைத் திருவிழாவின் தேர்த் திருவிழாவின்போது பெருமழை பொழியச் செய்து தம்முடைய திருத்தேரை சேற்றில் புதையச் செய்தார். தேர் அசையவில்லை.

"சேந்தா! தேர் ஓடப் பல்லாண்டு பாடுக" என்ற அசரீரி எல்லோரும் கேட்கும்படி விண்ணில் ஒலித்தது. அவர் தான் எப்படிப் பாடுவது என்று இறைவனை வேண்டி நிற்க "மன்னுக தில்லை" என எம்பெருமான் அடியெடுத்துக் கொடுத்தார். சேந்தனாரும் "மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள் வஞ்சகர் போயகல" எனும் திருப்பல்லாண்டுத் திருப்பதிகத்தைப் பாடியருளினார். உடனே திருத்தேர் அசைந்து ஓடி வீதி வலம் வந்தது. இந்த அற்புதத்தைக் கண்டோர் சேந்தனாரின் பக்தியை வியந்தனர்.

குலோத்துங்க சோழனின் வேண்டுகோளுக்கிணங்க பெரிய புராணத்தைப் பாடுவதற்கு சேக்கிழார் பெருமான் சிதம்பரம் போய் எம்பெருமான் அருள்வேண்டித் துதிக்க "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுக்க அதனையே தொடக்கமாகக் கொண்டு பெரியபுராணத்தைப் பாடி முடிக்க, தில்லையிலே அரசன் அரங்கேற்றினான்.

அம்பிகையின் அருள் பெற்றதனால் ஆடு மாடு மேய்க்கும் இடையனாக இருந்தவன் மகாகவி காளிதாசனாக மாறினான். அன்னையின் அருள்பெற்ற அபிராமிப் பட்டர் "அபிராமி அந்தாதி" பாடி தேவியின் கருணையால் அமாவாசைத் திதியைப் பால்பொழியும் பௌர்ணமியாக மாற்றியருளினார். மணிமணியான வாசகங்களைத் தந்த மாணிக்கவாசகர் முழுமுதற் கடவுளாகிய தில்லைக் கூத்தனை, தென்பாண்டி நாட்டானை, அல்லல் பிறவி அறுப்பானை, சொல்வதற்கு அரியானை அனைத்து உயிர்க்கும் தாயும் தந்தையுமானவனை நினைந்து, நினைந்து உருகி, உருகி, அழுது, அரற்றி தேனிலும் இனிய திருவாசகத்தைப் பாடித் தந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்து நைந்துருகி நெக்கு நெக்
காடவேண்டு நான் போற்றியம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
........................... என்றும்,

"நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை" என்றெல்லாம் பாடிப்பாடி இறைவனையடைந்தார்.

பக்தை மீரா பஜனை பாடிப்பாடியே கண்ணனோடு ஐக்கியமானாள். ஆண்டாள் நாச்சியார் மனதினால் சிந்தித்து, வாயினால் பாடி அரங்கனை அடைந்தாள். கேசவா, நாராயணா, மாதவா, கோவிந்தா, ஸ்ரீநிவாசா!

"நாள்தோறும் உன்னையே நான் பாடவேண்டும்
நான் பாட உன்தன் அருளாசி வேண்டும்"

அவனருளாலே அவன்தாள் வணங்கி என்பதற்கிணங்க அவனைப் புகழ்ந்து பாடிப் பணிவதற்கும் அவன் அருள் வேண்டும்.

பகவான் சத்திய சாயிபாபா; பஜன் மனதிற்கு. போஜன் உடலுக்கு. ஒவ்வொரு நிமிடமும் பஜனாக இருக்கட்டும். பஜன் என்பது உனது மூச்சுக் காற்றுப் போன்று பிரதானமானது. தேவையற்ற பேச்சுக்களை நிறுத்தி, பஜனில் முழுமனதுடன் ஈடுபடுங்கள். உங்கள் கையில் உள்ள தீபம் எப்படி இருளில் நீங்கள் நடக்கும்போது வழிகாட்டுமோ, அதேபோல் உங்கள் நாவில் தெய்வத்தின் நாமங்களை உச்சரித்தால் அது உங்கள் வாழ்க்கைப் பாதையில் அறியாமை எனும் இருளில் விளக்காக வழிகாட்ட உதவி புரியும் என்கிறார்.

அருணகிரிநாதர் முருகன் அருளால் பதினாராயிரம் திருப்புகழைப் பாடியவர்.

"ஆடும் பரிவேல் அணி சேவலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கஜமா முகனைச் செருவில்
சாடும் தனியானை சகோதரனே"

என முருகனிடம் பாடும் பணியே பணியாய் அருளும்படி வேண்டுகிறார். எத்தனை அருளாளர்களும், நாயன்மார்களும் நாம் பாடிப் பரமனடி சேரவேண்டுமென்பதற்காக திருமுறைகள், அருட்பாக்கள் எல்லாம் பாடித் தந்துள்ளார்கள். நாம் அவற்றையெல்லாம் பொருளுணர்ந்து, பாடிப் பணிந்து பிறவியெடுத்ததன் பயனைப் பெறவேண்டும். பணம், பதவி முக்கியமல்ல. பகவானுக்கு உண்மையான பக்தியே முக்கியம். பக்தி பண்ணினால் முக்தி பெறலாம்.

பக்திக்கு எளிமையான, சுலபமான, இனிமையான சாதனம் நாமசங்கீர்த்தனம். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவாரைத்தான் இறைவன் விரும்புவார்.

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே

பாடும் பணியே எம் பணி. முருகா! உனைப் பாடும் பணி ஒன்றே போதும் அருள்வாயாக!

*உண்மையான வள்ளல் எவனோ, அவனே உண்மையான அரசன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போற்றித் திருவகவல்

(தொடர்ச்சி...

## சகத்திநுற்பத்தி

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## நிலைமண்டிலவாசிரியப்பா

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே யமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
உறவே போற்றி யுயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி
இலங்கு சுடரெம் மீசா போற்றி



**பதவுரை:-**

களம் கொள கருத அருளாய் போற்றி- அடியேன் ஒரு நிலையான இடத்தைப் பெறவும் நின்னையே கருதவும் அருள் செய்வாயாக நினக்கு வணக்கம்; இங்கு அஞ்சேல் என்று அருளாய் போற்றி- இவ்வுலகத்தில் அஞ்சற்க என்று அருள் செய்வாயாக நினக்கு வணக்கம்; நஞ்சே அமுதமாய் நயந்தாய் போற்றி- பாற்கடலிற் றோன்றிய நஞ்சினை அமுதமாக விரும்பி உண்டவனே நினக்கு வணக்கம்; அத்தா போற்றி- தந்தையே நினக்கு வணக்கம்; ஐயா போற்றி- வழிபாட்டிற்கு உரியவனே நினக்கு வணக்கம்; நித்தா போற்றி- என்றுமுள்ளவனே நினக்கு வணக்கம்; நிமலா போற்றி- மலமில்லாதவனே நினக்கு வணக்கம்; பத்தா போற்றி- என் உயிர் நாயகனே நினக்கு வணக்கம்; பவனே போற்றி- எவ்வுயிர்களுக்கும் பிறப்பிடமானவனே நினக்கு வணக்கம்; பெரியாய் போற்றி- பெரியவற்றிற்கெல்லாம் பெரியவனே நினக்கு வணக்கம்; பிரானே போற்றி- எப்பொருட்கும் தலைவனே நினக்கு வணக்கம்; அரியாய் போற்றி- யாவராயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பரன்றி அறிதற்கரியவனே நினக்கு வணக்கம்; அமலா போற்றி- இயல்பாகவே பாசங்களினீங்கினவனே நினக்கு வணக்கம்; மறையோர் கோல நெறியே போற்றி- அந்தணர் வடிவுகொண்டு எழுந்தருளிவந்து பொய்தீர் ஒழுக்க நெறியினை அருளினவனே நினக்கு வணக்கம்; முதல்வா முறையோ தரியேன் போற்றி- முதல்வனே நின்னைப் பிரிந்தமை முறையாகுமோ? அப்பிரிவை யான் ஆற்றமாட்டேன்; ஆற்றுமாறு அருளுதி, நினக்கு வணக்கம்; உறவே போற்றி- எனக்கு உயிர்ச் சுற்றமானவனே நினக்கு வணக்கம்; உயிரே போற்றி- என் உயிருக்கு உயிரே நினக்கு வணக்கம்; சிறவே போற்றி- சிறப்புடைப் பொருளே நினக்கு வணக்கம்; சிவமே போற்றி- மங்களப் பொருளே நினக்கு வணக்கம்; மஞ்சா போற்றி- எல்லாம் வல்லவனே நினக்கு வணக்கம்; மணாளா போற்றி- நாயகனே நினக்கு வணக்கம்; பஞ்சு ஏர் அடியாள் பங்கா போற்றி- செம்பஞ்சு ஊட்டிய அழகிய திருவடிகளையுடைய உமையம்மையை இடப்பாகத்திலுடையவனே நினக்கு வணக்கம்; நாயேன் அடியேன் அலந்தேன் போற்றி- கீழ்மையுடைய அடியேன் நின்னைப் பிரிந்து துன்பமுற்றேன்; அத்துன்பத்தை நீக்கி அருள்புரிய வேண்டும்; நினக்கு வணக்கம்; இலங்கு சுடர் எம் ஈசா போற்றி- விளங்காநின்ற ஒளியினையுடைய எம்மை உடையவனே நினக்கு வணக்கம்.

களம்கொள என்றது சீவன்முத்த நிலையை அடைய என்றவாறு. வீடுபேற்றினை அடைய எனினுமாம். சீவன் முத்தநிலையை அடைந்தவரே இடைவிடாத தியானப்பனாகிய சிவானுபவத்தைப் பெறுவர். இந்நிலையினைப் பெறவும் தியானித்து அனுபவிக்கவும் அருள் செய்ய வேண்டும் என்பார். "களங்கொளக் கருத அருளாய்" என்றார்.

இங்கு என்றது இவ்வுலக வாதனைகளை. மலம் நீங்கப் பெற்றவர்களும் இவ்வுலகில் உறுங்கால் வாசனாமலத்தால் தாக்குண்டு வருந்துவர். ஆதலின் "அஞ்சே லென்றருளாய்" என்றார்.

"மலமகல் பவரும் புவிமீதே மானிட வடிவந் தனையெய்திச்
சிலபக லெனினும் பயில்காலைச் சேர்தரு மலவா தனையென்றே" எனவும்

திருவாத திருவெம் 25

"அஞ்சே லென்றருளவேண்டு மாவடு துறையுளானே"

நாவு 5:17

என வருவன காண்க.

நஞ்சு என்றது பாற்கடலின்கண் எழுந்த நஞ்சை. இறைவன் அதனை விரும்பி உண்டமையின் "நஞ்சே அமுதாய் நயந்தாய்" என்றார். "நஞ்சமுதா வருந்தினனே" (நீத் 18) "வானவர் தொழத் துற்பெரிய நஞ்சமுதமாகமு னயுன்றவர்" (தே.ஞான 336:2) "நஞ்சம் ஆரமுதாக நயந்து கொண்டு" (தே. நாவ 186:5) என வருவன காண்க. நஞ்சை அமுதமாக நயந்தமை இறைவனது பேரருட்டன்மையைக் காட்டுவதாகும். "உண்பரிய நஞ்சதனை யுண்டுலகமுய்ய வருளுத்தமன்" (ஞான 335:7) "விடமுண்டு அருள்செய் சடையன்" (சுந் 93:7) எனத் தேவாரத்தும் வருவன காண்க.

"செற்றால முயிரனைத்தும் உண்டிடவே நிமிர்ந்தெழலுஞ்
சிந்தை மேற்கொள், பற்றாலங் கதுநுகர்ந்து நான்முகனே
முதலோர்தம் பாவை மார்கள், பொற்றாலி தனையளித்தோன்"

(குற்றாலப் 1)

எனக் கந்தபுராணமும் இதனை வலியுறுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதாக என்பது அமுதா எனக் குறைந்து நின்றது. நயத்தல்- விரும்புதல். "புலம்பிரிந் துறையுஞ் செலவுநீ நயந்தனை யாயின்" (முருக 63-4) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அத்தா- தந்தையே. ஐயன்- வழிபாட்டிற்குரியவன்.

நித்தன்- என்றுமுள்ளவன். "என்றும் ஒருபடித்தாயிருப்போன்" ஞானமிர் 55:16 பழையவுரை. "நித்தனே அடையார் புரமெரித்த சிலையனே" (செத்3) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க.

நிமலா போற்றி- மலமற்றவனே நினக்கு வணக்கம்; "நிமலா போற்றியென்று நின்றேத்த, இரக்கம் புரிந்தார்" என ஆளுடைய பிள்ளையார் அருளியமையுங் காண்க. (தே.ஞான 70:8)

பத்தா என்பது பர்த்தா என்னும் வடசொற்றிரிபு துலைவன்; கணவன் என்பது பொருள். "பாத்தா துணைவன் றலைவன் மணவாளன் றன் பெயர்" என்பது பிங்கலந்தை (5:191) இறைவனைப் பத்தா என்றல் "பத்தா பத்தர்களுக்கருள் செய்யும் பரம்பரனே" பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா" என்னும் சுந்தரர் தேவாரத்தும் (25-3; 52:1) காண்க.

பவன்- எல்லா உலகங்களும் உயிர்களும் தோன்றுதற்கு இடமானவன். பவம்- தோற்றம்; பிறப்பு. "பவத்திற மறுகெனப் பாவை நோற்றனளென்" (மணி 30:264) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. தோற்றுதற் இடமானவன் எனினும் தோற்றுதற்கு நிமித்த காரணன் என்பது பொருள். "பவனெம்பிரான் பனிமாமதிக்கண்ணி" (சத9) என அடிகள் பிறாண்டு கூறுதலுங் காண்க. "நமோ பவாயருத்ராயச நம; என எசுர் வேதத்திடையிலுள்ள சதருத்ரீயத்தில் வருதலும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது.

பிரான்- எப்பொருட்குமிறைவன். "தலைவன் மன்னவன் பிரானே கொழுநன்... உரைசெ யெட்பொருட்கும் இறைவன் மேற்றே" என்பது திவாகரம்.

அரியாய் என்றார் இறைவன் அன்பரல்லார்க்குக் காண்டற் கரியனாதலின், "யாவராயினு மன்பரன்றி யறியொணா மலர்ச் சோதியான்" (சென்னிப்1) "யாவரு மறிவரியா யெமக்கெளியாய்" (பள்ளி3) "தன்னை யாவரும் அறிவதற் கரியவன் எளியவன் அடியார்க்கு" (அதிசய3) என வருவன காண்க.

அமலன்- மலமற்றவன். "நிருமலனாயிருப்போன்" ஞானாமிர் 55:8 பழையவுரை. அ, எதிர்மறைப் பொருளுணர்த்தியது. "அலைசேர் புனலன் அனலன் அமலன்" (ஞான 158:6) "அண்ட முதல்வன் அமலன்" (சுந் 94:2) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

மறையோர் கோலநெறியென்றது இறைவன் அந்தணப் பரமாசாரியனாய் எழுந்தருளிவந்து உபதேசித்த பொய்தீ ரொழுக்க நெறியினை "மறையோர் கோலங் காட்டி யருளலும்" எனத் திருவண்டப் பகுதியில் (140) வந்தமையுங் காண்க. கோலம்- வடிவு. "மாலுங்காட்டி வழிகாட்டி வாராவுலக நெறியேறக் கோலங்காட்டி யாண்டானை" (ஆனந்த3) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

முறையோ தரியேன் முதல்வா என்பதனை முதல்வா முறையோ தரியேன் என மாற்றிக்கூட்டி முதல்வனே நீ என்னைப் பிரிந்தமை முறையாகுமோ? அப்பிரிவினை யான் ஆற்றமாட்டேன். ஆற்றுமாறு அருளுதி எனப் பொருள் கொள்க. ஆற்றுமாறு அருளுதி என்பது அவாய்நிலையான் வருவிக்கப்பட்டது.

"அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கெழுந் தருளி இங்கெனை
இருத்தினாய் முறையோ" சத 93.

வலுவான காரணங்கள் வலுவான செயல்களை உருவாக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முத்தனை யானே மணியனை யானே
முதல்வனே முறையோவென்
றெத்தனை யானும் யான்றொடர்ந் துன்னை
இனிப்பிரிந் தாற்றேனே"

எண்ணப் 4.

என வருவன காண்க.

உறவே- சுற்றமே. "உருவே யென்னுறவே" (நாவு 261:1) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. உயிரே- உயிர்க்குயிரே. "உலகுக்குயிரானாய்" (பள்ளி 9) "எல்லா உயிரகட்கும் உயிரே" (கோயிற் 4) என அடிகளும், "உரைசேரு மெண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேத, நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க் குயிரா யங்கங்கே நின்றான்" (132:4) என ஆளுடைய பிள்ளையாரும் அருளியமை காண்க.

சிறவு- சிறப்பு. "சிறவே செய்து வழிவந்து சிவனே நின்தாள் சேர்ந்தாரே" எனத் திருச்சதகத்து (86) வருதலுங் காண்க. இறைவனின் மிக்க சிறப்புடைய பொருள் பிறிதின்மையின் "சிறவே" என்றார். "சிறப்பென்னும் செம்பொருள்" எனத் திருவள்ளுவரும் அருளியமை காண்க.

சிவம்- செம்பொருள். "செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே செல்வமே சிவபெருமானே" (பிடித்த1) என அடிகள் அருளியமையுங் காண்க.

மஞ்சன் என்பது மைந்தன் என்பதன் மரூஉ. மைந்தன்- வலியோன். மைந்து- வலி. "மைந்து பொருளாக வந்த வேந்தனை" (தொல். புறத்) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. இறைவன் சர்வவல்லமையுடையனாதலின் "மஞ்சா" என்றார். "மஞ்சனே மணியு மானாய் மரகதத் திரளுமானாய்" (நாவு 57:1) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. மஞ்சனே போற்றி என்பதற்கு "அழகனே வணக்கம்" என்றும், "மழையே போற்றி" என்றும் உரைப்பாருமுளர்.

மணாளா போற்றி- மணவாளனே போற்றி. "வள்ளலே போற்றி மணாளா போற்றி" (246:8) என அப்பரடிகள் அருளியமையுங் காண்க. மணாளா என்பதற்கு உமையம்மையின் மணாளா எனவும் உரைக்கலாம். "மலையான் மடந்தை மணவாளா போற்றி" (நாவு 246:3) எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

பஞ்சேர் அடியாள் என்றது உமையம்மையை. பஞ்சு என்றது செம்பஞ்சுக் குழம்பை. "பஞ்சுதோய் மெல்லடிப் பாவையாளொடும்" (ஞான 274:6) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. ஏர்- அழகு. "ஏரணி யணியி னிளையரு மினியரும்" என்னும் பரிபாடலினும் (6:27) இப்பொருட்டாதல் காண்க. "பஞ்சேர் அடியாள் பங்கா" என்றார் இறைவன் உமையம்மையை ஒரு கூற்றிலுடைமையின், "பஞ்சுலாவிய மெல்லடிப் பார்ப்பதி பாகனை" (தே. 241:9) என ஆளுடைய பிள்ளையாரும், "பஞ்சுண்ட மெல்லடியாள் பங்கன் றன்னை" (தே. 288:2) என ஆளுடையயரசும் அருளியமை காண்க.

அலந்தேன் நாயேன் அடியேன் என்பதனை, நாயேன் அடியேன் அலந்தேன் என மாற்றிக் கூட்டிப் பொருளுரைக்க. நாயேன் அடியேன்- கீழ்மையையுடைய அடியேன். "நாயடியேன்" (சத 13,16 கண்ட 3) "நாயடியேற்கு" (ஊசல்1) எனப் பிறாண்டும் அடிகள் அருளியமை காண்க. அலந்தேன்- நின்னைப் பிரிந்து துன்பமுற்றேன்; அத்துன்பத்தை நீக்க அருள் செய்ய வேண்டும் எனச் சில சொற்கள் அவாய் நிலையான் வருவித்துரைக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முறையோ தரியேன் முதல்வா போற்றி" (போற் 180) என்ற இடத்துப் பொருளை ஈண்டும் கூறியது ஆற்றாமை மிகுதிபற்றியதாகலின் புனருத்தியாகாது. அலத்தல்- துன்புறுத்தல். "அலப்பென் றோழியவ ரகன்ற ஞான்றே" (குறுந்41) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

இலங்குசுடர் ஈசா- விளங்கா நின்ற ஒளியையுடைய ஈசா. "தோற்றச் சுடரொளியாய்" (சிவபுரா 80) "தூயமேனிச் சுடர் விடு சோதி" (கீரத் 112) "விரிந்தே யெரியுஞ் சுடரனையாய்" (நீத் 38) "தூண்டா விளக்கின் சுடரனையாய்" (பிரார்த் 4) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க. இலங்குதல்- விளங்குதல். "இலங்குவெள் ளருவியொடு" (மதுரைக் 299) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

(தொடரும்...

## ஞாலத்தில் உள்ளொளி வீசும் "ஞானச்சுடர்"

2015 மாசி 206ஆம் ஞானச்சுடர் இதழில் ஸ்கந்தவேல் (வேல்ஸ் முருகன் ஆலயம்) பற்றிய ஒரு கட்டுரை வந்தது. இதில் ஒரு சிறப்பு என்னவெனில் இலங்கையைச் சேர்ந்த சிங்களச் சகோதர தம்பதியர்கட்கு ஆண் மகனாகப் பிறந்த ஒருவருக்கு சுப்பிரமணியன் எனப் பெயர் சூட்டி, கதிரமலைக் கந்தன் வேல்ஸ் நகருக்கு அனுப்பி அங்கே உள்ள மலை உச்சியில் "ஸ்கந்தவேல்" கோயில் கட்டச் செய்தது. அத்துடன் காளி கோவிலும், ஸ்ரீ ரங்கநாத சுவாமி கோவிலும் அமைக்கப்பெற்று சிறப்புடன் திகழ்கின்றது. அத்தோடு அவரை "குருஜி சுப்பிரமணியர்" என்றே அழைத்தனர். இவர் தனது 76ஆவது வயதில் காலமாகி விட்டார்.

இதன் பின்னர் ஆங்கிலச் சகோதரர்கள் சைவ முறைப்படியும், ஆங்கில கலாச்சாரப்படியும் பூஜை வழிபாடுகள் நடாத்தி வருகின்றனர். கடும் குளிரிலும் காலை ஐந்து மணிக்கு முருகனுக்கும் அதன்பின் காளிக்கும், ஸ்ரீ ரங்கநாத சுவாமிக்கும் பூஜை வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றது. இங்கு இன்னுமொரு சிறப்பு என்னவெனில் ஆங்கில சகோதரர்கள், அடியார்கள் கொடுக்கும் சமையல் பொருட்களைச் சமைத்து அன்னதானம் வழங்குகின்றார்கள்.

இதனை நேரில் சென்று தரிசனம் பெற்ற வல்வையூர் அப்பாண்ணா அவர்கள் தான்பெற்ற ஆனந்தத்தை மற்றவர்களுக்கும் பகிர்ந்திருக்கின்றார்.

இப்படியான கோயில்கள் உலகெங்கும் நிறையக் காணப்படுகின்றது. அதற்கு இக்கோவில் நல்லோர் உதாரணம். இங்கெல்லாம் நாமெல்லோரும் நேரில் சென்று தரிசனம் பெறமுடியாது போனாலும் ஞானச்சுடர் எம்மை அழைத்துச் செல்வது பாராட்டுக்குரியது.

இதுபோன்று ஏனைய கோவில்களையும் தேடி அறிந்து எமக்குத் தருவதற்கு ஞானச்சுடர் ஆக்கபூர்வமான செயற்பாட்டை எடுக்க செல்லச்சன்னிதி அன்னதானக் கந்தன் அருள் பாலிப்பதோடு இது வெற்றிபெற எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*-திரு க. நல்லையா-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கமும் பணிவும்

– ஜீவிதா பீயசேன அவர்கள் –

மனிதன் மனிதனாக வாழவேண்டும். வாழும் போதே பல விழுமியங்களைக் கடைப்பிடித்து வாழவேண்டும் என்பது ஆன்றோரும் சான்றோரும் சரித்திரங்களில் கூறிய புத்திமதி. ஆக மனிதனை மனிதம் நிறைந்தவனாக வாழ வைக்கும் பல விழுமியங்களுள் நான் தங்கள் முன்னிலையில் பகர வந்த விடயம் “அடக்கமும் பணிவும்” என்பதாகும்.

மனிதனுடைய நற்குணங்களில் நன் சிறந்து விளங்குவது அடக்கமாகும். பணிவு என்கின்ற பதமும் அடக்கம் எனும் பண்பினையே ஈடுசெய்கிறது. அடக்கம் உடைய ஒருவராலேயே பணிவுடன் நடந்துகொள்ள முடியும். ஒருவரிடத்தில் கல்வி, கேள்வி, செல்வம், பட்டம், பதவி, குலம் முதலிய பல இருப்பினும் அவரிடத்தே அடக்கம் எனும் பண்பில்லையானால் அவை சிறப்படையாது. ஒரு குழம்பில் புளி, மிளகு, காயம், காரம் என்பன பல இருப்பினும் உப்பு என்ற ஒன்று இல்லை என்றால் அது உண்பதற்கு உகந்தது ஆகாது. உணவுக்கு உப்பு எவ்வளவு இன்றியமையாததோ அதுபோல் எமது நல் வாழ்விற்கு அடக்கமும் பணிவும் உறுதியானவை.

பகட்டும் பதவியும் இருந்தாலும்
பணிவுக் கவையும் ஈடாமோ?
அடக்கமற்ற மானிடர் தம்
அறிவால் ஏதும் பயனுண்டோ?

நோக்கவேண்டியதொன்று.

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” என வள்ளுவனைப் பாரதி புகழ்ந்தது வாய்த்த பெரும் பேறே. வள்ளுவர் தமது சுருங்கிய நூலில் அடக்கமாகிய பணிவிற்குப் பணிந்து அடக்கமுடைமை எனும் அதிகாரத்தினை அமைத்து அதில் பத்து குறட்பாக்களைப் பாடியிருப்பது பலர் போற்றும் பண்பாக மனதில் அமைய வேண்டும் என்னும் நோக்கம் கருதியே ஆகும்.

வள்ளுவனார் தமது நோக்கில் அடக்கமுடைமை மனிதனுக்கு சிறந்த ஆயுதம் என்பதனை,

“நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது”

எனக் கூறி தனது நிலையிலிருந்து திரிந்து போகாமல் அடங்கியிருப்பவனது தோற்றமானது மலையைக் காட்டிலும் மிகப் பெரிதான உயர்வு உள்ளதாகும் என விளக்கம் தருகிறார்.

அத்தோடு, “எல்லோர்க்கும் நன்றாம் பணிதல்” என வேண்டுகோள் விடுக்கின்றார். பணிவு எனும் இந்த அரிய குணம் அனேகமானவர்களுக்கு அமைவதில்லை. பணிவுடையவர்கள் தமது வாழ்வில் சிறப்படைவார்கள் என்பது திண்ணமாகும்.

*முகம் மனதின் ஓவியம், கண்கள் தூதுவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர் இறைக்கும் ஏற்றம் பணிவதனால்த்தான் கிணற்றிலுள்ள நீரை முகர்கின்றது. அங்ஙனம் பெரியோரிடம் பணிந்தால் அவர்களிடம் தேங்கிக் கிடக்கும் அறிவினை நாம் முகர்ந்து கொள்ளலாம்.

பணிவதனால் ஒன்றும் நமக்கு இழிவு வந்துவிடாது. அது நமது பெருமையைப் புலப்படுத்தும். துலாக் கோலில் தாழ்ந்த தட்டுக்குத் தானே பெருமை. காய்த்துப் பழுத்துப் பயனுடைய மரக்கிளை எப்போதும் தாழ்ந்து இருக்கும். காய் கனி இல்லாத மரக்கிளை உயர்ந்து நிற்கும். இதில் எதற்குப் பெருமை தாழ்ந்த கிளைக்கா? உயர்ந்த கிளைக்கா? ...... உன்னிப் பாருங்கள். எல்லோர்க்கும் நன்றாம் "பணிதல்" என்பது இதனையே எடுத்துரைக்கின்றது.

ஒருவருக்கு கல்வி அறிவுமூலம் பெறப்படும் பெருமையே உண்மையான பெருமையாகும். நாலடியார் என்னும் நன்னூலும் கல்வி அழகே அழகு என்றுரைத்துள்ளமை இதனையே வலியுறுத்துகின்றது.

பணிவற்றோர் செருக்குடன் நடப்பார். பிறர் தம்மை மதிக்க வேண்டும் என்பதற்காக தேவையற்ற விடயங்களில் தலையிட்டு தம் அறிவீனத்தை இனங்காட்டிக் கொள்வர். "மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும்" என்பது பழமொழி. மென்மையான விடயங்களை அணுகி ஆராய்வதும் பகைவனை நண்பனாகக் கருதும் உயர் பண்பும் பணிவுடையோர்க்கே உண்டு.

உலக வரலாற்றை உற்றுநோக்குவோமாயின் பெருந்தன்மை மிக்கவர்களும், பணிவுடையவர்களும் மக்கள் தலைவர்களாக நீண்டகாலம் மாண்பு பெற்றிருப்பதைக் காணமுடியும்.

அந்தவகையில் மகாத்மா காந்தியடிகள், ஆபிரகாம் லிங்கன், அன்னை தெரேசா அம்மையார் போன்றோர் இதற்கு ஏற்ற எடுத்துக்காட்டுக்களாவர். இவர்களிடத்தே அன்பும், பணிவும், அடக்கமும், அமைதியும் என்றும் நிலைத்திருக்கும்.

ஆகவே அறிவுடைய சான்றோர்கள் அரசியற் தலைவர்கள், சமூகத் தொண்டர்கள், சரித்திர நாயகர்கள் அனைவருக்கும் பணிவே ஏற்ற அணிகலன்களாகும் என்பது புரிகிறது. இதனை,

பணிவே நல்ல பண்பதுவாம் - நாம்
அணியும் சிறந்த அணிகலனாம்
பாரினில் உயர்ந்த மனிதரெல்லாம்
பணிவே தமது துணை கொண்டார் எனக் கூறலாம்.

பணிவுடன் வாழ்வோரே உண்மையான மனித வாழ்வு வாழ்பவர்கள். வாழ்வாங்கு வாழும் முறையும் அதுவேயாகும். அதனால்த்தான் "பணியுமாம் என்றும் பெருமை" எனக் கூறினார் வள்ளுவர். இதன் உண்மையை உணர்த்துவோம் பணிவுடன் வாழ முற்படுவோம்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்"

வள்ளுவன் வாய்மறை வையமெலாம் பரவட்டும்
அடக்கமும் பணிவும் அகிலத்தில் நிலைக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி...

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி





– வாரியார் சுவாமிகள் –

50. மதிகெட் டறவாடி மயங்கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத்திர ஞான சுகாதிபவத்
திதிபுத்திரர் வீறடு சேவகனே.

## பதவுரை

நதி புத்திர- கங்காநதியின் திருக் குமாரரே! ஞான சுக அதிப- மெய்யறிவுக்கும் அதனால் விளையும் பேரின்பத்துக்கும் தலைவரே! அ திதி புத்திரர்- அந்தத் திதி புதல்வராகிய அசுரர்களின், வீறு அடு சேவகனே- வலிமையை அழித்த வீர மூர்த்தியே! மதி கெட்டு- அறிவு குலைந்து, அற வாடி- மிகவும் வாட்டமுற்று, மயங்கி- மயக்கமுற்று, அற கதி கெட்டு- அற நெறியால் வரும் உமது திருவடி அநுபூதியை யிழந்து, அவமே கெடவோ கடவேன்- வீணாகக் கெட்டொழிந்து விடவோ உரியவன். (அவ்வாறு கெடமாட்டேன் காத்தருள்)

## பொழிப்புரை

கங்காநதியின் திருக்குமாரரே! மெய்ஞ்ஞானத்தினால் விளையும் பேரின்பத்துக்குத் தலைவரே! அந்தத் திதியின் புதல்வர்களாகிய அசுரர்களின் வலிமையை அழித்த வீரமூர்த்தியே! அறிவு கெட்டு மிகவும் வாடி மயக்கமுற்று, அறநெறியால் வரும் உமது திருவடி அநுபூதியையிழந்து வீணாகக் கெட்டொழியலாமோ? அவ்வாறு கெடாது அருள் புரிவீராக.

## விரிவுரை

**மதிகெட்டற வாடி:-**

அறிவு என்ற ஒன்றினாலேயே உயர்வு கிடைக்கின்றது.

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். -திருக்குறள்.

இன்பம் அறிவினால் உண்டாகும். துன்பம் அறியாமையால் உண்டாகும். அறிவை வளர்த்தால் துன்பம் தேயும், அறியாமையை வளர்த்தால் இன்பம் தேயும். விதியை மதியால் வெல்லலாம்.

"மற்றது வினையின் வந்ததாயினும் மாற்றலாற்றும்
பெற்றியர்" -கம்பராமாயணம்.

ஒரு விவசாயி பயிரிடும் இடத்தில் ஒரு வேதாளம் இருந்தது. அவன் அறுவடை செய்யும்போது அந்த வேதாளம் எதிர்ப்பட்டு, "மூடனே! என்னிடத்தில் வந்து கதிரறுக்கின்றனையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டொன்றுக்கு இரண்டுபடி நெல்தான் கிடைக்கும்" என்று சபித்தது.

விவசாயி வருந்தினான். அறிவு அவனுக்குத் துணைசெய்தது. ஆட்களை விட்டு நெல் தாள்களை அறுத்தான். இரண்டிரண்டு தாள்களை ஒவ்வொரு கட்டாகக் கட்டுமாறு செய்தான். ஒரு தாளுக்கு ஒருபடி நெல் கிடைத்தது. ஒரு கட்டுக்கு இருபடி நெல் என்ற விதியை மதியால் வென்றான். எனவே மனிதனை உயர்த்துவது சிறந்த மதியேயாகும். மதியிழந்து அதனால் மிகவும் வாடி வருந்துதல் கூடாது என்கின்றார்.

**அறக் கதி கெட்டவமே கெடவோ கடவேன்:-**

கதி என்ற சொல் வழி என்றும், முத்திநிலையென்றும் பொருள்படும். அறநெறி நிற்பார்க்குச் சிவகதி கைகூடும்.

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி இட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில் சிவகதி விளையு மன்றே

-அப்பர்.

பயன் கருதாது நல்ல அறங்களைக் கடமையுணர்வுடன் புரிவார் சிவத்துடன் ஒன்றுபடும் அநுபூதி நிலை பெறுவார்.

"அவ்வாறு பெறாது வீணே அழியலாமோ?" என்று அடிகளார் வேண்டுகின்றார்.

**நதிபுத்திர:-**

நதி கீழ்நோக்குந் தன்மையது. மேலிருந்து கீழ் நோக்கி ஓடிவரும். அதுபோல முருகவேள் தமது சொரூப நிலையிலிருந்து தடஸ்த நிலைக்கு வந்து பாவப் படுகுழியில் உள்ள ஆன்மாக்களைக் காக்கும் பொருட்டு இறங்கி வருகின்றார் என்ற குறிப்பையும் உணர்க.

**ஞான சுகாதிப:-**

ஞானத்தால் வரும் சுகத்திற்கு அதிபன்.

தேவர்களைச் சூரபன்மன் இட்ட சிறையிலிருந்து மீட்டு ஆட்கொண்டதுபோல், அடியார்களை ஆணவச் சிறையிலிருந்து மீட்டு ஞான சுகத்தை வழங்கும் தலைவன் என்று குறிப்பிடும் பொருட்டு "ஞான சுகாதிப" என்றார்.

**அத் திதி புத்திரர் வீறடு சேவகனே:-**

காசிபருடைய பதின்மூன்று மனைவியருள், அதிதியின் மக்கள் ஆதித்யாதி அமரர்கள். திதியின் மக்கள் தைத்தியர்கள்- அசுரர்கள். அவர்களின் வீறு- செருக்கினை அழித்த வீரமூர்த்தி முருகன்.

**கருத்துரை**

ஞான சுகாதிபனே! அறிவிழந்து அடியேன் அலையலாமோ? திருவடியநுபூதியைத் தந்தருள்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனி பார்வையில் சிவன்

– செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் –

கீழ்வானம் சிவக்கிறது. மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்க ஆதவன் பொற் கிரணங்களைப் பரப்பியவண்ணம் மேலெழுகின்றான்.

வெள்ளியை உருக்கி வார்த்தாற்போல் தெரிகிறது அந்த உயர்ந்தமலை. அதுதான் பனியால் மூடப்பட்ட கைலாயமலை. திருமால், பிரமன், இந்திரன் முதலாய முக்கோடி தேவர்கள், முனிவர்கள், கந்தருவர், கின்னரர், கிம்புருடர், நவக்கிரக நாயகர்கள் சூழ இருக்கிறார்கள். முரசம், சங்கம், தேவதுந்துபி முழங்க இடபவாகனராக எழுந்தருளியிருக்கிறார் சிவபெருமான். அவர் யாவரையும் யாவற்றையும் இயங்க வைப்பவர். முத்தொழில்களில் படைத்தல் காத்தல் இரண்டும் நடந்துகொண்டிருக்கின்றன. உருத்திரன் அழித்தல் தொழிலைச் செய்ய பூமிக்கு இறங்கவேண்டுமே. ஒரு தடை. அது என்ன?

நவக்கிரக நாயகர்களும் வேலையைத் தொடங்கி விட்டார்கள். நவக்கிரகங்களில் வியாழனும் சனியும் பலம் பெற்றவர்கள். வியாழ பகவான், சனிபகவான் என்ற பதம் இருப்பினும் சனிக்கு மட்டும் ஈஸ்வரன் என்ற பதம் மேலாக உண்டு. (சனிபகவான் சனீஸ்வரன்) சனீஸ்வரனுக்கு ஒரு கால் முடம். அதனால் அவன் மந்த நடையுடையவன். மந்தன் காக வாகனன், காரி முடவன் என்ற பெயர்களுமுண்டு. சிவன் பிறவித்துயர் களைவதற்காக துன்பங்களை ஆன்மா அநுபவிக்கவிட்டு துயர் களைபவர். மந்தகதியுடைய சனீஸ்வரன் மெல்லச் சென்று துன்பம் தருபவர். (ஊழ்வினை மெல்ல நுழையும்) சங்கடம் தருபவர். வாழ்வுக்கும் மரணத்திற்கும் காரகன். சனியின் பார்வையால் வறுமை, நோய்பிணி, அவமரியாதை, வீண் சண்டை சச்சரவுகள், விபத்துக்கள், அங்கவீனம், கோடேறி வழக்காடல் இப்படியான துன்பங்கள் நேரிடும். சனியினுடைய ஆட்சி ஏழரை ஆண்டுகள். பன்னிரு ராசிகளிலும் ஒரு இராசியில் இரண்டரை வருடம் ஆட்சி செய்வார். முதல் இரண்டரை வருடம் ஜென்மச் சனி, அடுத்த இரண்டரை வருடம் ஐந்தில் சனி. இறுதி இரண்டரை வருடம் மரணச் சனி. ஐந்தில் சனி நஞ்சு பண்ணும், கன்றுகாலிகளை நசுக்கும், கொண்டு கோள்களை உண்டாக்கும், பெண்டு பிள்ளைகளை வேறாக்கும், பண்டுள நாடுவிட்டுப் பரதேசம் போகவும் செய்யும். சனி நல்லதும் செய்வான். பலம் பெற்ற சனியால் பல நன்மைகளை அடைவதும் உண்டு.

இப்படியான வல்லமையுள்ள சனீஸ்வரன் ஏழரை ஆண்டு முடிய மந்தகதியில் அடுத்த இராசியை நோக்கி நகர்வான். மக்களும் துன்பம் ஒழிந்து அப்பாடா என மூச்சு விடுவார். சிவன் பிறவித் துன்பங்களைத் தந்து அநுபவிக்கவிட்டு பிறவித் துயரைப் போக்குவார். சனியும் அவ்வழியே போய் மக்களைத் துன்பப்படுத்தி இளைத்துக் களைத்து மற்ற இராசிக்குச் செல்வார். இதுவே வழமை.

சிவன் (உருத்திரன் - அழித்தல்) சனி இருவரும் பூலோக சஞ்சாரம் செய்யப் புறப்படுகின்றனர். சனி சிவனை நோக்கி, பரமேஸ்வரா! "நான் என் கடமையைச் செய்யப் போகின்றேன். ஏழரை ஆண்டுகாலம் என் கடமை நீளும். அக்காலம் வரையும் தாங்கள் பூவுலகம் வருவதைத் தவிர்க்க வேண்டும்.

பரமேஸ்வரன்:- "ஏன் அப்படிச் சொல்கின்றாய்?"

சனி:- சுவாமி! தாங்கள் அங்கு வரின் எனது பார்வையில் ஏழரை ஆண்டுகள்

ஒரு மனிதனுக்கு ஆகாயத்தைவிட உயர்ந்தவர் அவனது தந்தையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பப்படுவீர்களல்லவா.

பரமேஸ்வரன்:- ஆஹா! சர்வலோக நாயகனாகிய என்னையுமா பிடிக்கப் பார்க்கிறாய்? எங்கே? அதையும் பார்க்கலாமே. ஈஸ்வரன் சவால் விடுகிறார்.

சனீஸ்வரனின் குறிப்பிட்ட காலம் வந்தது. சனியின் பார்வையில் படக்கூடாத வகையில் சிவன் தன்னைக் குறுக்கினார். எதிரே தெரிந்த தாமரைக் குளத்தை அண்மித்து தடாகத்தில் கண்ட தாமரைத் தண்டினுள் மறைந்து கொண்டார். ஏழரை ஆண்டும் கழிந்தது. தண்டிலிருந்து வெளிப்பட்டார். சனீஸ்வரன் கடமை முடிந்து வரும்போது இருவரும் சந்திக்கின்றனர்.

சனீஸ்வரா! பூலோகத்தாரைப் பீடிக்கும்போது என்னையும் பிடிக்கவேண்டி வருமே என்றாய். எங்கே என்னை உன்னால் பிடிக்கமுடிந்ததா? என்று பெருமிதத்தோடு கேட்கிறார். ஈஸ்வரா! ஏழரை ஆண்டுகளும் யாருக்கும் தெரியாமல் எங்கே ஒழித்தாலும் பல்வேறு சிரமங்கள் உண்டாகி இருக்குமேயெனப் பணிவுடன் சொல்ல, என்ன சொல்கிறாய் சனீஸ்வரா கேட்கிறார் சிவன். ஆம் சுவாமி ஆதி அந்தமில்லாத தாங்கள் என் பார்வை பட்டதும் தாங்கமுடியாது, வெயில், மழை, காற்று, உண்டி உறக்கமின்றி தேவகணம் பூதகணங்களையும் காணாது எங்கே மறைந்திருந்து கஷ்டப்பட்டிருப்பீர்கள். என்னால்தானே தங்கட்கு இந்தச் சிரமங்கள். சனி சொல்லிக்கொண்டே போகிறார். சிவன் நிஷ்டையில் இருக்கிறார். அவரது சிந்தனை உலக ஜீவராசிகட்கு அன்றாடம் படியளக்கவேண்டுமல்லவா? பார்வதிதேவியைப் பார்த்து தேவி! உலகிலுள்ள எறும்பு முதல் எண்ணாயிரகோடி ஜீவராசிகட்கும் படியளக்க வேண்டுமென்கிறார். பார்வதிக்கு ஒரு சந்தேகம். சிவனார் சொன்னதில். என்ன? அந்தச் சிறிய எறும்புக்குமா கொடுப்பீர்கள்? ஆமாம். சிவனுக்குத் தெரியாமல் ஒரு சிறு எறும்பைப் பிடித்து தன் சேலைத் தலைப்பில் முடிந்து வைத்திருந்தார் பார்வதி. சிவனார் திரும்பி வந்ததும் எல்லா ஜீவராசிகட்கும் படியளந்ததாகச் சொல்கிறீர்களே! இந்த எறும்புக்குமாவென முடிப்பை அவிழ்த்துக் காட்டுகிறார். என்னே அதிசயம்! எறும்பின் வாயில் ஒரு அரிசியைக் கண்டதும் பார்வதிதேவி, பெரியதிற் பெரியனாக இருக்கும் சிவன் சிறியதிற் சிறிய அணுவுக்குள்ளும் இருக்கிறாரேயென வியந்தார். தேவியின் முடிப்பில் மறைந்திருந்த எறும்புக்கு உணவு அளித்த சிவன் சனியின் பார்வையில் அகப்படாமல் தாமரைத் தண்டில் ஒளிந்திருந்தபோது தனது ஐந்தொழிலையும் செய்யாதிருப்பாரா? சனீஸ்வரன் சிவனின் எட்டு வடிவங்களையும் எண் குணங்களையும் அறிந்திருந்தால், சிவன் தனது பார்வைபட்டு பூமியில் ஏழரை ஆண்டு துன்பப்படவேண்டி வரும் எனச் சொல்லியிருக்கமாட்டான்.

சிவனை எவ்வளவு பக்தியோடு வழிபடுகிறோமோ அதே பக்தியுடன் சனியை வழிபட்டுப் போற்றினால் கொடுமைகள் குறைந்து நலம் பெறலாம்.

"சங்கடம் தீர்க்கும் சனிபகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சனீஸ்வரத் தேவனே
இச்செகம் வாழ இன்னருள் தருவாய்"

"ஒன்பான் கிரகத்துள் ஒன்றாய் மிளிர்கின்ற
அன்பால் நலம்புரியும் அண்ணல் சனீஸ்வரனே
என்பால் அடைந்தாலும் ஏழைக்கு இரங்கிநீ
நன்மையே செய்வாய் நயந்து.

இப்பாடல்களை தினந்தோறும் பாராயணம் செய்து தியானித்து நன்மைகள் அடைவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

(தொடர்ச்சி...

## 17. சர்வாத்மாசார ரமணன்

ராமநாத பிரம்மசாரி காலமாகிவிட்டார் என்று சென்னையிலிருந்து ஆச்ரமத்துக்குச் செய்தி வந்ததும், அவரைப் பற்றிய சில தகவல்களை மிகுந்த கனிவுடன் பகவான் நினைவுகூரத் தொடங்கினார். "இந்த ரமண அனுபூதிப் பாடல்கள் ராமநாதனே இயற்றியவை. "திருச்சுழிநாதனைக் கண்டேனே" என்ற பல்லவியுடன் மற்றொரு பாட்டும் அவன் எழுதியதுதான். அது ஒரு சுவையான கதை. நான் விருபாஷ குகையில் வசித்திருந்த சமயம் ஒரு பௌர்ணமி நிலவு வீசும் இரவில், நாங்கள் கிரிவலம் வர புறப்பட்டோம். அன்று எல்லோருக்கும் ஒரே உற்சாகம். அவர்கள் நடந்துகொண்டே ஒரு கருத்தரங்கு நடத்த தீர்மானித்தார்கள். சிதம்பரம் சுப்பிரமணிய ஐயர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். முதல் பிரசங்கம் செய்தது ராமநாதன். அவன் தேர்ந்தெடுத்த தலைப்பு, "சிதம்பர நடராஜனுக்கும், இதய குகையில் வாசம் செய்யும் பரமாத்மனுக்கும், விருபாஷ குகை ரமணனுக்கும் உள்ள ஒற்றுமைகள்" என்பதே சபாநாயகர் அவனுக்கு அரைமணி நேர அவகாசமளித்தார். ஆனால் ராமநாதனுக்கோ, ஒற்றுமைகள் முடிவின்றி மேன் மேலும் தோன்றிக் கொண்டேயிருந்தன, தோண்டத்தோண்ட ஊறும் நீரூற்று போல. சமயம் முடிந்ததாக சபாநாயகர் அறிவித்ததும், தயவு செய்து இன்னும் அரைமணி நேரம் தாருங்கள் என்று கேட்டு, பேச்சை நிறுத்தாமல் தொடர்ந்தான். நடந்து கொண்டே இருந்த ஜனங்களின் சபை அது. இன்னும் கொஞ்சநேரம் ஐயா என்று மன்றாடியபடி ராமநாதன் இடைவிடாது பேசிக்கொண்டே போக, மூன்று மணி நேரமானபின், சபாநாயகர் அவன் மேலும் பேச்சைத் தொடர்வதை பலவந்தமாக நிறுத்தவேண்டியதாயிற்று. அன்று அவன் பேசிய உற்சாகத்தைப் பார்க்க வேண்டுமே!"



பகவான் குரலில் தொனித்த பரிவு, களைத்து இளைத்து தன்மடியில் சரணடைந்த சேயின்பால் தாய்க்குச் சுரக்கும் கனிவோ! ஆண்டவனைப் பற்றி எழுதுகிறேனென்று பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி ஐயரிடம் தெரிவித்ததும், அவர், 'வெளிப்பார்வைக்கு சாதாரணமாகத் தோற்றமளிக்கும் அனேக ரமண பக்தர்களைப்போல், ராமநாத பிரம்மசாரியும் தனிப்பெருமை உடையவர்; பகவான் இமய மலையின் எவரெஸ்ட் சிகரம் என்றால் இவர்களெல்லோரும் 'கஞ்ஜன் ஜங்கா' மாதிரி என்றார்.

* * * * *

தபஸ் ஸ்வாமி சில தகவல்களை என்னிடம் தெரிவித்தார்.

"ஒரு சமயம், காலை ஆகாரத்துக்குப் பரிமாறுகையில் சிவானந்தம் எல்லோருக்கும் இலையில் இரண்டு நார்த்தங்காய்த் துண்டுகள் வைத்துவிட்டு பகவான் இலையில் நான்கு துண்டுகள் நழுவினாற்போல் வைத்துவிட்டார். பகவான் பேசாமல் இருந்து விட்டது. மறுநாளும் இதேபோல் செய்யவே, பகவான் என்ன ஓய்! என்ன இதெல்லாம்? எனக்கெதற்கு அதிகத் துண்டுகள்? இனிமேல் என் இலையில் நார்த்தங்காயே வைக்க வேண்டாம்' என்றது. டாக்டரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரவின் பேரில்தான் அப்படிச் செய்ததாக சிவானந்தம் மன்றாடினார். மறுநாள் தனக்கு நார்த்தங்காய் போடவிடாமல் பகவான் தடுத்து விட்டது. மேலும், எல்லார் முன்பும் என்னை முகம் காண்பிக்க முடியாதபடி செய்துவிட்டாய் என்றது. நான் சிவானந்தத்தைக் கேட்டதற்கு அவர், மூலத்தில் ரத்தத்தின் அடையாளம் இருந்ததாகவும், அதை டாக்டரிடம் தெரிவித்ததும் டாக்டரே பகவானுக்கு உணவில் அதிகப்படி நார்த்தங்காய்த் துண்டுகள் வழங்கச் சொன்னதாகவும் தெரிவித்தார். இரண்டு நாள் கழித்து, என் பிரேரணையின் பேரில் பலராம ரெட்டியார் இந்த பிரஸ்தாபனையை பகவானிடம் எழுப்ப, பதிலுக்கு மௌனம்தான் கிடைத்தது. மேலும் பத்து தினங்களுக்குப் பின், தேவராஜ முதலியார் வந்ததும் நாங்கள் அவர் உதவியை நாட, அவர் பகவானிடம் விடாப்பிடியாக மன்றாடினார். எதன் அடிப்படையில் அவர் எனக்கு அதிகம் பரிமாறினார்? அது இன்னும் ஜீரணமாகவில்லை என்றது பகவான். சற்று நிதானித்து பின் கேட்டது 'நான் இந்த ஒரு வாயால் மாத்திரம்தான் சாப்பிடுகிறேனா? (அண்ட சராசரங்களுக்கெல்லாம் உற்பத்தியும், ஒடுக்கமும் அதுவேயன்றோ!) உண்ணப் படுவதும், உண்ணுவதும், உண்பவனும் ஒன்றான பின்பு, தனித்தன்மை ஏது? (அபூர்வமாக சில சந்தர்ப்பங்களில் பகவான் ஓரிரு வாக்கியத்தில் இந்த உண்மையை தன்னையறியாமல் வெளிப்படுத்திவிடும்).

ஒரு மாதம் கழிந்தபின் பகவான் ஒரேயொரு துண்டு நார்த்தங்காய் ஏற்றுக்கொண்டது. மேலும் சில நாட்கள் சென்றபின், எல்லோரையும் போல் தனக்கும் இரண்டு துண்டுகள் தர அனுமதி வழங்கியது. அனைவரும் நிம்மதி அடைந்தனர். பகவான் அருட்செயலை யாரால் ஆராய்ந்தறிய முடியும்?

தபஸ் ஸ்வாமி தொடர்ந்தார்:

"நான் பஞ்ச கோசங்களில் படிப்படியாகத் தியானம் செய்து வந்தேன். பகவான் சந்நிதியில், விஞ்ஞானமய கோசத்தையடுத்து ஆனந்தமய கோசத்தையடைந்ததும் ஒரு சந்தேகம் தோன்றியது. புலன்களின் விஷயமான பொருள்களைப் பார்ப்பதிலும், அடைவதிலும், அனுபவிப்பதிலும் பெறும் ஆனந்தம் ஒன்று சேர்த்து, நுகர்பொருள் ஒன்றும் இல்லாமலேயே, ஆனந்தமய கோசத்தில் கிடைக்கிறதே, அந்த ஆனந்த விருத்தி எப்படி எழுகிறது என்று புரியவில்லை. உடனே இந்த சந்தேகத்தை பகவானிடம் தெரிவித்தேன்.

பகவான் உரத்த குரலில் கேட்டது "எந்தப் புத்தகத்தில் இது சொல்லப்பட்டிருக்கிறது., கொண்டுவா நான் பார்க்கிறேன்!" அந்தப் புத்தகம் என்னிடம் இல்லையென்றும், ஏதோ படித்த நினைவை வைத்துத்தான் நான் இந்தத் தியானத்தைச் செய்வதாயும், இந்தச் சந்தேகம் அன்றுதான் எழுந்ததெனவும் சொல்ல வேண்டி வந்தது. இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு பகவான் பதிலளித்தது: 'பிரியம், மோதம், பிரமோதம் ஆகிய விருத்திகள் அறியாமையில் எழுவதாக அறிய வேண்டும்' அன்றிலிருந்து நான் பகவானின் அறிவுரையைப் பின்பற்றினேன். அதாவது அனுபவத்தை ஒதுக்கி அனுபவிப்பவனையே கவனித்தேன்."

* * * * *

பெயர் பெற்ற கொத்தனாரான வரதனின் தகப்பனார் பெருமாளும், திறமையான கொத்தனார்தான். குகை நமச்சிவாயர் கோவிலுக்கு மேற்புறமுள்ள அருட்பால் தீர்த்தத்தைக் கட்டியவர் அவர்தான். அவர் முலைப்பால் தீர்த்தத்தைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தபோது, அப்போது உலகில் அதிகம் பிரபலமடையாத இளந்துறவியான பகவான் அவருக்கு கட்டுமானப் பணியில் உதவி புரிந்தது. அந்நாட்களிலெல்லாம் பகவான் அனேகமாக மௌனமாயிருந்த தினங்கள். அதனால் எந்தக் கல்லை எங்கு பொருத்த வேண்டுமென்று பகவான் சைகையிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பிக்கும். அதன்படி வைக்கப்பட்ட கற்கள் எவ்வளவு கச்சிதமாக அதனதன் இடத்தில் பொருந்துகின்றன என்று பெருமாள் ஆச்சரியப்படுவார். பகவானின் இந்த அதிசயிக்கத்தக்க கட்டிடக் கலை அறிவைப் பார்த்து, பெருமாள் அதனிடம் பெருமதிப்பும், அன்பும் வைத்தார். இந்த ஆச்ரமத்துக்கும் பெருமாள் தன் வயோதிப நிலையிலும் பகவானைப் பார்க்க வருவதுண்டு. பகவானும் ஆதரவுடன் அவரது க்ஷேமலாபங்களை விசாரிக்கும்.

* * * * *

"ஜெகதீசன் என்றொரு தீவிர சாதகர் பகவான் காலத்தில் பலாக்கொத்திலிருந்தார்" என்று ஆரம்பித்த குஞ்சுஸ்வாமி அவரைக் குறித்த விபரங்கள் சிலவற்றை சொல்லலானார். அவர் எப்பொழுதும் தியான நிலையிலேயே இருந்ததால் எங்களுக்கெல்லாம் அவரிடம் பெருமதிப்பு! அவர் உணவிற்காக பருப்புக்களை வெயிலில் உலர்த்தி வைத்ததுடன் குரங்குகள் அவற்றை அவர் கண் எதிரிலேயே சூறையாடும். அவர் பாதிப்பேதுமின்றி இருப்பார். ஏன் நீங்கள் அவற்றை விரட்டாமல் சும்மா பார்த்துக்கொண்டிருந்தீர்கள் என்று கேட்டால், அவைகள் செய்தது தனக்குத் தெரியுமென்றும், ஆனால் தன் மனநிலை தியான பரமாயிருந்ததால் அவற்றை விரட்டும் தூண்டுதல் தனக்கு ஏற்படவில்லை என்றும் சொல்வார்.

அவர் மிகத் தீவிர கிருஷ்ண பக்தர். கண்ணன் தன் இதயத்திலிருப்பதாகப் பாவித்து, தான் நிமிர்ந்து நடந்தால் எங்கே தன் கண்ணனுக்குக் கஷ்டம் உண்டாகுமோ என்ற பயத்தில், எப்பொழுதும் சாய்ந்தே நடப்பார். எப்பொழுதும் தியான பாவம்தான். பகவானிடம் இந்தத் தகவலைத் தெரிவித்ததும், 'ஸ்ரீ கிருஷ்ணன் உருவமில்லையே. அவர் உருவத்துடன் எப்படி சுவாசிக்க முடியும்? மனதில் கிருஷ்ணன் வசிக்கிறான் என்னும் பாவம் நல்லதே. ஆனால் பௌதிக சரீரத்துடன் இதயத்துள் இருப்பதாக நினைப்பது ரொம்ப மிகை என்றது பகவான். பிறகு இந்தக் குறிப்பிட்ட பாவத்தை ஜெகதீசன் கைவிட்டுவிட்டார் என்று சொல்லத்தேவையில்லையல்லவா?

* * * * *

அன்றாட வாழ்க்கையிலும், ஆன்மீக விஷயங்களிலும், பகவானின் சீரான தெளிந்த சமநிலை, பின்பற்ற எளிதாகவும், மிகப் பொருத்தமாகவும் இருக்கும்.

குஞ்சு ஸ்வாமி சொன்னார்: 'சில சமயம் சாப்பிட ஒன்றுமேயிருக்காது, மறுநாளே ருசியான ஆகார வகைகள் ஏராளமாக இருக்கும். எப்படியிருந்தாலும் பகவானிடம் எந்த மாற்றமும் தெரியாது. அதே சமநிலைதான். சாப்பாடு இல்லாத நாட்களில் ஏகாதசி உபவாசம் அனுஷ்டிக்க வேண்டும். இருந்தால், அன்று துவாதசி! என்று பகவான் அடியார்களை உற்சாகப்படுத்தும்.

ஒரு சாதகருக்கு சாதகம் செய்யும் போதெல்லாம் உறக்கம் வந்து கொண்டிருந்தது. அதை அவரால் தடுக்க முடியாததால் ஏற்பட்ட குற்ற உணர்வு இருந்து கொண்டே இருந்தது. இதனைப் பகவானிடம் தெரிவித்ததும், அனுதாபத்துடன் மென்னகை புரிந்து, "தூக்கம் வந்தால் தூங்கிவிடு அதை எதிர்க்காதே, விழித்ததும் தியானத்தைத் தொடர்ந்து கொள். மறுபடி உறக்கம் வந்தாலும் உறங்கிக்கொள். எப்படியும் நிரந்தரமாக உறங்கிக்கொண்டே இருக்க முடியாதல்லவா? நல்ல விழிப்புடனிருக்கும் நேரங்களையெல்லாம் தியானத்திற்கு உபயோகித்துக்கொள். இயற்கையாக இரு. தூக்கம் வருவது பாவம் என்னும் நினைப்புதான் தடை. அதை நீக்கும் வழி இயற்கையின் போக்கில் நித்திரை செய்து விடுவதுதான். ஆனால் முழு விழிப்பு நிலை ஏற்படும்போது தியானத்தை உறுதியாகப் பற்றிக்கொள்! என்றது. நம்மை நாமே வருத்திக் கொள்வதைக்கூட அனுமதிக்காத "கொடுங்கோலன்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லை முனீசுவரருக்குச் செல்வாக்குக் குறைகிறதா?

– திரு ச. லலீசன் அவர்கள் –

வல்லை முனீசுவரரின் செல்வாக்குக் குறைந்து விட்டதா? வல்லை வெளியால் பயணிக்கும் வேளையில் என் நெஞ்சைக் குடையும் கேள்வி இது.

1902 ஆம் ஆண்டில் வல்லைப் பாலம் கட்டப்பட்ட பின்னர் வடமராட்சிக்கும் வலிகாமத்திற்குமான இணைப்புப் பாதையாக வல்லைப் பாதையே விளங்குகின்றது. அதற்கு முன்னர் வடமராட்சி வலிகாமம் இணைப்புப் பாதையாக வாதரவத்தையே விளங்கியது. இதனால் ஒருகாலத்தில் வீரவாணி (வாதரவத்தை) செழிப்புப் பெற்ற ஊராகத் திகழ்ந்திருக்கிறது.

வல்லையினூடாக மக்கள் போக்குவரத்துச் செய்யப் பயந்தமைக்குப் பல காரணங்கள் இருந்தன. அது பாலைநிலச் சாயலைக் கொண்டிருந்தது என்பதற்கு அப்பால் அம்மையன், கந்தன், ஆட்குத்தி நாகன் எனப் பெருந்திருடர்களின் ஆட்சியும் அப்பிரதேசத்தில் ஒரு காலத்தில் நிலவியதாம்.

புறாப்பொறுக்கியை மையப்படுத்தி ஒரு காலத்தில் வல்லை முனியின் (முனீசுவரன்) ஆதிக்கம் நிலவியதாக மக்கள் நம்பினர். இவற்றிற்கெல்லாம் பயந்த மக்கள் வல்லை வெளியூடான பயணத்தைத் தவிர்த்தனர். கப்பூது – வாதரவத்தை - நீர்வேலி ஊடாகவே பயணம் மேற்கொண்டனர்.

காதலியாற்றுப்படை பாடிய வடமராட்சியைச் சேர்ந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை வல்லை முனியைப் பற்றியும் திருடர்களைப் பற்றியும் தன் நூலில் குறித்துள்ளார். அதில் ஒரு பகுதி வருமாறு.

*“புறாப் பொறுக்கி ஆலென் பெருமரம்*
*தன்னைத் தன்வாழ் பதியெனக் கொண்ட*
*வல்லை முனியும் வாரிரு சங்கிலி*
*கலகல வென்னப் பலபல ஒலியொடு*
*தன்பரி வாரம் சார்ந்து சூழப்*
*பாதி யாம வேளை தன்னில்*
*கூகூ என்று குமுறிக் குமுறிப்*
*பற்பல உருவோடு எழுந்து இருந்தும்*
*இராவழி போந்திடு மாந்தரை அடித்துந்*
*தொல்லை செய்யும் பொல்லாத் தனியிடம்”*

முனி வழிபாடு கிராமியத் தெய்வம் சார்ந்த வழிபாட்டு முறைமையாகும். தமிழகத்துக் கிராமிய வழிபாட்டு மரபில் முனியின் செல்வாக்கு நிறைய உண்டு. இந்த அடிப்படையிலேயே வடமராட்சிப் பிரதேசத்தில் முனி வழிபாட்டுப் பாரம்பரியம் ஏற்பட்டிருக்க வேண்டும். முனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் கிராமத்தின் காவல்காரன் என மக்கள் நம்பினர். காலப் போக்கில் அவரையும் ஈஸ்வரனுடைய அம்சமாக ஏற்று முனீஸ்வரன் எனப் பெயரமைத்தனர்.

புறாப்பொறுக்கியை மையப்படுத்தி இருந்த முனீசுவரர் வல்லைக் கடல் நீரேரிக்கு அண்மையில் தற்போதுள்ள இடத்தில் மையங்கொண்டார். அதற்குப் பின்னர் போவோர் வருவோர் உண்டியலில் காணிக்கை செலுத்தி வணங்கி – தம்மைப் பாதுகாக்குமாறு வழுத்திப் பின் பயணந் தொடர்வதை வழக்கமாக்கினர்.

காலவோட்டத்தில் முனிசுவரருக்குப் பக்கத்தில் பிள்ளையாரும் சேர்ந்து கொண்டார். (பிள்ளையார் கோவில் வந்த காலம் பற்றி எனக்குச் சரியாக ஞாபகமில்லை.)

வீதியோர விநாயகர் வழிபாடு எம்மவர் மத்தியில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றது. முறிகண்டிப் பிள்ளையார், கைதடி வழித்துணைப் பிள்ளையார் என வீதியோர விநாயகர் மக்களால் போக்குவரத்துக்கான காவல் தெய்வமாகக் கொள்ளப்படுகின்றார்.

போர்க்காலத்தில் வல்லை வெளிப் பயணம் உயிராபத்து மிக்கதாக விளங்கியமையால் பிள்ளையாரை நேர்ந்து வணங்கிப் பயணம் செய்வோருடைய எண்ணிக்கையும் பெருகியது. இதனால் முனீசுவரரை வணங்குகின்றார்களோ இல்லையோ பிள்ளையாரை வணங்கத் தவறுவார் இலர் எனக் கூறும் அளவிற்கு விநாயகரின் செல்வாக்கு மேலோங்கியது.

அண்மைக் காலமாக எதிரே ஓர் ஆஞ்சநேயரும் இங்கு தோற்றம் பெற்று விட்டார். ஆக, வல்லை முனீசுவரர், அம்மையன், கந்தன், ஆட்குத்தி நாகன் என இவர்களை எல்லாம் இக்காலத்தவர்கள் மறந்து விட்டனர். விநாயகரும் ஆஞ்சநேயரும் செல்வாக்குப் பெற்று விட்டனர். காலமாற்றத்திற்கேற்ப வழிபாட்டு முறையும் மாற்றங்காணத் தொடங்கிவிட்டது.

அண்மையில் அச்சுவேலியில் உள்ள எனது வாழ்வகத்தில் இருந்து வல்லை வெளியூடாக வடமராட்சிக்குச் செல்லும் தேவை ஏற்பட்டபோது மூன்று கோவில்களுக்கும் மத்தியில் ஒரு பதினைந்து நிமிடங்கள் நின்று மக்கள் வழிபாட்டைக் கவனித்தேன். ஒரு சில வாகனங்களைத் தவிர ஏனையவை யாவும் கோவிலடியில் தரித்தன. அதில் எல்லோரும் பிள்ளையாரைக் கைகூப்பித் தொழுதனர். சிலர் திருநீறு பூசினர். சிலர், அருகில் இருந்த இரப்போர்க்கு இரங்கி வழங்கினர். சிலர் ஆஞ்சநேயரையும் வணங்கினர். ஓர் ஐம்பது பேரை அவதானித்திருப்பேன். ஐந்துபேருக்குள்ளாகத்தான் வல்லை முனீசுவரரை வழிபாடு செய்தனர். இது ஏன் என்றுதான் என்னுள் விடை கிடைக்கவில்லை.

இதனைத்தான் முந்தி வந்த செவியை பிந்தி வந்த கொம்பு மறைத்தது என்று சொல்லி வைத்தார்களோ?

## குருபூஜை தினங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மே | 12 | சித்திரை | 29 | செவ்வாய் | திருநாவுக்கரசர் |
| மே | 23 | வைகாசி | 09 | சனி | நமிநந்தியடிகள், சேக்கிழார் |
| யூன் | 04 | வைகாசி | 21 | வியாழன் | திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருஞானசம்பந்தர் |
| யூன் | 22 | ஆனி | 07 | திங்கள் | மாணிக்கவாசகர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| K. உதயகுமார் | குப்பிளான் | 5000. 00 |
| திருமதி தியாகராசா சரஸ்வதி | மல்லாகம் | 60kg அரிசி |
| திருமதி கலைமதி மித்திரன் | கனடா (மந்துவில்) | 10000. 00 |
| திரு சொர்ணசிங்கம் குடும்பத்தினர் | கொழும்பு | 1000. 00 |
| திருமதி சதீஜா கோகிலவாசன் | சரசாலை | 1000. 00 |
| இ. சிவா குடும்பம் | வல்வெட்டித்துறை | 2500. 00 |
| T. சிவாஜி | குடத்தனை | 2000. 00 |
| விஜிதா காண்டீபன் | உடுப்பிட்டி | 5000. 00 |
| சோ. கல்யாணி | கரவெட்டி மத்தி | 1000. 00 |
| வே. முருகவேள் | நெடியகாடு | 10000. 00 |
| செல்வி கீர்தனி உதயகுமார் வதிரி | கரவெட்டி | 5000. 00 |
| ஞா. நிகேதினி | கரவெட்டி | 1000. 00 |
| த. கோபிகிருஷ்ணன் | புலோலி தெற்கு | 5000. 00 |
| சந்திரமோகன் ஆகாஷ் (கனடா) | வல்வெட்டித்துறை | 11200. 00 |
| இ. சிவபாதம் | அல்வாய் | 500. 00 |
| க. வேலுப்பிள்ளை | கொக்குவில் | 2000. 00 |
| சு. பரமேஸ்வரன் | கொக்குவில் | 500. 00 |
| திருமதி தாட்சாயிணி கனாதீபன் | தெகிவளை | 15000. 00 |
| அருணாசலம் சாவித்திரியம்மா | பருத்தித்துறை | 15000. 00 |
| ஆ. இந்திரா | இணுவில் மேற்கு | 2000. 00 |
| நாகலிங்கம் சின்னம்மா நினைவாக செல்லையா மதன் கனடா | | 14000. 00 |
| அ. சிதம்பரநாதன் குடும்பம், சி. நிரஞ்சன் குடும்பம், சி. ரமணன் குடும்பம், சி. ஸ்ரீகரன் குடும்பம் | ஆவரங்கால் | 15000. 00 |
| இளையதம்பி செல்வராஜா குடும்பம் | கனடா | 5000. 00 |
| குணநாதன் தவமணிதேவி | அவுஸ்திரேலியா | 40000. 00 |
| இ. யோகம்மா | உடுப்பிட்டி | 1000. 00 |
| திரு நாராயணசாமி குடும்பம், விக்னேஸ்வரன் குடும்பம் | கொழும்பு | 1000. 00 |
| N. ஜெகஸ்கந்தன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| P. கருணாநிதி | லண்டன் | 2000. 00 |
| பொன்மணி கருணாகரன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| திருமதி செல்வநாயகி ஞானசுந்தரம் | கரவெட்டி | 2000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| திரு அனந்தஜெயனன் | | வவுனியா | 5000. 00 |
| க. கிருஷ்ணகுமாரன் | அத்தாய் | அல்வாய் | 5000. 00 |
| அ. கமலநாதன் | | மட்டக்களப்பு | 2000. 00 |
| திருவேந்திரம் நினைவாக பாமா மூலம் | | மாவிட்டபுரம் | 4000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | | மயிலிட்டி | 4000. 00 |
| V.G. சபிதன் | | கொழும்பு | 1000. 00 |
| த. லதீபன் | | ஆவரங்கால் மேற்கு | 1000. 00 |
| தவயோகசந்திரா | அராலி | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| மா. நடராசா | | நீர்வேலி | 5000. 00 |
| க. சிவராசா | | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| திருமதி T. இராஜதுரை | | கொழும்பு-6 | 1மூடை அரிசி 10000. 00 |
| அமரர் சந்திரகாசன் நினைவாக சிவசக்திகோயிலடி | | அச்சுவேலி | 5000. 00 |
| விக்னேஸ்வரன் நிர்வினி | | சுழிபுரம் | 1000. 00 |
| அசோகமலர் தளயசிங்கம் (கனடா) | | நீர்வேலி | 4000. 00 |
| ஈசன் | | தாவடி | 2000. 00 |
| க. கோபாலபிள்ளை | | காரைநகர் | 2500. 00 |
| திருமதி தங்கராசா சரஸ்வதிமூலம் அமரர் தங்கராசா நினைவாக | | பருத்தித்துறை | 5000. 00 |
| P.T. பாலச்சந்திரன் யாதவன் (வல்வை) | | அவுஸ்திரேலியா | 20000. 00 |
| S. ராகுலன் | | மீசாலை கிழக்கு | 1000. 00 |
| ப. இராசேந்திரம் | | வரணி | 2000. 00 |
| கா. கணேசநேசன் | | அச்சுவேலி | 20000. 00 |
| Dr K. குகதாசன் (கண் வைத்திய நிபுணர்) | | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| வே. முருகேசுசுவாமி நினைவாக | | கிளிநொச்சி | 15000. 00 |
| சி. ஸ்ரீவிக்னேஸ்வரன் மல்லிகா ஸ்ரோர்ஸ் | | ஆவரங்கால் | 1000. 00 |
| வேல்முருகன் முருகதாஸ் | | இடைக்காடு | 2000. 00 |
| ந. குவேந்திரம் | | வரணி | 3000. 00 |
| திருமதி அருணாசலம் தவராணி நினைவாக Dr அ. சிதம்பரநாதன்மூலம் மாதர் சங்கவீதி | | சித்தங்கேணி | 10000. 00 |
| பொன் பூலோகசிங்கம் | | புன்னாலைக்கட்டுவன் | 10000. 00 |
| கு. கனகசபை | | மலேசியா (பிறவுண் றோட்) | 5500. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் | | நெல்லியடி | 1000. 00 |
| ம. யுகன் | | நீர்வேலி | 3500. 00 |
| திருமதி கனகநாயகம் கலாநிதி | | கனடா | 1000. 00 |
| பவானி கதிரவேல் | | லண்டன் | 50 பவுன்ஸ் |
| ஐ. கணேசலிங்கம் | | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ச. ஜெயதாசன் | | காங்கேசந்துறை | 1000. 00 |
| பூ. பவுந்தி | | லண்டன் | 5000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு தரும் தெய்வசிந்தை

– எம். சுகந்தினி அவர்கள் –

மனிதர்களை மனிதர்களாக வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது அன்பினால் உருவாக்கப்பட்ட சமயமாகும். வழி என்பது பாதை, நெறி, மார்க்கம், முத்தி, விடுதலை, ஞானம் எனப் பல பொருள்படும். இவ்வுலகத்திலே மானிடப் பிறவியை எடுத்த மனிதர்களாகிய எமது இறுதி இலட்சியம் இறைவனை அடைதலேயாகும். அவ் இறைவனை அடைவதற்குரிய மார்க்கங்களில் தலையானது அன்பு மார்க்கமாகும். இதனையே திருமூலரும்

அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந் திருந்தாரே

என்று கூறுகின்றார். வேற்றுமதக் கொள்கைகளை முற்றிலும் வெறுத்து ஒதுக்காத தான் தோன்றிய காலத்தைத் துல்லியமாக துணிய முடியாத சனாதன தர்மமாகிய இந்துமதம் அன்பினால் ஆண்டவனை அடிவணங்கியவர்க்கு அருள்மழை பொழிந்தமை அனைவரும் அறிந்ததே. காட்டிலே வாழ்ந்த வேடுவ குலத்தவன் கடவுள் கண்களிலிருந்து ஓடுகின்ற குருதியைக் கண்டு பொறுக்காது தன் கண்ணையே கடவுளுக்குக் காணிக்கையாக்கிய கண்ணப்ப நாயனார் ஆறு தினங்களில் அன்பினால் ஆண்டவனை அடைந்தார். பெண் என்ற நிலையினின்றும் பேய் என்ற உருவெடுத்து இறவாத இன்ப அன்பு வேண்டி நின்ற காரைக்காலம்மையாரும் இறைவனை அடைவதற்காக எடுத்துக்கொண்ட மார்க்கமும் அன்பு வழியேயாகும்.

அன்பு என்பது முத்திக்குரிய ஒரு மார்க்கமாக, பண்புகளை வெளிக்காட்டுவதற்கும் வரங்களைப் பெறுவதற்கும் அருளை வேண்டி நிற்பதற்கும் உறுதுணை புரிகின்றது. அந்த வகையில் சைவ வைணவ நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவன்மீது கொண்ட அன்பின் காரணத்தினாலேயே அற்புதங்களை நிகழ்த்தவோ, திருமுறைப் பாடல்களை இசையுடன் பாடவோ வழியாக அமைந்தது. பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி வாங்கிய எம்பிரானைக் கூட இதயம் இளக வைத்தது செம்மனச் செல்வியின் அன்பேயாகும். இன்னும் எமது வரலாற்றுத் தடங்களை நோக்கின் அன்பிற்குக் கட்டுப்பட்டு அறநெறிப்படி ஆண்ட மன்னராட்சியிலேயே செங்கோல் தலைதூக்கி நிற்பதைக் காணமுடிகின்றது.

மன்னன் ஒருவன் அன்பிற்கு கட்டுப்பட்டு ஆட்சி செய்கின்றான் என்றால் அதன் மறுதலை அவன் ஆண்டவனை நேசிக்கின்றான் என்பதேயாகும். வானத்திலே பறக்கின்ற ஒரு புறா வான் பரப்பில் தன் இரைக்காக வட்டமிட்ட பருந்தைக் கண்டு பயந்து தன் காலடியில் சரணாகதியடைந்த ஒரு பறவைக்காக தன் தசையையே பருந்துக்கு விருந்தாக்கிய சிபிச்சக்கரவர்த்தியும், வாயிற் கடைமணி நடுநா நடுங்க அரவின் கடைமணியுகுநீர் நெஞ்சுடத்தான்றன் அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோனாகிய மனுநீதிகண்ட சோழனும் அன்பின் வழி வந்தவர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிலே காலன் வரவை எண்ணி கொலைக்களத்தில் பலியிடுவதற்காக கட்டப் பட்டிருந்த பசுவை கட்டவிழ்த்து உயிர்காத்த ஆபுத்திரனும் பசுவதைக்கு அஞ்சி நாட்டைவிட்டோடிய ஞானப்பிரகாச சுவாமிகள் வரலாறும் எமக்கு உணர்த்தும் அன்பின் பாடங்கள். தர்மங்கள் மலிந்து அதர்மங்கள் தலைவிரித்தாடும் இன்றைய யுகத்திலே அன்பு என்பது கேள்விக்கிடமானது. அன்பு என்பது வன்பு நோக்கி வட்டமிட்டுக் கொண்டிருக்கும் எமது சமுதாயச் சூழலிலே ஆத்மீகம் நோக்கி நாம் ஆயத்தமாக வேண்டியவர்களாக உள்ளோம். அன்பு மன அமைதியைத் தரும். வெற்றியைத் தரும். வீரத்தைத் தரும். புகழைத் தரும், செல்வத்தைத் தரும், சித்தியைத் தரும், முத்தியையும் தரும். இப்படிப்பட்ட அன்பை அடியோடு அழியவிடாது தனி மனிதன் குடும்பம், சமூகம், நாடு, தேசம் எனப் பரந்து விரிந்த கிளைகளினூடாக விருட்சமாக்குவோம்.

பஞ்சமா பாதகங்களை ஒழிக்கவும் நான் என்னும் அகங்காரத்தையும் எனது என்னும் மமகாரத்தையும் அழிக்கவும் வேற்றினத்தவன், வேறு நாட்டவன், வேறு மொழி பேசுபவன், வேற்று மதத்தவன் என்ற பாகுபாட்டை நீக்கி எம்முடையவன், என்னவன் என்ற உயரிய நோக்கை உருவாக்கவும் அன்பு ஒரு வழிகாட்டியாகத் திகழ்கின்றது. ஒரு நாட்டில் அன்பு மலருமாக இருந்தால் அங்கே நீதி தலைதூக்கும். நேர்மை சிறக்கும். அப்போது உயரிய ஆத்துமார்த்தமான ஜீவன்கள் ஜனனிக்கும். அந்த ஜீவன்களால் உயர் தெய்வசிந்தை கொண்ட உள்ளம் உள்ள சமூகமொன்று கட்டியெழுப்பப்படும் என்பது திண்ணம். எனவே இறை பக்தர்களாகிய நாம் உண்மை அன்பினால் ஒன்றாகி உயரிய இறையை அடைவோம்.

## சந்நிதிக் கந்தன்
## கழற்கோர் கவிமாலை - 63

பல்லவி

குறையீரந் தழுமெந்தன் கொடுவினை களையாயோ?
துறைமுக மிருந்தருளைச் சொரிந்திடு முருகோனே!

அநுபல்லவி

நிறைதிரு நீற்றினிடை நின்றெரி கற்பூரச்
செறிபுகை நடுவிலொளிர் செல்லச் சன்னிதியானே!

சரணம்

இறையவன் புயமொட்டோ டிணைதிரு மாயன்தன்
நறைமல ரணிகரங்கள் நான்கும்பன் னிரண்டாகி
திறலுறு சூலமொடு பொறைகொ ளாளியும்தேவர்
சிறைவீடு வேல்வடிவில் செழியருள் புரிவேலா!

மறையொடு பேரிதாளம் பதலைகா களம்பம்பை
அறையுதுந் துபிதடாரி முரசுசல் லாரிமேளம்
முறைமுறை தாரைகோடு மத்தளம் தம்பட்டம்
நிறைவுற நின்றார்ப்ப நின்றருள் வேலவனே!

-இராசையா குகதாசன்- (குறையீரந்)

தனக்கு மட்டும் நல்லவனாக இருப்பவன் எதற்கும் பயன்படமாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பக்கம்: (தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஆறுமுகநாவலர் –

*வைரவ விரதம்*

401. வைரவ விரதம் எத்தனை?

மங்கலவார விரதம், சித்திரைப் பரணி விரதம், ஐப்பசிப் பரணி விரதம் என மூன்றாம்.

402. மங்கல விரதமாவது யாது?

தை மாசத்து முதல் செவ்வாய்க்கிழமை தொடங்கிச் செவ்வாய்க்கிழமைதோறும் வைரவக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் ஒரு பொழுது பகலில் பழமேனும் பலகாரமேனும் அன்னமேனும் உட்கொள்ளல் வேண்டும்.

403. சித்திரைப் பரணி விரதமாவது யாது?

சித்திரை மாசத்துப் பரணி நட்சத்திரத்திலே வைரவக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதிலும் ஒருபொழுது பகலிலே பழமேனும் பணிகாரமேனும் அன்னமேனும் உட்கொள்ளல் வேண்டும்.

404. ஐப்பசிப் பரணி விரதமாவது யாது?

ஐப்பசி மாசத்துப் பரணி நட்சத்திரத்திலே வைரவக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதிலும் ஒருபொழுது பகலிலே பழமேனும் பணிகாரமேனும் அன்னமேனும் உட்கொள்ளல் வேண்டும்.

*வீரபத்திர விரதம்*

405. வீரபத்திர விரதம் எத்தனை?

மங்கலவார விரதம் என ஒன்றேயாம்.

406. மங்கலவார விரதமாவது யாது?

செவ்வாய்க்கிழமைதோறும் வீரபத்திரக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் ஒருபொழுது பகலிலே போசனம் செய்தல் வேண்டும்.

407. விரதம் அனுட்டிப்பவர் அவ்விரத தினத்தில் எவ்வெவைகளை நீக்கி எவ்வெவைகளைச் செய்தல் வேண்டும்?

காமம், கோபம் முதலிய குற்றங்களெல்லாவற்றையும் பற்றறக் களைதல் வேண்டும்; தவறாது வைகறையிலே நித்திரைவிட்டெழுந்து விடல் வேண்டும்; புண்ணிய தீர்த்தத்தை அடைந்து விபூதி, வில்வத்தடி மண், தருப்பை, கோமயம், திலம் என்பவைகளைச் சிரசிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக் கையிலே பவித்திரஞ் சேர்த்துச், சங்கற்பஞ் சொல்லி ஸ்நானஞ் செய்தல் வேண்டும். தியானம், செபம், பூசை, ஆலய தரிசனம், பிரதஷிணம், புராண சிரவணம் முதலியன விசேஷமாகச் செய்தல் வேண்டும்; திருக்கோயிலிலே இயன்றமட்டும் நெய்விளக்கேற்றல் வேண்டும்; அபிஷேக, நைவேத்தியத் திரவியங்கள் கொடுத்தல் வேண்டும்; போசனம் பண்ணுமிடத்துச் சிவனடியார் ஒருவரோடாயினும் போசனம் பண்ணல் வேண்டும்; நித்திரை செய்யும் இடத்து, இரவிலே, கோமயத்தினாலே மெழுகப்பட்ட தரையிலே தருப்பையின் மேலே, கடவுளைச் சிந்தித்துக்கொண்டு அதிசுத்தராய் நித்திரை செய்து, வைகறையில் எழுந்துவிடல் வேண்டும்; உபவாச விரத தினத்துக்கு மற்றை நாட்காலையிலே நித்திய கருமம் இரண்டும் முடித்துக்கொண்டு, மாகேசுவர பூசை செய்து, ஆறு நாழிகையுள்ளே சுற்றத்தாரோடு பாரணம் பண்ணல் வேண்டும்; பாரணம் பண்ணிய பின் பகலிலே நித்திரை செய்யாது, சிவபுராணங்களைக்கேட்டுக் கொண்டிருத்தல் வேண்டும்; நித்திரை செய்தவர், சற்பிராமணர் நூற்றுவரைக் காரணமின்றிக் கொன்ற மகா பாதகத்தை அடைவர். (அபாரணம்- பிற்பகல்)

408. எவ்விதமாயினும் சங்கற்பித்த கால எல்லை வரையும் அநுட்டித்து முடித்த பின் யாது செய்தல் வேண்டும்?

விதிப்படி உத்தியாபனஞ் செய்தல் வேண்டும்; தொடங்கிய விரதத்தை இடையே விடுவோரும், உத்தியாபனஞ் செய்யாதோரும் விரதபலத்தை அடையார்.
(உத்தியாபனம்- நிறைவு செய்தல்)

*அன்பியல்*

409. அன்பாவது யாது?

ஒருவருக்குத் தம்மோடு தொடர்புடையவராய்த் தமக்கு இனியவராய் உள்ளவரிடத்தே நிகழும் உள்ள நெகிழ்ச்சியாம்.

410. உள்ளபடி ஆராயுமிடத்து நம்மோடு தொடர்புடையவராய் நமக்கு இனியவராய் உள்ளவர் யாவர்?

அநாதியே மலத்தினாலே மறைக்கப்பட்டுள்ள அறிவும் தொழிலும் உடையவர்களாய்த் தம் வயத்தரல்லாதவர்களாய் உள்ள பசுக்களாகிய நம்மோடு அநாதியே இரண்டறக் கலந்து நின்று, நமக்கெல்லாம் நித்தியானந்தப் பெருஞ் செல்வத்தைத் தந்தருள விரும்பி, தம்தொழில்களெல்லாம் தம் பயன் சிறிதும் குறியாது, நம் பயன் குறித்த தொழில்களாகவே கொண்டு பெத்த நிலையிலே தாம் நம்முள்ளே மறைந்து நமக்குப் பின்னாகியும் முத்தி நிலையிலேயே நம்மைத் தம்முள்ளே அடக்கித் தாம் நமக்கு முன்னாகியும், இப்படியே என்றும் உபகரிக்கும் இயல்புடைய பெருங் கருணைக் கடலாகிய பசுபதி, சிவபெருமான் ஒருவரே. ஆதலினால், அவரொருவரே நம்மோடு என்றும் தொடர்புடையவராய், நமக்கு நம்மினும் இனியவராய் உள்ளவர்; அவருக்கே நாமெல்லாம் உடைமைப் பொருள்; அவருக்கே நாமெல்லாம் மீளா அடிமை. ஆதலினால், அவரிடத்தில்தானே நாமெல்லாம் அன்பு செய்தல் வேண்டும்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊக்கம் உயர்வு தரும்

- திரு ம. விமலகாந்தன் அவர்கள் -

"அரிது அரிது மானிடராதல் அரிது. அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது" ஔவையாரின் அமுத மொழியை மனித உயிர்ப்பிற்கு எடுத்துக்காட்டியவனாக அரிய, பெரிய பிறவியைப் பெற்றவனே மனிதன். அவன் தன் செயல்களால் தனது சக்திக்கு மீறிய சந்திரனையே தொட்டு வந்தான். இவ்வாறான நிலைக்கு அவனுக்குக் கைகொடுத்த அமுத சுரபி எதுவென்றால் ஆக்கமாகும். ஆக்கத்திற்கு அடிப்படை சக்தியே ஊக்கமாகும்.

"ஊக்கம் உயர்வு தரும்" ஒவ்வொரு ஜீவராசிகளுக்கும் இறைவன் இயற்கையாகவே ஊக்கத்தைத் தந்துள்ளான். பிறந்த கன்று எழுந்து நடக்க முயற்சிக்கிறது. அகன்ற வானத்தை அளக்க குஞ்சுப் பறவை சிறகை விரிக்க முற்படுகிறது. ஏன்? மண்ணில் புதைந்த விதைகூட தடையை உடைத்து வெளியே வந்து உலகை ரசிக்க முயல்கிறது. ஆக ஊக்கமெடுப்பது இயற்கை. உறங்கிக் கிடப்பது செயற்கை.

"ஊக்கமது கைவிடேல்" என்றார் ஔவையார். வாழ்க்கையின் ஒவ்வொரு படிநிலை களையும் கடந்து இறுதியில் இலட்சியவாதியாக இலட்சனை பொறித்தவர்கள் நிச்சயம் ஊக்கமெடுத்தே ஆகவேண்டும். ஊக்கம் உயர்வு தரும். அதனால்த்தான் அப்துல்கலாம் அனைவரையும் "கனவு காணுங்கள்" என அறைகூவல் விடுத்தார் போலும்.

ஒரு நோக்கத்தை அடையவேண்டி சிறுபாராயத்திலிருந்தே கடின உழைப்பில் ஈடுபடவேண்டும். அவ் உழைப்புத்தான் அவர்களின் உழைப்பிற்கு கால்கோளாகிறது.

வீதியோர விளக்கில் படித்து அமெரிக்காவின் அதிபதியான ஆபிரகாம் லிங்கனும் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து இந்தியாவையே ஆண்ட அப்துல் கலாமும் ஊக்கத்தினால் உயர்வு பெற்றவர்கள். மேலும் உலகப் பொதுமறையாம் திருவள்ளுவரும்

"வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்
தம் உள்ளத்தனையது உயர்வு"

எனக்கூறி நீர்ப்பூவின் நீளம் அதன் ஆழத்திலே என்றும் மக்களது உயர்வு அவர்களது ஊக்கத்திலே என்றும் கூறுகின்றார்.

வாழ்ந்து மறைந்ததை வரலாறு சொல்லட்டும்; வாழ்ந்தவர் வரிசையில் ஒருவராய் ஆகிவிடு! என்பதற்கேற்ப நாம் வாழும்போது எடுக்கும் முயற்சியும் ஊக்கமும் எமது உயர்வுக்கு அடிப்படை. கறுப்பின மக்களின் உயர்வுக்காக நெல்சன் மண்டேலா எடுத்த ஆக்க சக்தி அவர்களது ஊக்க சக்திக்கு அடிப்படையானது என்பதை அவர் மறைவிலே அகிலமே பறைசாற்றியது.

ஒரு காலத்தில் தன்னையே சுற்றியிருந்த சுற்றத்தார்கள், நண்பர்கள் அனைவராலும் புறக்கணிக்கப்பட்ட தோமஸ் அல்வா எடிசன் மாபெரும் விஞ்ஞானியாகவும் இந்த உலகிற்கே ஒளி கொடுத்த உத்தமராகவும் போற்றப்பட்டார். ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புக்களைச் செய்த எடிசனுக்கு காது கேளாத குறைபாடும் இருந்தது. தன்னுடைய பாலியல் காலங்களில் அடைந்த துன்பங்கள் எத்தனையோ. அவை எண்ணில் அடங்காது. ஆனாலும் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதித்துக் காட்டினார். அளவில்லாத இவருடைய சாதனையில் ஊன்றுகோலாய் இருந்தது ஊக்கமே என்பதை மறைக்க முடியாது.

மனிதனுடைய நிர்வாண காலத்தில்த்தான் நெருப்பின் நாகரிகம் இரு கற்களின் மோதுகையில் "தீயாய்" பரிநாமம் பெற்றது. அந்தக் கற்காலம்தான் மனித நாகரிகப் பொற்காலத்தின் உறைவிடம் என்று யாரும் அறிந்திருக்கவில்லை. ஆனால் மனிதன் தீயைக் கண்ட பிறகுதான் தீயாய் ஆனான். தீவிரமாய் சிந்திக்கத் தொடங்கினான். ஊக்கத்தின் வேர்களை இறுக்கிப் பிடித்தான். காலக்கதவுகள் தனக்காகவே திறந்திருப்பதாக யோசித்துக் கொண்டான். புதிது புதிதாய் பொருட்களை உருவாக்கினான். கடல் கடந்தான். பல நாடு கண்டான். பல போர் தொடுத்தான். அதில் வெற்றியும் கண்டான். இன்று வேற்றுக் கிரகத்தில் வீடுகட்டி விழா எடுக்க விண்வெளியில் பாதை செய்து கொண்டிருக்கின்றான். ஆகவே ஆக்கத்திற்கு அடிப்படையானது ஊக்கம் என்பது கண்கூடு.

இவ்வுலகில் இயலாமல் தோற்றுப் போனவர்களைவிட முயலாமல் தோற்றுப் போனவர்கள்தான் அதிகம். முயற்சிகள் தோற்கடிக்கப்படலாம். ஆனால் நாம் முயற்சி செய்வதில் தோற்றுவிடக் கூடாது. கார்மேகம் கன மழைக்கு ஆதாரம். கடும் உழைப்பு முன்னேற்றத்திற்கு அத்திவாரம். ஆகவே தினமும் ஊக்கமெடுப்போம். அதற்குப் பயிற்சி கொடுத்து உயர்ச்சி அடைவோம்.

## சித்திரை வருடப் பிறப்பு

இது சித்திரை மாதம் முதலாம் திகதி, அதாவது சூரியபகவான் மேடராசிக்குள் பிரவேசிக்கும் காலம் கொண்டாடப்படுவதாகும். எமது தமிழ் வருடங்கள் அறுபது (60) உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெயர் (நாமம்) கொண்டு மழை, காற்று, பயிர்வளம் போன்ற இயற்கைக்கால பலாபலன்களை மாற்றி அமைப்பன. இவ்வருடங்களின் ஆரம்பம் (பிறந்த நாள் அதாவது பிரம்மா உலக படைப்பு ஆரம்பித்த நாள் என்பது புராண ஐதீகம்) இதையே புதுவருடப் பிறப்பாகக் கொண்டாடுகின்றோம். இந்நாளில் எம்மவர்கள் தம் பாவங்கள், தோஷங்கள் நீங்க வேண்டி ஆலயங்களில், அர்ச்சகர் இல்லங்களில் மருந்து வகை, பூ வகை, வாசனைத் திரவியம் போன்றவை போட்டுக் காய்ச்சிய மருத்து நீரைத் தலையிலே தேய்த்து, ஸ்நானம் செய்து, உலகின் கண்கண்ட தெய்வமாய் மிளிரும் சூரியபகவானுக்கு, வீடுகளில் பொங்கலிட்டு பூஜை செய்து புத்தாடை அணிந்து ஆபரணங்கள் அணிந்து, ஆலய வழிபாடு செய்து குரு, பெரியோர் ஆசிகள் பெற்று, அறுசுவை உண்வு உண்டு, மங்களகரமாய் நித்திரை செல்லல் வேண்டும். இது எம்மவர் பாரம்பரிய மரபாகும். மங்களகரமான இந்நாட்களில் மனத்தில் மகிழ்ச்சி ஏற்படும் வண்ணம் நடந்து கொள்வது அந்த வருடம் முழுநாளும் எம்மவர் மனங்கள் மகிழ்வு பெறும் என்பது எம்மவரின் ஐதீகமாகும்.

வருடத்திலுள்ள பன்னிரெண்டு மாதங்களும் சுழற்சியில் மேடம் முதல் மீனம் ஈறான பன்னிரெண்டு ராசிகளிலும் சஞ்சரிக்கும் கிரகங்களின் நடுநாயகமான சூரியபகவான் ஒவ்வொரு வருடமும் சித்திரை முதலாந்திகதி கடைசியாகிய மீன ராசியிலிருந்து முதல் வீடாகிய மேட ராசிக்குள் பிரவேசிக்கிறார். இத்தினத்தையே எமது முதாதையர் எமது வருடப்பிறப்பாகக் கணித்து கொண்டாடுகிறார்கள். மேலும் உலகில் உள்ள சகல நிகழ்வுகளுக்கும் சூரியனே காரணமாக இருப்பதால் அவர் முதலாவது வீடான மேடராசியில் பிரவேசிக்கும் பொழுது பூரண கும்பங்கள் வைத்து பாற்பொங்கல் பொங்கிப் படைத்து வரவேற்கப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுரைத்தொடர் - 07

# சித்தர்களின் ஞானம்

— திரு சிவ மகாலிங்கம் அவர்கள் —

01) ஆன்ம விடுதலைக்கு ஞானகுருவின் அவசியம்:

சைவ சமயம் இறைவன் வெளிப்படும் இடங்களாகக் குரு, லிங்கம், சங்கமம் ஆகிய மூன்றையும் குறிப்பிடுகிறது. இங்கு கூறப்பட்டுள்ள குரு ஞான குருவே ஆவார். சிவபெருமானது மூர்த்தி பேதங்களில் பதின்னான்காவது மூர்த்தமாகத் தட்சணாமூர்த்தி வடிவம் கூறப்படுகிறது. யோகத்திற்கும் ஞானத்திற்குரிய சிவனுடைய வடிவமாக இவ்வடிவம் திகழ்கிறது. சகல கலை வித்தைகளுக்கும் என்றும் குறையாத நிதி, பாவப் பிணியைப் போக்கும் பரம புருஷனான வைத்தியர், சகல லோகத்திற்கும் ஆசாரியார் ஆகிய குரு தட்சணாமூர்த்திக்கு நமஸ்காரம் எனச் சங்கரர் சிவனுடைய தட்சணாமூர்த்தி வடிவத்தைப் போற்றித் துதிக்கிறார்.

அஞ்ஞானமாகிய இருளினால் ஒளி மழுங்கிய கண்களை ஞானம் என்கிற துலக்கு மாற்றல் வாய்ந்த கருவியால் திறக்கவல்ல திறமையாளன் எவனோ அவனே குரு எனக் குருவணக்க சுலோகம் ஒன்று கூறுகிறது. இறைவனின் திருவருளால் தான் அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமையப் பெற்ற குரு நமக்குக் கிடைப்பார் என்றே இந்து சமயத் திருநூல்கள் கூறுகின்றன. ஆத்ம ஞானம் தானாக விளங்காது. அதை விளங்க வைக்க குருவின் துணை தேவை. இறைவனின் திருவருள் மானுட வடிவில் தோன்றுவதே குருவடிவம் ஆகும். ஜலத்திலுள்ள தாமரை கதிரவன் கிரணம் பட்டு மலர்வதுபோல ஆசாரிய சம்பந்தம் இருந்தால்தான் ஞான மலர்ச்சியான மோட்சம் கிட்டும். குருவை நம்பு, முற்றிலும் நம்பு, வாழ்க்கைத் துயரத்தினின்றும் விடுதலை அடைவாய் என்றும், மனமும் புலனும் ஒழுங்கு பட்டால் குருவை உன் உள்ளத்திலே காண்பாய் என்றும் சங்கரர் பஜகோவிந்தத்தில் குறிப்பிடுகின்றார். மணிவாசகரை இறைவன் குருந்த மரநிழலில் குருவடிவம் தாங்கியே ஆட்கொண்டார் என்பதை

"கோகழி ஆண்ட குருமனிதன் தாள் வாழ்க"

"நிலந்தன் மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி"

"காட்டாதன எல்லாம் காட்டி
கேளாதன எல்லாம் கேட்பித்து"

என்ற திருவாசக வரிகள் எடுத்து விளக்குகின்றன. சூரியனின் ஒளி இல்லாமல் சூரிய காந்தக் கல்லில் நெருப்புத் தோன்ற முடியாதது போல அருள் வடிவமாகிய குரு இல்லாமல் ஆன்மாக்களுக்கு ஆன்மஞானம் தோன்றாது என்பதை

"ஞான மிவனொழிய நண்ணியிடும் நற்கல்லை
பானு வொழியப் படின்"

என்ற திருவருட்பயன் பாடல் எடுத்து விளக்குகிறது.

ஆன்மாக்களின் பக்குவநிலைக்கு ஏற்ப இறைவனே குருவாக வந்து ஞானத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குகிறான் என்பது சித்தாந்திகள் கொள்கை ஆகும். குருவைச் சூரியனுக்கும், குருவருளைச் சூரியனின் கதிருக்கும் ஆன்மாவைச் சூரிய காந்தக் கல்லுக்கும் மும்மல அழுக்கைப் பஞ்சுக்கும் உவமையாகக் காட்டுகிறார் திருமூலர். சூரிய காந்தக் கல்லும் பஞ்சும் ஒன்றாகப் பொதிந்து வைத்தது போல இந்த உடம்பிற்குள் ஆன்மாவைச் சுற்றி மும்மல அழுக்குகள் சூழ்ந்து நிற்கின்றன. சூரிய காந்தக் கல்லை ஞான குருவாகிய இறைவனை நோக்கி நிறுத்த வேண்டும். அப்படி நிறுத்தினால் பஞ்சு எரிவதுபோல ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலங்கள் நீங்கிவிடும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

சூரிய காந்தமும் சூழ் பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல்
சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே.

யாழ்ப்பாணக் குடாநாடு பெற்ற தவயோகியாகிய யோகர் சுவாமிகளை நல்லூர்த் தேரடியில் குருமூர்த்தமாக செல்லப்பா சுவாமிகள் ஆட்கொண்டார். நல்லைக் கந்தனுடைய திருவருளும் செல்லப்பா சுவாமிகளின் குருவருளும் ஒருங்கே அமையப்பெற்ற தவத்திரு யோகர் சுவாமிகள் தன்னை ஆட்கொண்டருளிய செல்லப்பா சுவாமிகளின் அருட் சிறப்பினை எங்கள் குருநாதன் என்ற தலைப்பில் நற்சிந்தனைப் பாடலில் பாடியுள்ளார்.

என்னையெனக் கறிவித்தான் எங்கள் குரு நாதன்
இணையடியென் தலைவைத்தான் எங்கள் குருநாதன்
அன்னை பிதா குருவானான் எங்கள் குருநாதன்
அவனியெல்லாம் ஆளவைத்தான் எங்கள் குருநாதன்
முன்னை வினை நீக்கி விட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கும் அறியவொண்ணான் எங்கள் குருநாதன்
நன்மை தீமை அறியாதான் எங்கள் குருநாதன்
நான் தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்

இந்த நற்சிந்தனைப் பாடலை வெள்ளிக்கிழமை தோறும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் ஆறுபத்துமூவர் வழிபாட்டில் திரு மோகனதாஸ் சுவாமிகள் பாடுகின்றபொழுது தெய்வீக ஒலி அலை பிரகாசிப்பதை அடியார்கள் அனைவரும் உணர்ந்து கொள்ளலாம். நடமாடும் கோயிலாகத் திகழ்ந்த யோகர் சுவாமிகளின் அருள் வார்த்தைகள் அடியார்களின் அக இருளை நீக்கி ஞான ஒளியினைப் பிரகாசிக்கச் செய்யும் ஒளி விளக்காக மிளிர்கிறது.

கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி சொன்ன அருணகிரிநாதப் பெருமான் முருக மந்திரத்தின் இறுதி வரியில் "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்று பாடி முடிக்கிறார். திரிகரண சுத்தியோடு வழிபடும் அடியார்கள் அனைவருக்கும் ஞான பண்டிதன் குருவாக வந்து வழிகாட்டுவான் என்பது முருக உபாசகர்களின் நம்பிக்கை ஆகும்.

**02) வேட தாரிகளை நம்பக்கூடாது:**

வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு வாய் ஞானம் பேசி அலைய வேண்டாம். உடல் இறைவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட கொடை. இதனைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைக்கக் கூடாது. சரியான முறையில் பயன்படுத்தி ஆன்ம விடுதலையைப் பெற முயற்சி செய்தல் வேண்டும். இதனை விடுத்து "உடல் நிலையற்றது; உலகம் பொய், சாவு மெய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு பொய்" என்று கூறிக்கொண்டு வறியவர்களின் வீடுகளிலே சென்று யாசகம் செய்பவன் மூடன். அவன் தன்னை யாரென்று பார்க்காத சண்டாளன். அவன் உருவில் மனிதனாயிருந்தாலும் செய்கையில் அறிவற்ற மாடு. ஆகையால் வீணாகப் பாவியர்கள், வஞ்சகர்கள், வேஷக்காரர்கள் சொல்லும் வார்த்தைகளைக் கேட்காதே; பிறர் பேச்சுக்களைக் கேட்டு அறிவு கலங்காதே குழப்பம் அடையாமல் உறுதியுடன் நடந்து கொள் என அகத்தியர் ஞானத்தில் வரும் பின்வரும் பாடல் தெளிவுபடுத்துகிறது.

வாழாமல் உலகம் விட்டு வேடங்கள் பலவும் பூண்டு
வயிற்றுக்காய் வாய் ஞானம் பேசிப்பேசி
தாழ்வான குடிதோறும் இரப்பான் மட்டை;
தனை அறியாச் சண்டாளன் முழுமாடு அப்பா
பாழாகப் பாவிகள் தான் சொல் கேளாதே!
பதறாதே! வயிற்றுக்கே மயங்கிடாதே!
கேளாதே! பேச்செல்லாம் கேட்டுக் கேட்டுக்
கலங்காதே! உடல் உயிர் என்று உணர்ந்திடாயே.

## 03) ஆன்ம ஞானம் பெறுவதற்குரிய மார்க்கங்கள்:

ஆன்ம ஞானம் பெறுவதற்குரிய சாதனா மார்க்கங்களாக சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்பன கூறப்பட்டுள்ளன. சிவத்தை அடைய வேண்டுவோர்க்குச் சிவத்தைப் பற்றிய ஞானம், சிவத்தின்மேல் காதல், செய்யத்தக்க சாதனம், இவை பொருந்தும் வகையான ஒழுக்கம் ஆகிய நான்கும் வேண்டும். இல்லையெனில் வாழ்வில் மேன்மை இல்லை.

குருவடிவம் தாங்கி வந்து ஆட்கொண்டு முக்திக்குரிய மார்க்கத்தை இறைவன் எனக்குக் காட்டியருளினான். என்னிடம் உள்ள குறைபாடுகள் இறைவன் காட்டிய பாதையில் செல்லவிடாமல் என்னைத் தடுக்கிறது. துன்மார்க்கத்தில் செல்லும் நான் எப்பொழுது இறைவனோடு கூடுவேனோ தெரியவில்லை என்று தவிப்பதை மணிவாசகரின் பின்வரும் திருவாசகப் பாடல் உணர்த்துகிறது.

சீலம் இன்றி நோன்பு இன்றிச்
செறிவே இன்றி அறிவு இன்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டு ஆய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலும் காட்டி வழிகாட்டி
வாரா உலகம் நெறி ஏறக்
கோலம் காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே.

(திருவாசகம் ஆனந்தமாலை, 3ஆம் பாடல்)

## 04) பக்குவன், அபக்குவன் வேறுபாடு:

ஞானிகள் வேடம் போட்டு உலகினை ஏமாற்றும் சமய வியாபாரிகள் பலர் இப்பூவுலகிலே நடமாடித் திரிகிறார்கள். மெய்யுணர்வு எள்ளளவும் இல்லாமல் கழுமரத்தடி நாய்போல இவர்கள் கத்தித் திரிவார்கள். செப்படி வித்தைக் காரர்களாகிய நயவஞ்சகர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுகுபோல மற்றவர்களை ஏமாற்றிப் பிழைப்பார்கள். ஞானிபோல வேடம் போட்டுத் தன்னை விளம்பரப்படுத்தி தமது வியாபாரத்தை பெருக்கிக் கொள்வார்கள். ஆனால் உண்மையான பக்குவம் உள்ள ஞானிகள் பொறி புலன் முதலிய உடலுடன் கூடியிருந்தும் உலகியல் செயல்களில் நாட்டமின்றிப் பற்றின்றி செத்தாரைப்போலத் திரிவார்கள். வேடதாரிகளுக்கும் உண்மையான ஞானிகளுக்கும் உள்ள வேறுபாட்டினைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

கத்தித் திரிவர் கழுவடி நாய்போற்
கொத்தித் திரிவர் குரக்களி ஞானிகள்
ஒத்துப் பொறியும் உடலும் இருக்கவே
செத்துத் திரிவர் சிவஞானியோர்களே

(திருமந்திரம் 1671)

**05) மன ஒருமைப்பாடு இல்லாதவர்களின் செயற்பாடு:**

அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கின்ற இறைவனை பிண்டமாகிய இந்த உடலிலே கண்டவர்கள் சித்தர்கள். தானே பிரம்மம் என்பதை உணரமுடியாதவன் இவ்வுலகிலே எண்ணற்ற தெய்வங்கள் உண்டென்பான். உடம்பு நலம் பெற வழிகாட்டும் குருவென்றும், சீடனென்றும் அலைவான். இவன் அறிவு தோன்றும் இடத்தை அறியாத கெட்ட மாடு போன்றவன். அறத்திற்குப் புறம்பான பொய், கொலை, களவு போன்ற தீய செயல்களைச் செய்வான். விலைமகளிர்மீது ஆசைகொண்டு அவர்கள் பின்னே அலைவான். அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தை தரக்கூடிய குருவின் பாதத்தை அடைய மாட்டான். தீமைகளுடன் சேர்ந்து நரகம் என்னும் துன்பத்திலேயே விழுந்து தவித்துக் கொண்டிருப்பான் என உண்மை நெறியை உணராதவன் அடையும் நிலையை காகபுகண்டரின் பின்வரும் பாடல் தெளிவு படுத்துகிறது.

தான் என்ற பிரமத்தை அடுத்திடாமல்
தாரணியில் அனந்தமடா தெய்வம் என்றும்
ஊன் என்ற குருவென்றும் சீடன் என்றும்
உதயகிரி பாராத உலுத்த மாடு
வேன் என்ற பொய் களவு கொலைகள் செய்து
வேசையர் மேல் ஆசை வைத்து வீணன் ஆகிக்
கோன் என்ற குருபாதம் அடைய மாட்டான்
கூடுவான்; நரகம் அதில் வீழ்வான் பாரே!

வேடதாரிகள், ஆஷாடபூதிகளைக் கண்டு யாரும் நம்பக் கூடாது. இவர்களைத் தான் வெள்ளை வேட்டிக் கள்வர்கள் எனக் கிராமங்களில் வாழும் மக்கள் கூறுவார்கள். "மனம் ஒன்று பட்டுச் செபதபங்கள் செய்கின்றோம் என்பார்கள்" உண்மையான தலைவனாகிய இறைவனுடைய திருவடிகளை நினைக்கவே மாட்டார்கள். பயனற்ற காட்டிலே அலைந்து திரிந்த பின் வருந்துவார்கள்.

ஒரே நிலையான நிட்டையிலும் நிற்க மாட்டார்கள். இவ்வுலகில் ஆசைப்படக்கூடிய எல்லாப் பொருட்களின்மீதும் ஆசை கொள்வார்கள். ஆந்தை அலறுவதுபோல மன ஒருமைப் பாடு இல்லாமல் உரத்த குரலில் தேவாரம் பாடுவார்கள். ஆனால் எப்பொழுதும் பிறர் குடியைக் கெடுப்பதிலேயே காலங் கழிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தமுடன் செபதபங்கள் செய்தோம் என்பார்;
செப்புகிறேன் அவர்களுடைய செய்தி எல்லாம்;
கர்த்தனுடைய பாதமலர் நினைக்க மாட்டார்;
காடுசுற்றி ஓடியபின் கலங்குவார்கள்;
நித்தமுடன் நிட்டையிலும் நிற்க மாட்டார்;
நிலத்தில் உள்ள ஆசையெல்லாம் நினைத்துக் கொள்வார்;
சத்தமுடன் தேவாரம் கூகைபோலும்
சதாநித்தம் ஓதி குடிகெடுப்பார் ஆண்டே

-ஞான வெட்டியான் பாடல்-

06) மனமாசற்ற வாழ்வே உண்மையான துறவு:

உள்ளத்திலே நிறைய உலகியல் ஆசைகளை வைத்துக் கொண்டு வெளியிலே துறவி வேடம் பூண்டு திரிவதனால் ஒருவித பயனும் இல்லை. காதிலே குண்டலம், கழுத்திலே உருத்திராட்சம், கையிலே செபமாலை என வெளியிலே சிவவேடம் சிலர் போட்டிருப்பார்கள். ஆனால் அவர்களின் உள்ளமோ உலகியல் ஆசைகளின் உறைவிடமாகத் திகழும். இவர்கள் துறவி வேடம் பூண்டு ஊரெல்லாம் சுற்றுவார்கள்; கோயில்கள் குளங்கள் என்றெல்லாம் அலைவார்கள். ஆனால் இவர்களுடைய மனதில் அமைதியோ ஆறுதலோ இல்லாமல் தவித்தபடியே என்றும் இருப்பார்கள்.

மனம் மாசற்று வாழ்வதுதான் உண்மையான துறவு; சமாதான இன்ப வாழ்வுக்கு வழி; அகங்காரம், கோபம், ஆசை ஆகிய தன்மைகள் உள்ளத்தை விட்டு ஓட வேண்டும். இந்த அழுக்குகளை நன்றாகத் துடைத்தெறிய வேண்டும்" இந்த மன மாசுக்களை துடைத்தால்தான் அந்த இடத்தில் அன்பு வடிவான ஆண்டவன் குடிபுகுவான். ஆண்டவன் குடிபுகுந்த உள்ளத்திலே துன்பமேது? கலவரம் ஏது? கொந்தளிப்பு ஏது? அமைதியும் சாந்தியுமே நிலைத்து நிரம்பி நிற்கும். இவ்வாறு மனமாசின்றி வாழும் உத்தமரையே உலகம் போற்றும். உள்ளத்தால் தூய்மையாக வாழ்பவர்களை உலகத்தில் வாழும் மக்கள் எல்லாம் தங்கள் உள்ளங்களில் வைத்துப் போற்றுவார்கள் எனத் திருக்குறள் கூறுகிறது.

உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார்
உள்ளத்துளெல்லாம் உளன்

(திருக்குறள்- 294)

காதிலே குண்டலங்களைத் தரித்துக்கொண்டு ஒவ்வொரு குளமாகச் சுற்றி வருகிறீர்கள். மனத்திலுள்ள குற்றங்களைப் போக்க முடியாமல் தவிக்கிறீர்கள். கபாலத்தைக் கையில் ஏந்தும் சிவபிரானை உள்ளத்திலே இருத்தி வழிபட்டால் தேவர்களும் போற்றும் தகுதியைப் பெற்றுவிடலாம் எனச் சிவவாக்கியார் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

குண்டலங்கள் பூண்டு நீர்
குளங்கள் தோறும் ஆழ்கிறீர்
மண்டுகங்கள் போல; நீர்
மனத்தின் மாசு அறுக்கிலீர்
மண்டையேந்து கையரை
மனத்து இருத்த வல்லிரேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைமால் அயன் தொழப்
பணிந்து வாழல் ஆகுமே.

குற்றமற்ற தூய நெறியிலே நடந்து, தீமைகள் நிகழ்வதற்கு காரணமான உலக ஆசைகள் அனைத்தையும் துறப்பதே மனிதப் பிறவி எடுத்ததன் பயனாகும். உள்ளமும் உடம்பும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். கள்ளம் கபடமற்ற தூய வாழ்விலே தலை நிற்க வேண்டும். தான் செய்யும் செயல்கள் தனக்கும் பிறருக்கும் நல்ல பயனைத் தரவேண்டும். மனதிற்கு மகிழ்ச்சியும் உடலுக்கு இன்பமும் தரும் உயர்ந்த காரியங்களையே செய்ய வேண்டும். இதுவே பரிசுத்தமான வழி. நல்ல வழியாகும் என ஔவையாரின் ஞானக் குறள் கூறுகிறது.

"பிறப்பினால் பெற்ற பயன் ஆவது எல்லாம்
துறப்பதாம் தூநெறிக் கண் சென்று"

அழுக்கும் குப்பை கூளங்களும் நிறைந்த இடத்தில் எந்தத் தூய்மையையும் காண முடியாது. அந்த இடத்தில் எந்த நல்ல பண்டமும் கெட்டுத்தான் போகும். அழுக்குப்பட்டுவிடும். நமது உடம்புக்குள் இறைவனைக் காண வேண்டுமானால் உள்ளம் மாசற்றதாக இருக்க வேண்டும். மனம் தூயதாக இருக்க வேண்டும். மனத்திலே பரிசுத்தம், குற்றமற்ற குணம், சிறந்த தன்மை குடிகொண்டிருந்தால் தான் உடம்பிலேயே ஒட்டிக்கொண்டிருக்கும் ஈசனைக் காண முடியும்.

"மாசற்ற கொள்கை மனதில் அடைந்தக்கால்
ஈசனைக் காட்டும் உடம்பு"

-ஔவையாரின் ஞானக்குறள்-

குற்றமற்ற தன்மை உள்ளத்தில் உண்டாகுமானால் உடம்பு ஈசனைக் காட்டும் என்பதை மேற்கூறிய ஞானக்குறள் விளக்குகிறது.

அருளால் உள்ளத்திலே அறிவு பிறக்கும். அருளல்லாத வேறு எதனாலும் அறிவு பிறக்காது. அருளின் காரணமாக அன்பின் காரணமாக கருணையின் காரணமாகப் பிறக்கும் அறிவினால் குற்றங்களையெல்லாம் போக்கிவிடலாம். இவ்வுலக மாயையால் உள்ளத்தில் தோன்றும் ஆசாபாசங்களையெல்லாம் அறுத்தெறியலாம்.

அருளினால் அன்றி அகத்து அறிவு இல்லை
அருளின் மலம் அறுக்கலாம்

-ஔவையாரின் ஞானக்குறள்-

அச்சமும், அகங்காரமும்தான் மக்களை நல்ல வழியில் செல்ல விடாமல் தடுக்கிறது. மனத்திலே அச்சம் கொண்டவர்களால் எக்காரியத்தையும் துணிந்து செய்ய முடியாது. தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதில்லை என்பது கம்பன் வாக்கு. நாம் செய்கின்ற காரியம் தூய்மையானது என உணர்ந்துகொண்டால் சோதனைகள் எது வந்தாலும் அவற்றைத் தாண்டிச் செய்து முடிக்கும் தன்மை நம்மிடம் ஏற்படும். அகங்காரம் படைத்தவர்கள் பிறர் சொல்வதைப் பொருட்படுத்தமாட்டார்கள். நினைத்ததை முடிப்பவன் நான் என்ற ஆணவத் திமிரோடு செயற்படுவார்கள். அச்சமும் அகங்காரமும் நீங்கிய இடத்திலேயே ஆண்டவன் வீற்றிருப்பான்.

"அச்சம் அகங்காரம் அகத்து அடக்கினால் பின்னை
நிச்சயம் ஆம் ஈசன் நிலை"

-ஔவையாரின் ஞானக்குறள்-

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாட்சர மந்திரம்

– திருமதி சந்திரலீலா நாகராசா அவர்கள் –

"பஞ்சாட்சரம்" என்பது ஐந்து எழுத்து மந்திரமாகும். நாலு எழுத்து மந்திரம் "சதுராச்சரம்" உதாரணம் கணேசாய சடாச்சர மந்திரம் ஆறு எழுத்துடைய "சரவணபவ" ஆகும். அட்டாச்சரம் எட்டு எழுத்துக்களைக் கொண்ட "நமோ நாராயணாய" ஆகும். பஞ்சாட்சர மந்திரம் "நமசிவாய" என்னும் ஐந்து எழுத்துக்களைக் கொண்டது. மந்திரம் என்பது மனத்தால் நினைத்து மனனம் செய்பவரை எல்லாவிதமான இன்னல்கள், இடையூறுகளிலும் இருந்து ரட்சித்துக் காப்பதாகும்.

நடராசப் பெருமான் சிதம்பரத்தில் ஆடும் ஆனந்தக் கூத்து பஞ்சகிருத்தியத் திருநடனம் எனப்படும். இந் நடனத்தில் பிரணவத்துடன் கூடிய ஐந்தெழுத்து தத்துவம் அடங்கியுள்ளது. மனவாசகங் கடந்த தேவர் தனது உண்மைநெறி விளக்கத்தில்

"தோற்றம் துடியதனில் தோயுந் திதி அமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாம்
ஊன்று மலர்ப் பதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப் பதத்தே நாடு"

என்று பாடியுள்ளார்.

ஐந்து எழுத்துக்களையும், ஐந்தொழில்களையும் தொடர்புபடுத்தும் கீழ்வரும் பாடலில் காணலாம்.

"சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கெனவா வீசுகரம்
ஆர்க்கும் யகர மபயகரம் - பார்க்கிலிறைக்
கங்கிரு கரமடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான்"

| | | |
|---|---|---|
| உடுக்கை ஏந்திய கை- | படைத்தல்- | சி |
| அபயகரம் - | காத்தல்- | வ |
| தூக்கிய திருவடி - | அருளல்- | ய |
| அக்னி ஏந்திய கை - | அழித்தல்- | ந |
| ஊன்றிய திருவடி - | மறைத்தல்- | ம |

பஞ்சாட்சர மந்திரம் ஐந்து வகைப்படும்.

| | |
|---|---|
| ஸ்தூல பஞ்சாச்சரம் - | நமசிவாய |
| சூக்கும பஞ்சாச்சரம் - | சிவாயநம |
| காரண பஞ்சாச்சரம் - | சிவாயசிவ |
| மகா காரண பஞ்சாச்சரம்- | சிவ |
| மனு பஞ்சாச்சரம் - | நமசிவாயசிவ |

நமசிவாய மந்திரம் இம்மை, மறுமை பேறுகளைத் தரும். இவ்வுலக மாந்தர் ஆசைகளைத் துறந்து, பூசை செய்யாது ஐந்தெழுத்தை ஓதாது வீண் ஆடம்பரங்களில் காலத்தைக் கழிப்பவருக்கு எதற்கு வாய் உள்ளதென தருமபுர ஆதீனம் குருநாத சம்பந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி கேட்கிறார்.

"ஆசையறாய் பாசம் விடாய், ஆன சிவபூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய்
சினமே தவிராய், திருமுறைகள் ஓதாய்
மனமே ஊனக்கென்ன வாய்"

எமது கர்மவினைகள், வாசனைகளை நீக்குவதற்கு எந்த இடத்திலும், எந்நேரமும் திருவைந்தெழுத்தை ஓதி வரவேண்டும். தேவையற்ற எண்ணங்கள் பறந்தோடி விடும். உள்ளத்தால் நினைத்து உருக வேண்டும். சித்தர் ஒருவர், எவராவது எத்தனையோ பாவங்களைச் செய்திருப்பினும் ஐந்தெழுத்தை இடைவிடாது தியானிக்க எமது பாவங்கள் தீயில் பஸ்மமாவதுபோல் எரிந்து விடுமென்று பாடுகின்றார்.

"அஞ்சும் மூன்றும் எட்டதாய் அனாதியான மந்திரம்
நெஞ்சிலே நினைந்து கொண்டு நீர் உருச் செபிப்பீரேல்
பஞ்சமான பாதகங்கள் நூறு கோடி செய்யினும்
பஞ்சுபோல பறக்குமென்று நான்மறைகள் பன்னுமே"

கடவுள் மனிதனை எதற்காகப் படைத்தார்? படைத்த நோக்கத்தை நிறைவேற்றினானா? இல்லையே... தனது ஒரு சாண் வயிற்றுக்காக சதா உழைத்து மாய்கிறான். உணவு உடம்பிற்குப் போகிறது. உடம்பு மண்ணிற்குப் போகிறது. உயிர் நல்ல கர்மம் ஆற்றியிருப்பின் மோட்சத்திற்கும், தீய கர்மம் செய்திருப்பின் நரகத்திற்கும் போகும். இவ்வாறு தான் படைத்த மனிதனின் வாழ்வு வீணாவதைக் கண்ட கடவுள் கண்ணீர் வடிப்பதை திருக்கோட்டியூர் நம்பி என்ற வைணவப் பெரியாரின் "வார்த்தா மாலை" என்ற கிரந்தத்தில் வரும் இப்பாடல் உணர்த்துகிறது.

"விருத்தி சோறோடே போகும், சோறு உடம்போடே போகும்,
உடம்பு மண்ணோடே போகும், உயிர் கர்மத்தோடே போகும்,
ஈஸ்வரன் கண்ண நீரோட கை வாங்கும்"

திருமூலரும் பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும், சிவனின் திருவடிகளை வணங்காதவர் வீடுபேற்றை அடையார் என்றார். மேலும் அவர்

"சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரு மாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே" என்றார்.

திருவைந்தெழுத்திலுள்ள சிகரம் இறைவனையும், வகரம் அருளாகிய சக்தியையும், யகரம் உயிரையும், நகரம் திரோதான சக்தியையும், மகரம் ஆணவ மலத்தையும் குறிப்பன.

சிவாயநம என்று கூறுவதால் அவாயம் அறுகிறது. அதாவது துன்பம் தரும் ந, ம நீங்கிய சீவன் சிவசக்தியோடு ஆனந்த நிலையிலிருப்பதை கீழே கூறுகிறார்.

"சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே - சிந்தை
அவாயங் கெட நிற்க ஆனந்தமாமே"

மூடர்கள் திருவைந்தெழுத்தை மற்றைய எழுத்துக்கள் என கருதுவர். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பறுக்கும், தலைவிதியை மாற்றுமென்பதை அறியார். உண்மையை அறிவாராயின் பெரும் பேற்றைப் பெறுவார்.

“பழுத்தன ஐந்தும் பழமறையுள்ளே
விழித்தங் குறங்கும் விளைவு அறிவாரில்லை
எழுத்தறி வோமென் றுரைப்பர்கள் ஏதர்
எழுத்தை யழுத்தும் எழுத்தறியாரே”

அப்பர் பெருமானை சமணர்கள் கல்லுடன் கட்டிக் கடலில் விட்டபோது எம்பிரானை வணங்குவேன் என்று அருட்கடலில் மூழ்கி நமசிவாய பதிகத்தால் மாலை தொடுத்து ஐந்தெழுத்தை ஓதியதால் கல்லுத் தெப்பமானது. பிறவிக் கடலைக் கடக்க உதவியது. “சொற்றுணை வேதியன் சோதி.... நற்றுணையாவது நமச்சிவாயவே” எனும் தேவாரப் பதிகமாகும்.

சம்பந்தரும், மனைவியும் திருமணத்திற்கு வந்திருந்த சுற்றத்தார், தொண்டர்கள், அனைவருடனும் திருநல்லூர் பெருமணம் கோவிலில் தோன்றிய சோதியில் “காதலாகி கசிந்து.... நாதன் நாமம் நமச்சிவாயவே” என்ற பதிகம் பாடி சோதியுட் கலந்தனர்.

“கொல்வாரேனும் குணம் பல நன்மைகள்
இல்லாரேனும் இயம்புவராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே”

ஐந்தெழுத்தை செபிக்க அஞ்ஞானம் விலகிப் பாவம் ஓடும்.

“நமவென்னு நாமத்தை நாவில் ஒடுக்கிச்
சிவமென்னு நாமத்தைச் சிந்தையுளேற்ற
பவமது தீரும் பரிசுமதற்றால்
அவமதி தீரும் அறம் பிறப்பன்றோ”

இப்பஞ்சாச்சர மந்திரம், பஞ்சபூதங்களான பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகியவற்றிலும் பரவியுள்ளது. ந- பிருத்வி, ம- அப்பு, சி- வாயு, வா- வாயு, ய- ஆகாயம். நிலம், நீர், நெருப்பு, உயிர், நீள் விசும்பு, நிலாப் பகலோன் புலனாய மைந்தனோடு எண் வகையாய்ப் புணர்ந்து நின்றான் என்பது திருவாசகம்.

தமிழ் மூதாட்டி ஔவையாரும் ஐந்தெழுத்தைச் சொல்வதால் அபாயம் நீங்கி விடும். இல்லையென்றால் துன்பம் பெருகி வாழ்க்கையை மாற்றிவிடுமென்றார்.

சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை
உபாயம் அதுவே மதியாகும் - அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்”

சிவவாக்கியர் சித்தரின் பாடலைப் பாருங்கள்.

சிவாய அஞ் செழுத்திலே தெளிந்து தேவராகலாம்
சிவாய அஞ் செழுத்திலே தெளிந்து வாகனமாகலாம்
சிவாய அஞ் செழுத்திலே கொண்ட வான் பொருள்
சிவாய அஞ் செழுத்திலே கொற்றா முண்மையே”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி 'விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நல்வழி காட்டுமே"

நிலையில்லாத இம்மாய வாழ்விலே நாமும் பஞ்சாட்சர மந்திரத்தை அனுதினமும் ஓதிப் பாவப் பிணிகளை நீக்குவோமாக.

"தும்மலிருமல் தொடர்ந்த போழ்தினும், வெம்மை நரகம் விளைந்த
போழ்தினும், இம்மை வினையடர்ந் தெய்தும் போழ்தினும்
அம்மையினுந் துணை அஞ்செழுத்துமே"

மாணிக்கவாசகருக்கு குதிரை வாங்க செல்லும்பொழுது திருப்பெருந்துறையில் குருந்த மரநிழலில் சிவபெருமான் குருவாக எழுந்தருளி உபதேசித்தது பஞ்சாட்சர மந்திரமே. மாணிக்க வாசகர் தனது சிவபுராணத்தில் "நமசிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க" என்றே தொடங்குகின்றார்.

"போற்றியோம் நமசிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோம் நமசிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோம் நமசிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோம் நமசிவாய சய சய போற்றி"

மேலும் அவர் "நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநமவெனப் பெற்றேன்" என்றார்.

அப்பர் பெருமான் கருவாய் கிடந்துன் கழலே.... தேவாரத்தில் திருவாய் பொலியச் சிவாயநமவென்று நீறணிந்தேன் எனப் பாடுகிறார்.

சுந்தரர் தான் இறைவனை மறந்தாலும் தனது நாவானது திருவைந்தெழுத்தை மறவாது ஓதும் என்பதை "மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப்பாதமே...." என்ற தேவாரத்தில் "நற்றவா உனை நான் மறக்கினுஞ் சொல்லும் நா நமசிவாயவே" என்றல்லவோ பாடுகின்றார்.

சம்பந்தர், உறக்கத்திலும், விழிப்பிலும் மனம் கசிந்து உள்ளன்போடு உருகிய மார்க்கண்டேயர் சிவனைத் தொழுது கூற்றுவனைக் காலால் உதைக்கப் பண்ணியது அஞ்செழுத்தே எனப் பாடுகின்றார்.

"துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தோறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செழுத்துமே"

ஆணவ மலத்தை அழித்துப் பிறவி நோயை நீக்க வல்லது.

"வாயிலே வைக்கும் அளவின் மருந்தாகித்
தீய பிறவி நோய் தீர்க்குமே - தூயவே
கம் பெருமா தேவியொடு மன்னு கயிலாயத்
தெம் பெருமா னேரஞ் செழுத்து".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கருட புராணம்

(தொடர்ச்சி...



-திரு இரா. செல்வவடிவேல்

## சிறந்த நெறி முறைகள்

ஒருவர் தலயாத்திரை புரிவதால் ஏற்படும் பயன்கள் பற்றியும் அவ்வாறு யாத்திரை செய்யும்போது இறந்துவிட்டால் ஏற்படும் பயன் பற்றியும் கேட்கும் கருடன், மானிடர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளைப் பற்றியும் விளக்குமாறு ஸ்ரீமத் நாராயணனிடம் வேண்டுகின்றார். அதற்கு பகவானும் விளக்கமளிக்கிறார்.

ஒருவர் மனத்தாலும் செயலாலும் தூய்மையுள்ளவராக இருந்து உணவுக்கு முக்கியத்துவம் கொடுக்காது நியமனத்துடன் தர்ப்பணம் செய்து இறைவனையே தியானம் செய்து கொண்டு இறக்க நேரின் அவர் நல்லுலகை அடைவர். அதையே பிரயோபவேசம் என்பர். இவ்வாறு ஒருவர் எத்தனை நாட்கள் இந்த முறைகளைக் கடைப்பிடித்து வந்தனரோ அத்தனை நாட்களுக்கு வேள்வி செய்த பலன் அவருக்குக் கிடைக்கும்.

உலக நடைமுறையின் உண்மையையும் வாழ்வியலின் இரகசியத்தையும் தெய்வீக இயலின் மேன்மையையும் உணர்ந்து இனி உலக வாழ்க்கை வேண்டாம் என்று தீர்மானித்து மேற்கூறியவாறு பிரயோபவேசம் செய்வர் நல்லுலகை அடைவர்.

மேலும் ஒருவர் தாம் இறந்து விடுவோம், இனி வாழ வேண்டியதில்லை என்பதை உணர்ந்து அதன் பின் நல்ல முறையில் பிரேயோபவேசம் செய்துவிட்டு பின் அதனின்றும் நீங்கி மீண்டும் இல்வாழ்க்கையில் ஈடுபட விரும்பினால் அதுவும் தவறில்லை. அவர் வேத சாஸ்திரமறிந்த சான்றோர் மூலமாக அதற்கான பரிகாரம் செய்துவிட்டு பின் தர்ம நெறிகளில் ஒழுகிவர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் சந்நியாச ஆசிரம தருமத்தை ஏற்று அந்நிலையில் இறக்கநேரின் அவர் சந்நியாசம் ஏற்ற நாள் முதல் இறந்துபோன நாள் வரையிலுமுள்ள நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு யாகங்கள் புரிந்த பயன்களைப் பெறுவர்.

நோய்களால் துன்பமடைந்தவர் தமக்கு மரண சாவை நெருங்கி விட்டது என்று எண்ணி சந்நியாச ஆசிரமத்தை ஏற்று பின் நோய் நீங்கப் பெற்றதும் மனம் மாறி மீண்டும் இல் வாழ்க்கையை ஏற்க விரும்புவது வரவேற்கத்தக்கது அல்ல. அவர் தீராத நோய்க்குள்ளாவதோடு மாபாவியுமாவார். அவரைப் போன்றவரை பிறர் பார்ப்பதே பாவமாகும்.

ஒருவர் தம்வீடு, மனைவி குழந்தை மற்றும் உற்றார் உறவினர்களை விட்டு வைராக்கியத்துடன் நீண்ட தூரம் தீர்த்த யாத்திரை செய்ய வேண்டும். அத்தகயவருக்கு தேவாதி தேவர்களெல்லாம் வேண்டியவற்றைக் கொடுப்பர். அவ்வாறு தீர்த்த யாத்திரையின் போது ஒரு புனித தலத்தில் இறந்து விட்டால் அவர் சொர்க்க லோகத்தை அடைவர்.

ஒருவர் இறக்க வேண்டும் என்று ஒரு புனித தலத்தில் நீண்ட காலம் வசித்திருந்து அவ்வாறின்றி வேறொரு இடத்திற்குச் செல்ல நேரிட்டு அங்கு இறக்க நேர்வது என்பது சிறிதளவு தீவினையாலேயே உண்டாவதாகும். அத்தகையவர் மறு பிறவியில் காவிரி நதிக்கரையில் ஆசாரமிகுந்த குலத்திலும் குடும்பத்திலும் பிறந்து சகல சாஸ்திரங்களும் அறிந்த நல்லொழுக்கமுள்ளவராக வாழ்ந்து இறுதியில் நல்லுலகையே அடைவர்.

ஒருவர் இன்ன தலத்தில் தான் உயிர்விடுவேன் என்று தம்முள் தீர்மானித்துக் கொண்டு அவ்விடம் சென்று பின் மனம் மாறி மீண்டும் தன் இருப்பிடத்துக்கே வருவாரானால் அவர் மகா பாவியாவார். அவர் அதற்குண்டான பிராயச் சித்தம் செய்துகொள்ள வேண்டும்.

தனக்கு இறுதிக் காலம் நெருங்கி விட்டதை உணர்ந்த ஒருவர் ஸ்ரீ விஷ்ணு தலமொன்றில் உயிர்விட எண்ணி அதற்கான யாத்திரையை மேற்கொண்டால் அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் ஒரு பசுவைத் தானம் செய்த பஜனை அடைவர். அவர் மனம் மாறி எந்தக் காரணத்திலாவது தம் இருப்பிடம் திரும்ப நேரின் அடியொன்றுக்கு ஒரு பசுவைக் கொன்ற தோஷத்தை அடைய நேரும்.

ஒருவர் இல்வாழ்க்கையில் செய்த பாவங்கள் அவர் புனித தலங்களில் செய்யும் இறை வழிபாட்டாலும் இறைத் தொண்டாலும் தீர்த்தப் பிரசாதங்களைப் பெறுவதாலும் நிவர்த்தியாகி விடும். ஆனால் புனித தலங்களில் ஏதேனும் பாவம் செய்து விட்டால் அந்தப் பாவத்தை வேறு எதனாலும் எந்த நாளிலும் போக்கிக் கொள்ள முடியாது.

ஒருவர் தம் தாய்- தந்தை உடன் பிறந்தவர் உற்றார் உறவினர்கள் இவர்களைப் புறக்கணித்து அன்னியருக்கு உதவி செய்வதை மேலானதாகக் கருதுகின்றனர். அதுவே தான தருமம் என்றும் தியாகம் என்றும் கூறிக் கொள்வர். இது முற்றிலும் தவறானது. தம் பெற்றோருக்கும் தம்மைச் சார்ந்த மற்றவருக்கும் கொடுத்து உதவுவதே மேலானதாகும்.

ஒருவர் தம் தந்தைக்குப் பொருள் முதலானவற்றைக் கொடுத்துக் காப்பாரேயானால் அவர் சான்றோருக்குத் தானம் கொடுத்த புண்ணியத்தை விட நூறு மடங்கு அதிகம் பெறலாம். அதைப் போன்று தான் பெற்ற தாயாருக்குக் கொடுத்து ஆதரித்தால் ஆயிரம் மடங்கு புண்ணியத்தை அடையலாம். உடன் பிறந்த சகோதரருக்கும் சகோதரிக்கும் கொடுத்து உதவ வேண்டும். அதனால் பிறருக்குக் கொடுத்து உதவும் புண்ணியத்தை விட பன்மடங்கு புண்ணியம் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் தாம் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை நல்ல முறையில் செலவு செய்ய வேண்டும். மற்றவருக்கும் பகிர்ந்தளித்து அதன் பலனை அவர்களும் அடையுமாறு செய்ய வேண்டும்.

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் இன்று இல்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள் இறக்கப் போவது நிச்சயம். அதை மறந்து தம் உடலைப் பலவகையிலும் ஆடை ஆபரணம் போன்ற ஆடம்பரப் பொருள்களால் அலங்கரித்தும் சம்சார சாகரத்திலும் மூழ்கித் தவித்துக் கொண்டுமிருக்கின்றனர். அத்தகையவர்களைக் கண்டு எமதர்மன் ஒரு நாளில் தன் பாசக்கயிற்றில் சிக்கப் போகிறான் என்று எண்ணி ஏளனமாக நகைப்பான்.

இந்தப் பூமியும் அதிலுள்ள பொருள்களும் ஒருவருக்கே உரியவை அல்ல. அதை உணராத மக்கள் தம்முடையது என்று உரிமை பாராட்டி பிதற்றிக்கொண்டு திரிகின்றனர். இவர்கள் இறுதியில் செல்லும்போது அரைஞாண் கயிற்றையும் சொந்தமாகக் கொண்டு போவதில்லை.

ஒருவர் ஒழுக்கமுள்ளவராகவும் நல்ல நெறியிலும் வாழ்ந்து மற்றவருக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து வாழ்வாரேயானால் நற்கதி அடைவர். அத்துடன் பல தான தருமங்களைப் புரிந்தவரும் பூதானம் செய்தவரும், புனித நீராடியவரும், வேள்விகள், தவம் புரிந்தவர்களும் போரில் புறங்காட்டாமல் போரிட்டு மடிந்த வீரரும் இகத்திலும் பரத்திலும் பேரின்பமடைவர்.

(தொடரும்...

சந்நிதியான் ஆச்சிரமம்
சந்நிதியான் ஆச்சிரமம்
ஆற்றங்கரை வேலவன்
அருள் பெற்ற ஆச்சிரமம்

அடியவரை காத்துவரும்
சந்நிதியான் ஆச்சிரமம்
சாலச் சிறந்தொரு
அமுதளிக்கும் ஆச்சிரமம்

ஞானச் சுடரொளியை
ஏற்றி நிற்கும் ஆச்சிரமம்
ஞான பொழிப்புரையை
பரப்பி நிற்கும் ஆச்சிரமம்

சைவம் தழைத்தோங்க
துணைபுரியும் ஆச்சிரமம்
பற்பல தொண்டாற்றி
புகழ் ஓங்கும் ஆச்சிரமம்

- சு. தங்கேஸ்வரராசா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வாழ்க்கையில் சமயம்

– செல்வி செ. ஜடா அவர்கள் –

மனிதர்கள் தமது சமய நெறிகளைப் பின்பற்றியே தமது வாழ்க்கையை நடாத்தி வருகிறார்கள். படுக்கையிலிருந்து கண் விழிப்பது தொடக்கம் மீண்டும் படுக்கை செல்லும் வரையான செயற்பாடுகளை தமது சமய முறைகளைப் பின்பற்றியே நடக்கின்றனர். இதனால் சமயம் வேறு வாழ்க்கை வேறு என்று கருதமுடியாத அளவுக்கு சமயம் மனித வாழ்வில் ஒன்றிவிட்டது.

சைவசமயிகளான நாங்கள் நமது வாழ்வியற் கருமங்கள் அனைத்தையும் இறை சிந்தனையுடனே ஆரம்பித்து, இறை சிந்தனையுடனே நிறைவேற்றுகின்றோம். நமது முன்னோர்கள் வாழ்ந்து காட்டிய வழியின்பால் நமது வாழ்வு சமயத்துடன் பின்னிப் பிணைந்ததாகக் காணப்படுகின்றது.

நமது அன்றாட கருமங்களை இறை சிந்தனையுடன் நெறிப்படுத்த வீடு, பாடசாலை, சமூக நிறுவனங்கள், ஆலயம் ஆகியவற்றினூடாக செயலுருவம் கொடுக்கின்றோம்.

நமது வீடுகளில் இடம்பெறும் அன்றாடக் கருமங்கள் யாவும் இறை சிந்தனையுடனேயே ஆற்றப்படுகின்றன. அதிகாலை நித்திரைவிட்டு எழுந்ததும் "சிவசிவ" என்று சொல்லிக்கொண்டு எழுகின்றோம். எழுந்ததும் இரண்டு கைகளையும் பார்த்து லட்சுமி, சரஸ்வதி, பார்வதி என தெய்வங்களை நினைத்து கண்ணில் ஒற்றி கூப்பி வணங்கி எழுந்து எங்கள் கடமைகளை செய்கின்றோம். அந்த நேரம் தொடக்கம் எங்களை அறியாமலே வழிபாடு தொடங்குகின்றது. "காலையில் சூரிய நமஸ்காரம் செய்வது வீடுகளில் உள்ள சுவாமி அறையில் உள்ள தெய்வப் படங்களுக்கு பூவும் நீரும் வைத்து தோத்திரப் பாடல்களைப் பாடி விபூதி அணிகின்றோம்.

அன்றாடம் நாம் மேற்கொள்ளும் அனைத்து கருமங்களையும் இறை பக்தியுடனே மேற்கொள்கின்றோம்.

விசேட தினங்களில் மேற்கொள்ளப்படும் செயல்களும் இறை சிந்தனையுடன் எமது கலாச்சாரத்தைத் தழுவியனவாக அமைகின்றன. விரதங்கள், பண்டிகைகள், சடங்குகள் போன்றவற்றில் இறை சிந்தனை மேலோங்கிக் காணப்படுகின்றது.

சைவ சமயத்தவர் ஒருவரது பிறப்பிலிருந்து இறப்பு வரையும் அதன் பின்னரும் ஆற்றப்படும் அனைத்து சடங்குகளும் இறைசிந்தனையுடனேயே ஆற்றப்படுகின்றன.

உடலில் உயிர் இருக்கும் வரை ஆற்றப்படுகின்ற கிரியைகள் பூர்வ கிரியைகள் என்று சொல்லப்படுகின்றது. பெயர் சூட்டுதல், ஏடு தொடங்குதல் திருமணச் சடங்குகள் உட்பட கிரியைகள் இறை சிந்தனையுடனேயே மேற்கொள்ளப்படுகின்றன.

உயிர் உடலை விட்டுப் பிரிந்ததும் ஆற்றப்படுகின்ற கிரியைகள் அபரக் கிரியைகள் எனப்படும். இதில் மரணச் சடங்கு பிரதானமானது. மரணக் கிரியைகள் இறை சிந்தனையுடன் மேற்கொள்வது ஆன்மா மோட்சத்திற்கு கொண்டு செல்வதற்காகச் செய்யும் கிரியைகள் எனக் கூறப்படுகின்றது. காடாற்றல், அந்தியேட்டி, சபிண்டீகரணம், மாளயம் போன்றவை இறந்த ஆன்மாவை நினைத்து மேற்கொள்ளப்படுபவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலை வாழ்க்கையை எடுத்துக் கொண்டால் அங்கேயும், இறைசிந்தனை செயற்பாடுகள் மேற்கொள்பவற்றை சிறிது நேரம் சிந்தித்துப் பார்ப்போம்.

ஆரம்பக் கல்விக்கு வித்திடும் “ஏடு” தொடக்கல் முதல் கல்விக் காலத்தில் எமது பெற்றோரால் புகட்டப்பட்ட சமய ஆன்மீக மரபுகளால் மேலும் மெருகூட்டப்படுகின்றது.

சைவ சமயத்தவர்களைப் பொறுத்த வரையில் சமய நெறியினை மேம்படுத்தும் இடமாக ஆலயங்கள் அமைகின்றது. இறைவனை பல்வேறு வடிவங்களில் அமைத்து அவற்றுக்கென ஒழுக்க நெறிகளை வகுத்து அதன் வழியில் வாழும் பக்குவத்தினை சைவ சமயத்தவர்கள் ஏற்படுத்தியுள்ளனர். நமது முன்னோர்கள் காலத்திலிருந்தே இந்த ஒழுக்க நெறிகள் பேணப்பட்டு வருகின்றன.

ஆலயத்தின் ஒவ்வொரு அமைப்பிலும் சமயத்தின் தனித்தன்மை உள்ளடக்கியே காணப் படுகின்றது. ஒவ்வொரு அமைப்பும் மனித வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்ததாக உள்ளன.

## எம்பெருமானே

எம்பெருமானே உன்னை வாயார
வாழ்த்த வார்த்தைகள் கோடி
புதையுண்டு கிடந்த போதும்
உன் அடிமையான என்னை
ஏன் வாட்டுகிறாய்
என் ஆத்மா பாவம்
செய்து விட்டதா?
இல்லை உன் பாத கமலத்தை
தொழுது கிடந்து...
பரமன் அடி சேர வேண்டும்
என்பதா உன் அவா!
எண்ணற்ற வார்த்தைகள்
என் நெஞ்சில் தேங்கி
கிடக்கின்றது...
என் ஆத்மாவை தூயதாக்க
வந்தேன் செல்வச்சந்நிதியான்
ஆச்சிரமத்துக்கு
இவ்விடம் விட்டு செல்லுகையில்
என் ஆத்மா ஆண்டவனின்
அடிமையாக வேண்டும்
செல்ல மனமின்றி செல்லுகின்றேன்
என் பணியைத் தொடரவென்று
ஆசிகள் நீ வழங்க வேண்டும்
அப்பா ஆசிகள் நீ வழங்க
வேண்டுமப்பா...

-செல்வி சிகாமணி வெள்ளிமலர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

ஆம்! ஆச்சிரம சுவாமிகள் தமது உரையில் தமக்கு கடிதமூலம் பல இடங்களிலிருந்தும் பல்வேறு வகையான உதவிகள் கேட்டு வந்து கொண்டிருக்கின்றன என்றும் அதில் சமனப்பிட்டி சாரதாதேவி அறநெறிப் பாடசாலையினரதும் கடிதம் என்னைக் கிட்டியவேளை ஒருமுறை நேரிற் சென்று இவர்களின் நிலையைப் பார்த்து உதவுவோம் என்ற நோக்கத்திலேயே நாமிப்பொழுது இங்கு வந்திருக்கிறோம். உண்மையிலேயே உங்கள் ஆர்வம், தொழிற்பாடுகள் சாதனைகள் இவற்றைப் பார்க்கும்பொழுது எங்கள் மனம் குளிர்கிறது. இவ்வளவு வசதியீனங் களுக்குள்ளும் இவ்வளவு சிறப்பாகத் தொழிற்படும் உங்களையும் உங்கள் பெற்றோர்களையும் உங்களுக்குக் கற்பிக்கும் இவ் ஆசிரியர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது. அங்கே அரையுங் குறையுமாக எழுந்து கொண்டிருக்கும் உங்கள் பள்ளிக் கட்டடம் கூரைக்காகக் காத்துக் கொண்டிருப்பதை நேரில் காண்கிறோம். இவற்றை உங்கள் கடிதம் இவ்வளவுக்கு எங்களுக்கு உணர்த்தியிருக்கிறது. சந்நிதியானின் தூண்டுதலால் தான் இச்செயற்பாடு நடைபெறுகிறது. எனவே இம்மண்டபத்திற்குரிய 110 சீற்றுக்களையும் அடுத்த மாதமளவில் உங்கள் கரங்களில் கிட்டுவதற்கு ஆவன செய்கின்றோம். இது சந்நிதியானின் சங்கல்பமாக அமைந்துள்ளது என்றதும் பிள்ளைகளினதும் பெற்றோர்களினதும் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. அனைவரும் கைகொட்டி ஆனந்தித்தார்கள். சுவாமிகள், மேலும் உங்கள் ஆசிரியைகளும் மிகவும் அர்ப்பணிப்புடன் வேதனமின்றி தொழிற்படுவதைப் பார்க்க முடிகிறது. அவர்கள் 17 பேருக்கும் மாதாந்தம் 1000 வீதம் உங்கள் அதிபரின் கணக்கு இலக்கத்திற்கு அனுப்பி வைக்கப்படும். எனவே அதற்குரிய வங்கிக் கணக்கு இலக்கத்தையும் தாருங்கள் என்றதும் மக்களின் உள்ளம் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்ததையும் சிறியேனால் உணரமுடிந்தது.

அதனைத் தொடர்ந்து அனைத்துப் பிள்ளைகளிற்கும் பெற்றோர்க்கும் சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. அவர்கள் எம்மை மதிய உணவை அருந்தித்தான் செல்ல வேண்டும் என்று அன்பாக அழைத்தனர். ஆம்! அங்கே மதிய உணவிற்காக அந்த ஆசிரியர்களில் ஒருவரின் வீட்டிற்குச் செல்கிறோம். அன்பான அடக்கமான இரண்டு அறை விறாந்தை குசினி அறைகொண்ட வீடு. அழகாக விறாந்தையில் படங்கு விரித்து பந்திப் பாயில் அமர வைத்து உணவு பரிமாறத் தொடங்கினர். முதலில் அனைவர்க்கும் பெரிய கிளாசில் பளிங்கு போன்ற தெளிவான நீரைப் பரிமாறியபின் வெள்ளை வெளேரென்ற தும்பைப் பூப்போன்ற சாதத்துடன் நிலமைக்கேற்ற வகையில் மிகவும் அற்புதச் சுவையுடன் கறிகள் படைத்திருந்தமை சிறப்பானது. ஆம் இந்தவேளை எங்கும் மரக்கறிகளுக்கு உள்ள தட்டுப்பாடு மரக்கறிகளின் அதிஉச்ச விலை உயர்வு விருந்து வைப்பவர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் காரணிகளில் ஒன்றாக அமைந்திருந்தது. ஆனால் இவர்கள் எமக்கு வழங்கிய குழம்பு (தூள்கறி) வித்தியாசமானது. பருப்பும் உருளைக்கிழங்கும் சேர்த்து மிளகாய்த்தூள் குழம்புமின்றி பிரட்டலுமின்றி ஓர் அற்புத சுவை கொண்டதாக பரிமாறியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. நாங்கள் சபைகளில் பருப்பு என்றால் தூளில்லாத சாம்பார் போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவு தண்ணிப் பதத்தில் வைப்போம். உருளைக் கிழங்குப் பிரட்டல்தான் எம்மவர்களின் கறி. ஆனால் இவர்களின் சமயோசித பாணி அற்புதம். அத்துடன் அருமையான கட்டித் தயிரும், ரசமும் சுவைக்கு மெருகூட்டியது. அனைவரும் ஆனந்தமாய் ஒரு பிடி பிடித்துவிட்டு எம்போன்றவர்கள் கமகம இரசத்தையும் குவளையில் வாங்கிப் பருகினோம்.

இவர்களது அன்பான உபசரிப்பில் இருந்து விடுபட இப்போ நேரம் பி.ப. 1.15 ஆக இருந்தது. உண்மையில் எமது மதிய உணவு மட்டக்களப்பில் ஓர் அன்பர் வீட்டிலேயே ஒழுங்காகி இருந்தது. இவர்கள் இப்படி எமக்கு முன்னறிவித்தலின்றி இத் தூரத்தில் உணவு வழங்கி எம்மைத் திணறடித்து விட்டதை எமது பயணம் தொடர்ந்து கொண்டிருக்கும் பொழுது எம்மவர்கள் தங்களுக்குள் பிரலாபித்துக் கொண்டிருந்தனர். அதேவேளை இச்சிறார் களின் கல்விப் பணிக்கு அந்த ஆற்றங்கரையானே நேரடியாகத் தரிசிக்க வைத்து இவர் களுக்கும் உதவுவது எம் பணிகளில் ஒன்று எனக் காட்டி வைத்தான் என்பதும் இப் பயணம் எமக்கு உணர்த்துவதாக அமைந்தது. பி.ப. 3.00 மணியளவில் எமது வாகனம் மட்டுநகர் வாவிக்கரையோரத்தில் அமைந்த அம்பிகை ஆலயத்திற்கு அருகிலுள்ள சித்தாந்த பண்டிதை திருமதி சிவானந்தஜோதி ஞானசூரியம் அவர்களின் இல்லத்தை அடைந்தது. இங்குதான் எமது மதிய உணவு என முன்பு எமது திட்டமாக இருந்தமையில் அவர்களும் மிகமிக ஆர்வமாக எம்மை வரவேற்கக் காத்து இருந்தனர். இங்கு சூழல் நேர்மாறாகக் காணப்பட்டது. மிக அடர்த்தியான நகரப் பாங்கான குடியிருப்புகள். எமது யாழ் நகரப் பாங்கமைந்த ஒரு ஆடம்பர வீட்டில் மேலைத்தேய பாணியில் கதிரை மேசைச் சாப்பாடாக அற்புதமாக அமைத்து, "கட்டாயம் சாப்பிட்டே ஆகவேண்டும். உங்களுக்காக சமைத்துக் காத்திருக்கின்றோம்" என்று அன்புக் கோரிக்கை விட்டமைக்கமைவாக எம்முள் பலர் சாப்பிட அமர்ந்தனர். இவர்களும் மிகவும் அன்பான உபசரணையுடன் திணறடித்துக் கொண்டிருந்தனர். எம்மில் சிலர் சாப்பிடவில்லை. அவர்களுக்கு ஓரிரு பார்சல்களும் தந்து அன்புடன் அனுப்பி வைத்தனர். இவரும் ஓர் சமயப் பிரசாரங்கள் மட்டுமன்றி ஞானச்சுடர் வாசகியும்கூட இவரது துணைவரும் ஓர் ஓய்வுநிலை வங்கியாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. சாப்பிடாத எம்போன்ற வர்களுக்கு தேநீர் வடை தயிர் என்பன விசேட கவனிப்பாக இருந்ததையும் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

அனைவரும் அவர்களிடம் இருந்து அன்பு விடைபெற்று மீண்டும் எமது பயணம் தொடர்கிறது. பி.ப 4.00 மணியளவில் தொடங்கிய பயணம் இரவு 7.00 மணியளவில் உகந்தை முருகன் ஆலயஞ் சென்றடைந்தது. அங்கு இரவு தங்கி அதிகாலை 5.00 மணியளவில் துயிலெழுந்து அனைவரும் நீராடி உகந்தை முருகனின் அதிகாலை 7.00 மணிப் பூசையில் பங்குபற்றி அவனைத் தரிசித்து அர்ச்சித்து பிரசாதம் பெற்றோம். எம்மில் சிலர் இங்கு இதற்கு முன் வராதவர்களும் இருந்தனர். எனவே அவர்கள் அருகிலுள்ள மலையில் ஏறி அவ் அற்புதச் சுனைநீர்க் குன்றுகளையும் பார்த்து வணங்கினார்கள். அருகிலுள்ள ஓர் சிறு தேனீர்ச் சாலையில் காலை உணவாக தேநீரும் சுடச்சுட றொட்டிகளும் உண்டபின் எமது பயணம் காலை 9.15 மணிக்கு கோமாரியில் உள்ள அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளைக் காண்பதற்காகத் தொடர்கிறது. 11.00 மணியளவில் கோமாரி அறநெறிப் பாடசாலையில் பிள்ளைகளை ஒழுங்குபடுத்தி அதன் ஆசிரியர் திரு சுபோகரன் எங்களுக்காக அங்கே காத்திருந்தார்....

(தொடரும்...

*முயற்சி செய்யும் வரையில் எவருக்கும் திறமை தெரிவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயப் பண்பாட்டில் பாம்பு வழிபாடு பன்முகப் பார்வை

– திரு கு. கோபீராஜ் அவர்கள் –

இந்து சமயமும் அதனைச் சார்ந்த பண்பாட்டு விழுமியங்களும் உலகெங்கிலும் நன்கு பரவி இருந்ததை வரலாற்று நூல்களில் இருந்து அறியமுடிகின்றது. இயற்கையின் ஒவ்வொரு கூறுகளையும் தெய்வீக நிலைப்படுத்தி வழிபட்டு வருவதற்கு பிரதான காரணமாக தேவையும், பயமும் அமைகின்றன. இந்த வகையில் பாம்பு வழிபாடு முதன்மையானது. இது உலகளாவிய ரீதியில் காணப்படுகின்றது. இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் பாம்பு வழிபாடு முதன்மையானது. இதிலும் ஐந்து தலை நாகத்தை முன்னிலைப்படுத்தும் "நாகம்மாள்" வழிபாடு சிறப்பானது அதேபோல நாகதம்பிரான் வழிபாடும் சிறப்பானது. ஈழத்தில் நாகதம்பிரான் ஆலயங்கள் நாகர் கோயில், புளியம்பொக்கனை, புத்தூர், நவாலி, செம்பியன்பற்று, பொன்னாலை, மல்லாகம், அனலைதீவு, புளியம்தீவு போன்ற பகுதியில் முதன்மையான ஆலயமும் நாகம்மாள் ஆலயமாக நயினாதீவு, சண்டிலிப்பாய், நவாலி, உரும்பிராய், கோண்டாவில் அராலி போன்ற இடங்களில் ஐந்து தலை நாகம் அருட்சக்தி வடிவாக அமைந்துள்ளது.

நாக வழிபாடு ஆதிக்குடிகள் வழிபாடு என்பதை பாளி நூல்களில் காணப்படும் ஜதீகங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஈழத்தின் வடபால் அமைந்த நாகதீபம் நாக வழிபாட்டுக்கு உரிய இடம் என்றும் பாம்பின் சிலைகள் மரங்களின்கீழ், ஆற்றோரங்கள், கோயில்கள், நீர்நிலை போன்ற இடங்களில் வைத்து வழிபடப்பட்டன. இதைவிட கிராமிய வழிபாடாக புற்றினை வழிபடுவதனைக் காணலாம். அத்துடன் இந்து மக்கள் மட்டுமல்லாது பௌத்த மதத்தினரும் வழிபட்டு வந்ததை அவதானிக்கலாம்.

நவக்கிரகங்களில் ராகு, கேது நிலைகளில் பாம்பு வழிபாடு இடம்பெறுவதும் கிரகங்களில் ஏற்படும் மாற்றங்கள், மனித வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்துவதனால் வலிமையான நம்பிக்கை மக்கள் மனங்களில் காணப்பட்டது. "நாகதோசம்" உள்ள மக்கள் தோச நிவர்த்தி மேற்கொள்ள பாம்பு வழிபாடு மேற்கொள்வதும் "நாகசாந்தி" "நவக்கிரகசாந்தி" போன்ற அபிஷேகம் செய்வதும் காணலாம். இந்தியாவில் திரு நாகேஸ்வரத்தில் நாகராஜ சந்நிதிக்கு ராகு காலத்தில் அபிஷேகம் செய்து ராகு, கேது தோசம் நிவர்த்தி செய்வதும். நாகராஜ மேனியில் பால் அபிஷேகம் செய்தால் அது நீல நிறமாக மாறும் அதிசயமும் உண்டு. நாகதோசம் நீக்கும் தலமாக திருநீர்மலை அரங்கநாத பெருமான் ஆலயத்துக்கு மக்கள் செல்வதனைக் காணலாம்.

அமெரிக்காவில் உள்ள இந்தியர் பாம்புகளை மழை, மின்னலுடன் தொடர்புபடுத்தி பேசியதுடன் பாம்பு மனிதரையும், விலங்குகளையும் விழுங்கிவிடும் என்பதனால் அதிக நம்பிக்கையுடன் வழிபட்டதுடன் கொம்பு முளைத்த பாம்பு இருப்பதாயும் அம்மக்கள் கருதினர். மொசபத்தேமிய நாகரிகத்தில் பாம்பு வழிபாடு இடம்பெற்றதற்கான சான்றாக கல்லிலும், சுட்ட செங்கல்லிலும், பானைகளிலும் பாம்புருவங்கள் செய்யப்பட்டிருந்தன. அவுஸ்திரேலிய மக்கள் பாம்பு வழிபாட்டினை இயற்றியதாகவும் யப்பான் நாட்டில் பாம்போடு தொடர்புடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீகக் கதைகள் பல காணப்படுகின்றன. பாம்பு வழிபாடு, அன்பு காட்டுவதற்கும், அச்சமூட்டுவதற்கும், நன்றி உணர்வாகவும், தோச நிவர்த்தியாகவும் வழிபடப்படுகின்றது. உலகில் எத்தனையோ உயிர்கள், இயற்கைகள் இருப்பினும் பாம்பு வழிபாடு முதன்மை பெறுவதற்கான காரணங்கள் விரைவாகச் செல்வதும், நச்சு பாம்பு கடித்தலும் நச்சு பரவலும் வெளியே நீட்டப்படும் நாக்கு, கடும் குளிர், கடும் வெயிலையும் தாங்கும் திறன் நூற்றுக்கணக்கில் முட்டையிடும் குஞ்சு பொரிக்கும், நீரிலும் விரைவில் நீந்தும், அழகாக படம், தோலை உரிக்கும், வியப்பாக பின்னி தழுவும் திறன். பலவகை வர்ணக் கலப்புக்கள், சுடுகாடு, புற்று, பழைய சுவர் போன்ற இடங்களில் வாழ்தல் 2,5,7 தலைகள் (கற்பனைக்கு இடம் கொடுத்தது) கொண்டது. இது இறைவனால் பாம்புக்கு கொடுக்கப்பட்ட வரங்கள்.

விஷ்ணு பள்ளி கொள்வதும் பாம்பிலேயே ஆகும். வல்லிபுர ஆழ்வார் வரலாற்றை நோக்கும்போது பாரத நாட்டிலே செல்வ செழிப்புடைய குடும்பத்தில் இலவல்லி என்பவள் நாகதோஷத்துடன் புத்திர பேறின்றி வருந்தியதாகவும் அவள் புத்திரபேறு வேண்டி சிவனிடம் தவம் இருந்தாள். இதனால் சிவன் நீ ஈழ நாட்டில் பிறப்பாய் அங்கு திருமால் உன்னை ஆட்கொண்டு குழந்தைப் பாக்கியத்தை தந்து அருள்வார் என்று கூறினார். வல்லிபுர பகுதியில் கடவுள் பக்தியுடைய குடும்பத்தில் பிறந்து குழந்தைப் பேறு இன்றி திருமாலை வழிபட்டு வந்தார். இயற்கையை இரசிக்க விரும்பிய இலவல்லி கற்கோவளக் கடலில் படகில் ஏறி விளையாடினார் அப்போது மீன் ஒன்று அவள் மடியில் விழுந்தது. மீன் குழந்தையாகி சங்கு, சங்கரத்துடன் காட்சி அளித்தது. இறுதியில் அம்மீன் சக்கரத்தை கொடுத்துவிட்டு மறைந்தது. அச்சக்கரத்தை இலவல்லி வல்லிபுரம் கொண்டுவந்து ஆலயம் அமைத்து வழிபட்டாள். இன்றும் யாழ்ப்பாணத்தில் நாகதோஷம் நீக்க வடமராட்சியில் 2 ஆலயங்கள் பிரசித்தமானவை நாகர்கோயில், வல்லிபுர ஆழ்வார் ஆலயம் முதன்மையானது.

யாழ்ப்பாண குடாநாட்டில் வடபுலத்தில் பருத்தித்துறை நகரின் கீழ்த் திசையில் 16km தொலைவில் வரலாற்று புகழ்மிக்க நாகர்கோயில் அமைந்துள்ளது. ஆதியில் நாகர் என்னும் சாதியினர் நாக வணக்கத்தை உடைய இனமாக காணப்பட்டனர். இத்தலத்தில் மூலமூர்த்தி ஆதியில் மோகாம்புரி எனும் பொற் கொல்லனால் தாமிரத்தால் செய்த ஐந்து தலை நாகபடத்தினையும் பின் தற்பொழுது சிவலிங்கத்தை உள்ளடக்கிய ஐந்து தலை நாகத்தைக் காணலாம். இவ்வாலயத்தில் ஐந்து கேணிகள் உள்ளன. பெண்டுகன்கேணி, உப்புக்கேணி, நாககேணி, சம்புக்கேணி, மார்கழிக்கேணி காணப்படுகிறது.

ஆதிமுதல் இன்றுவரை இக்கிராம மக்கள் பாம்பு அல்லது கொடிய விஷ ஜந்துக்கள் தீண்டினாலும் வைத்தியம் செய்வது இல்லை. நாகேஸ்வரர் தீர்த்தமாடும் நாககேணியில் உள்ள நீரினை எடுத்து அவரது சந்நிதியில் கிடைத்த மருந்தினை நீரில் கரைத்து உட்கொண்டு, கடித்த இடத்தில் பூசி சுகமடைவதனைக் காணலாம்.

அடுத்து கப்பல் திருவிழா. இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. முன்னொரு காலத்தில் திருவனந்தபுரத்தில் பெருமழையினால் அதிக மக்கள் இறந்தனர். இலங்கைத் தீவில் ஏனைய மக்களை குடியமர்த்த எண்ணி தனது படைத் தலைவனையும் சேனையையும் அனுப்பி வைத்தான். இப்படை தனுஷ்கோடி கரையாக காங்கேசந்துறை, மயிலிட்டி, வல்வெட்டித்துறை ஊடாக வியாபாரத்தில் ஈடுபட்ட மக்களை ஏற்றி நாகர்கோயில் கவுத்தந்துறையில் நங்கூரமிட்டனர். 7 நாட்கள் தங்கி நின்றபோதும் யாரும் இவர்களை போய் பார்க்கவுமில்லை. பொருட்கள் வாங்கவுமில்லை. பின்னர் தங்களுடன் திருவனந்தபுரம் வந்து குடியேற அழைத்த

*கடுமையான உழைப்பைத் தவிர வெற்றிக்கு ரகசியம் வேறில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் அப்பகுதி மக்கள் மறுத்தனர். கோபமடைந்த படை அதிகாரி. படை வீரர்களுக்கு எல்லோரையும் கப்பலில் ஏற்ற உத்தரவிட்டான். படையினர் வலுக்கட்டாயமாக ஏற்றினர். "நாகதம்பிரானே எம்பதி மக்களை அந்நியர் சூறையாடுகின்றனர். உன் கண் குருடானதோ காது செவிடானதோ எம்மைக் காப்பாற்றுவாயாக" என நாகதம்பிரானை மன்றாடினர். கப்பல் பிரயாணத்துக்கு ஆயத்தமானது ஆனால் கப்பல் நகரவில்லை. படையினர் பாய்மரத்தை பரிசோதித்தனர். பாய் மரத்தில் பாம்பு ஒன்று காணப்பட்டது. படையினர் அதனை வெட்டினர். நாகதம்பிரான் திருவிளையாடலால் வெட்டுண்ட சர்ப்பத்தின் இரத்தத் துளியில் பல ஆயிரம் சர்ப்பங்கள் தோன்றின. அப்போது படையினர் தடுமாறினர். அவர்களில் பக்திமயப்பட்ட ஒருவன் மக்களை "இறக்கி விட்டால் மட்டுமே கப்பல் நகரும்" என்றார். கப்பலில் பல இடத்து மக்கள் இருக்கிறார்கள் எப்படி அடையாளம் காண்பது கப்பலில் பக்திமயப்பட்டவன் மாவினை எடுத்து வீசினான். அப்போது மாக் குறிப்பொட்டு உள்ள மக்கள் இவ்வூர் மக்கள் எனவே படிப்படியாக மக்களை இறக்க பாம்பும் ஒவ்வொன்றாக இறங்கியது. ஆனால் கப்பல் நகரவில்லை கீழ் தளத்தில் அழகிய பெண்பிள்ளையும் பூனைக் குட்டியும் உள்ளது. அதை இறக்கினால் கப்பல் நகரும் என்றனர். அதன்படி இறுதியில் எஞ்சிநின்ற 2 பாம்புகளும் இறங்க அத்துடன் கப்பலும் நகர்ந்தது. அப்போது ஐந்து தலை நாகமாக எம்பெருமான் காட்சி கொடுத்தார். அதன்பின் இவ்விழாவினை எம்மக்கள் புரட்டாதி பூரணைக்கு அடுத்த நாள் விமரிசையாகக் கொண்டாடுகின்றனர். கவுந்தந் துறையிலிருந்து எம்பெருமான் வந்த பாதையை இப்போது "நாகம் சரிந்த வாய்க்கால்" என்று அழைக்கின்றனர். இவ்வாய்க்கால் இவ் ஆலய பின்புறத்தில் பள்ளமாக உள்ளது. கப்பலில் உள்ள பெண் பிள்ளை இவ் ஆலயத்தின் அருகில் உள்ள கண்ணகை அம்மன் ஆலயமாகும். இவ் ஆலய தலவிருட்சம் அத்தி மரமாகும்.

## நன்றி செலுத்துதல்

நாம் நம்முடைய காரியங்கள் நிறைவேறிய பின்பு கடவுளுக்கு நன்றி செலுத்துதல் இன்றியமையாதது. அதைக் கடவுள் ஏற்றுக்கொள்கின்றாரா என்பது சிந்தனைக்கு உரியதன்று. நாம் நமது நன்றியுணர்வை அவ்வாறு காட்டுகின்றோம்.

இறைவன் வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன்.

வேண்டுதல் வேண்டாமையிலான் அடிசேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பையில

என்பது பொய்யாமொழி.

புண்ணியங்கள் அனைத்திற்கும் தலையாயது நன்றி பாராட்டுவது.
பாவங்கள் அனைத்திற்கும் தலையாயது நன்றி மறப்பது ஆகும்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.

-ஆர்.வீ. கந்தசாமி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதமும் பசுவும்

–திரு வி. செல்வரத்தினம் அவர்கள்–

பசுவைப் போற்றும் பணி ஒரு விரதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். இந்துக்கள் அன்றி எல்லோருமே இந்தப் பணியில் ஈடுபட வேண்டும். பசுக்களுக்குச் செய்யும் தொண்டு வீண் போகாது. வீட்டில் லட்சுமிகடாட்சம் பெருகும்.

தோஷமே இல்லாத புனிதமான உயர்ந்த மிருகம் பசு. அது பார்வைக்கு மிருக உடலாக தோன்றினாலும், பசுவின் பின்புறம் மகாலட்சுமி வாசம் செய்வதாக ஞானிகள் கூறுவார்கள். பசுவின் பின்புறத்தைத் தொட்டு வணங்கிப் பூஜிப்பவர்கள் எல்லாச் செல்வங்களையும் பெறுவார்கள். பசுவை வீட்டில் வைத்து பராமரித்து வந்தால் வீட்டுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும் மிக நல்லது.

பசுக்களைக் கையால் தீண்டியவுடன் எல்லாப் பாவங்களும் குறைகின்றன. அட்டமி தினத்தில் பசுவைக் குளிப்பாட்டி, தீபம் காட்டி அன்னத்தை உணவாக கொடுப்பவர்கள் பெரும் செல்வம் அடைவார்கள். பசுவை வைத்து காப்பாற்றுபவனும், சகல விதமான கஷ்டங்களிலிருந்தும் நீங்கப்படுவான். மேலும் பசுவை நினைந்து தியானம் செய்தால் சகல விதமான கெடுதிகளினின்றும் விடுபடுவான்.

மேலும் பசுக்கள் பரம பவித்திரமானது. பரம மங்களமானது. பசுவின் குளம்பிலிருந்து எழும்பும் தூசி கங்கா ஜலம்போல் பவித்திரமானது என்று இந்து தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன.

மிருகங்களில் மிக உயர்வானது பசு. இது தனக்கென்று வாழாத மிக உயர்ந்த பிறவி. அது தன்னிடம் இருக்கும் யாவற்றையும் பிறருக்குக் கொடுத்து திருப்தி அடையும் மிருகம். மேலும் இதைவிட சக்தி வாய்ந்த உணவுப் பொருட்களைக் கொடுக்கிறது. இதைப்போல் எந்த மிருகமும் செய்யவில்லை.

பசுமாடு தியாகத்தின் சின்னம். அது தான் சுரக்கும் பாலைத் தனது கன்றுக்கு மட்டுமே என்று வைத்துக்கொள்ளாமல் பெரும் பகுதியை நமக்குக் கொடுத்து விடுகிறது. மேலும் நமக்கு பயன்படாத புல்லையும், வைக்கோலையும், தவிட்டையும் உணவாக எடுத்துக் கொண்டு நமக்குப் பயன்தரும் பாலைக் கொடுக்கிறது.

இதேபோல் நாம் சுயநலமில்லாத வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். நமது உழைப்பும் அதன் விளைவும் பெரும்பகுதி பிறருக்குப் பயன்படச் செய்யவேண்டும். தியாகவுணர்வைப் போற்றி வளர்த்துக்கொள்ள வேண்டும். சமூகத்திடம் நாம் கேட்பது கொஞ்சமாகவும், நாம் கொடுப்பது நிறைவானதாகவும் அமையச் செயற்பட வேண்டும். நம்முடைய உணர்வுகளும் செயல்களும் குழந்தை முதல் பெரியோர் வரையில் எல்லோருக்கும் நல்ல பலனை அளிப்பதாகச் செயற்பட வேண்டும் என இந்துமத சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளை நாம் பெற பசுவுக்கு பூஜை செய்ய வேண்டும், வணங்க வேண்டும்.

பசுவைப் பூஜிக்கும் மனிதன் மெல்ல மெல்ல உயர்ந்த பண்பை பெற்றுக் கொள்கிறான். தனக்கென்று வாழாமல் பிறருக்காக வாழும் தியாக உணர்வைப் பெறுகிறான். சமூகத்துக்கு எல்லாவற்றையும் கொடுத்துவிட்டுத் திரும்ப எதையும் தனக்கென்று பெற விரும்பாத உயர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பையும் பெறுகிறான். பசுவை வைத்துக் காப்பாற்றுபவனும், பசுவை பிரதஷிணம் செய்து நமஸ்கரிப்பவனும், சகலமான கஷ்டங்களிலிருந்தும் நீங்கப்படுவான். பசுவை நினைத்து தியானம் செய்தால் சகலமான கெடுதிகளினின்றும் விடுபடுவார்.

பசுவை வயதானபின் பராமரிக்காமல் விட்டுவிடக் கூடாது. பசு வயதான பிறகு தாயாரைப்போல் வைத்துக் காப்பாற்ற வேண்டும். அப்படியாயின் அது ஒரு புண்ணியமாக இருக்கும். பால்தர முடியாத பசுவை தெருவில் அலைய விட்டு விடுகிறார்கள். அது முதுமை அடைந்ததும் இரக்கமின்றிக் காசப்புக் கடைக்காரரிடம் விற்று விடுகிறார்கள். இது மிக மிகப் பெரிய பாவச் செயலாகும்.

எனவே, மக்கள் வயதான பிறகும் பசுவை பராமரிக்க வேண்டும். தயவு செய்து இந்துக்கள் மட்டுமன்றி ஏனைய மதத்தவர்களும் பசுவைக் கொல்லாமல், பசுவை உரிய முறையில் வளர்க்கவேண்டும்.

அரசாங்கம் பசுவதைத் தடுப்புச் சட்டம் கொண்டுவரவேண்டும். பசுக்களைக் காப்பாற்றும் முயற்சியில் இந்துக்கள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும். "மாட்டிறைச்சி சாப்பிடுபவனின் இல்லத்தில் பூசையறை இருப்பதில் அர்த்தமில்லை" என மகாத்மா காந்தி கூறியுள்ளார்.

**பஞ்ச கவ்யம்:**

பஞ்ச கவ்யம் என்பது பசுப்பால், பசு நெய், கோசலம், பசுத்தயிர், பசுச்சாணம் முதலியவற்றை முறைப்படி பூஜித்து கலந்து இறைவனுக்கு அபிஷேகம் செய்யவும், நாம் உட்கொள்ளவும் இறைவனால் அருளிச் செய்யப்பட்டது. இதிலிருந்து நாம் பசு எவ்வளவு சிறப்புடைய மிருகம் என்பதை அறியக்கூடியதாகவுள்ளது. அதனை நாம் சிறந்த முறையில் பராமரிக்க வேண்டும். பஞ்சகவ்யம் தயாரிப்பதற்கு சிவதீட்சை பெற்றவர்களும் ஆசாரியர் அபிஷேகம் செய்துகொண்ட சிவாச்சாரியார்களும் மாத்திரமே தகுதியுடையவர்களாவார்கள்.

பஞ்ச கவ்யம் பாவத்தையும் பலவித நோய்களையும் போக்கும் ஒரு பரம் ஔஷதம் ஆகும். இதைச் சாப்பிட்டால் நெருப்பு விறகை எரிப்பது போல் எமது நோயையும் செய்த பாவத்தையும் எரித்துவிடும்.

காலையில் எழுந்ததும் மங்களரூபியான பசுவைத் தினந்தோறும் தரிசிப்பவன் துன்பங்கள் நீங்கிச் சுகத்தைப் பெறுகிறான்.

நாம் தரிக்கும் திருநீறு பெறுவதற்கு பசுவின் சாணத்தை உருண்டையாக்கி, அல்லது தட்டையாக்கி தீயிலிட்டால் அது வெண்மையான திருநீறாய் எமக்குக் கிடைக்கிறது. மேலும் எந்தப் பொருளை தீயிலிட்டாலும் அது கறுப்பாகவே வரும். பசுவின் சாணி மாத்திரம் வெண்ணிறமாக வரும். எத்தனைதான் கொடிகட்டிப் பறந்து எவ்வளவு உயரத்தில் வாழ்ந்தாலும் இறுதியில் ஒருபிடி சாம்பலே என்பதை நினைவுபடுத்தி பற்றற்ற நிலையை உருவாக்கும்.

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே

இப்படி சம்பந்தர் தனது தேவாரத்தில் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தவினை இருக்க...

– திரு நீர்வை மணி அவர்கள் –

உலகியல் வாழ்வில் மக்கள் அன்றாடம் செய்யும் செயல்கள் அவர்களை நல்வினைக்கும் தீவினைக்கும் ஆளாக்கி வாழ்வில் இன்ப துன்பங்களை ஏற்படுத்துகின்றன. சமயச் சான்றோர்கள் இதனை நன்கு அறிந்து உணர்ந்து நாம் நாம் செய்யும் கருமங்கள் நமக்கும், பிறர்க்கும் இன்னா செய்யாது இருக்க இறையருளை வேண்டி நம் கருமங்களைச் செய்யவேண்டும் எனவும் இன்றேல் வாழ்வில் ஏற்படும் துன்பங்களால் மனம் நொந்து இறைவனையும் நொந்துகொள்வதாற் பயனில்லை எனவும் அருளியுள்ளார்கள்.

எனவே நாம் ஊர்ப்பழி, உலகப் பழிகளுக்கு ஆளாகாது வாழ்க்கையில் நல்வழி வாழ வேண்டியது அவசியமாகும். உலகப் பொதுமறையான திருக்குறளும்

"பழி அஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்" எனவும்,
"பிறர் பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்றும் உலகு" எனவும்,
"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்"

எனவும் ஊர்ப்பழிக்கு மக்கள் ஆளாகக் கூடாது எனவும் அப்படிப் பழிக்கு அஞ்சாது வாழும் வாழ்க்கை போலியானது. அதனாற் தமக்கும் பிறர்க்கும் கேடுவிளையும் என்பதையும் அழகாக எடுத்துக் கூறியுள்ளது. ஊர்ப்பழிக்கு அஞ்சாது வாழ நினைப்பது அவர்கட்கு மட்டுமன்றி அவர் சந்ததிக்கும் அவருடன் சேர்ந்தோருக்கும் துன்பத்தைத் தரவல்லது என்பதைப் பட்டறிவின்பால் உணரமுடிகின்றது.

மக்கள் தம் வாழ்விற்தெரியாமற் செய்யும் தவறுகட்கு மன்னிப்புண்டு. தெரிந்துகொண்டு செய்யும் தவறுகட்கு மன்னிப்புக் கிடையாதென ஆன்றோர் கூறுவர். ஔவைப் பிராட்டியாரும் நல்வழியில் மிகவும் சிறப்பாக,

செய்தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்தவருமோ இருநிதியம் - வையத்து
அறும்பாவம் என்ன அறிந்தன்றிடார்க்கின்று
வெறும் பானை பொங்குமோ மேல்

என எடுத்துக்கூறுவதிலிருந்து நாம் நாம் செய்யும் தீவினைகள் பிறர்க்குத் துன்பம் தரும் செயல்கள் இப்பிறப்பில் மட்டுமன்றி மறுபிறப்பிலும் கேடுவிளைவிக்கவல்லது என்பதை நன்குணர்த்துவதாயுள்ளது.

கலியுகத்திலே நாம் செய்யும், எண்ணும் காரியங்கட்கு கைமேற் பலன் கிட்டும் என்பார்கள். கைமேற் பலன் என்பது அரசன் அன்றறுக்கும் தெய்வம் நின்றறுக்கும் என்பதற்கு ஏற்ப எம் வாழ்நாளிலே இவற்றைக் காணவும், கேட்கவும் உணரவும் முடியும் என்பதாகும்.

இன்றைய உலகவலத்திலே நாம் காணும் கேட்கும் அறியும் யாவும்

குடைநிழல் இருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடையது மெலிந்து வேறார் நண்ணினும் நண்ணுவர்

என்பதை நன்குணர்த்துவதாயுள்ளது, எனவே மானிடராகப் பிறந்த நாம் வையத்தில் வாழ்வாங்கு வாழும் வகை தெரிந்து வாழ்வதுடன் எல்லோரும் இன்புற்றிருக்க இறைவனிடம் பணிந்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)



முனைவர் ஆ. ஆனந்தராசன்

## மூன்றாம் அதிகாரம்
## இருள் மல நிலை

அனைத்தையும் இயக்குகின்ற முதற்பொருளாகிய பதியின் இயல்பை முதல் அதிகாரத்தில் கூறினார். அம் முதற்பொருளைச் சார்ந்து வாழ்வதற்குரிய உயிர்களின் இயல்பை இரண்டாம் அதிகாரத்தில் கூறினார். இனி, அவ்வுயிர்கள் முதற்பொருளாகிய இறைவனைச் சாரவொட்டாமல் தடுத்து அறியாமையை விளைத்து நிற்கும் இருளாகிய ஆணவ மலத்தின் இயல்பை இம் மூன்றாம் அதிகாரத்தில் கூறலுறுகிறார். இவ்வதிகாரத்தின் பொருளைப் பின்வருமாறு சுருக்கித் தரலாம்.

பிறப்பால் வருவது துன்பம் என்பதை அனுபவமாகக் கண்டு பெரியோர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். பிறவித் தளையிலிருந்து நீங்கி எய்தக்கூடிய பேரின்ப நிலையைப் பற்றியும் அவர்கள் கூறியுள்ளனர். திருமுறையாசிரியர்களும் பிறரும் இவ்வாறு அருளியிருப்பதைப் பல கால் படித்திருந்தும் மக்கள் இவ்வுண்மைகளை உள்ளவாறு உணரவில்லை. பிறவியிலிருந்தும் விடுபடுதல் வேண்டும். பேரின்ப வாழ்வைப் பெறுதல் வேண்டும் என்பதில் உண்மையான நாட்டம் கொள்ளவில்லை. அவ்வுண்மைகளைச் சிந்திக்க வொட்டாதபடி அவர்களது அறிவைத் தடுத்து நிற்கின்ற தடை ஒன்று உள்ளது. அதுவே ஆணவமலம் என்ற பெயரால் குறிக்கப்படுகிறது.

ஆணவ மலம் அறிவை மறைப்பது; அறியாமையை உண்டாக்குவது. இவ்வியல்பைத் தெரிவித்துக் காட்டும் வகையில் ஆணவ மலத்திற்கு இருள் என்ற பெயரையே இட்டு வழ்ங்குகிறார் ஆசிரியர் உமாபதிசிவம்.

இரவு நேரத்தில் வந்து கவியும் புற இருளுக்கும் இந்த அக இருளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பின்வருமாறு சுட்டலாம். மறைத்தல் வலிமை என்பது இந்த இரண்டு இருளுக்கும் பொதுவாய் உரியது. புறவிருள் சடமாகிய கண்ணை மறைக்கும். அகவிருள் சித்தாகிய ஆன்மாவை மறைக்கும். புறவிருள் கண்ணை மறைக்கிறது என்பதை ஆன்மா உணர முடியும். ஆனால் அகவிருள் தன்னை மறைக்கிறது என்பதை ஆன்மா சிறிதும் அறிய முடிவதில்லை. வேறொரு வகையிற் சொன்னால், புறவிருள் தன்னைக் காட்டி நிற்கும். அகவிருள் தன்னைச் சிறிதும் காட்டிக் கொள்ளாது. இ∴து இந்த இரண்டு இருளுக்கும் உள்ள வேற்றுமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவிருளாகிய ஆணவம் உயிர்களை எப்போது வந்து பற்றியது? எப்படிப் பற்றியது? என்றெல்லாம் கேட்கலாம். ஆணவம் ஏதோ ஒரு காலத்தில் வந்து உயிர்களைப் பற்றியிருந்தால் அல்லவா இந்தக் கேள்விகளுக்கு விடை சொல்ல முடியும். ஆணவம் உயிர்களை இடையிலே வந்து பற்றவில்லை. உயிர் உள்ள அன்றே அதனிடத்தில் ஆணவமும் உடனாக உள்ளது என்றே சைவ சித்தாந்தம் கூறுகிறது. அது பற்றியே ஆணவத்திற்குச் சகசமலம் என்ற பெயர் ஏற்பட்டது. சகசம் என்றால் உடன் தோன்றியது என்பது பொருள்.

இவ்வாறு உயிர்களிடத்தில் தொன்று தொட்டே உள்ள ஆணவ இருள் உயிர்க்கு உயிராக உள்ள திருவருள் ஒளியை அவ்வுயிர்கள் உணராதபடி தடைசெய்து வருகிறது. அவ்விருள் உயிரைப் பற்றி நின்று மறைக்குமேயன்றி உயிர்க்குயிராக விளங்கும் திருவருள் ஒளியைப் பற்றமாட்டாது என்பதை உணர்தல் வேண்டும்.

உயிர்கள் எண்ணில. ஆனால் ஆணவ இருள் ஒன்றுதான். ஒன்றாகிய அவ்விருள் பலவாகிய உயிர்கள் அனைத்தையும் பொருந்தி நின்று மயக்கும் ஆற்றல் வாய்ந்தது.

உயிரைக் கணவன் என்றும், அதனைக் கூடி நின்று மயக்கும் ஆணவ இருளை இல்லாள் என்றும் கூறலாம். இந்த இல்லாளுக்கு ஒழுக்கம் என்பது துளியும் இல்லை! இவள் பிற ஆன்மாக்கள் ஆகிய ஆடவர் பலரோடும் கூடியிருப்பவள் ஆயிற்றே. ஆனாலும், அவள் தன் கணவனாகிய ஆன்மாவுக்குத் தன் உண்மையியல்பைக் காட்டாமல் மறைத்துக் கற்புடையவள் போலத் தன்னைக் காட்டிக்கொள்கிறாள்! இந்த உருவகத்தின் கருத்து, ஆணவ இருள் உயிரை மறைத்து அறியாமையை உண்டாக்கி அந்த அறியாமையையே அறிவு போலக் காட்டி நின்று மயக்கும் என்பதாகும்.

உயிர்கள் படுந் துன்பங்களுக்கெல்லாம் மூலகாரணம் இந்த ஆணவ மலமேயாகும். இஃது உயிரோடு இயற்கையாக ஒட்டியிருப்பதனால் இதனை உயிரின் குணம் என்று கூறலாமோ? எனில், அங்ஙனம் கூறுதல் கூடாது. ஆணவம் உயிரோடு இயற்கையாக இருப்பினும் அதனைக் குற்றம் என்றே கொள்ளுதல் வேண்டும். செம்பில் உள்ள களிம்பு போலவும், நெல்லில் உள்ள உமிபோலவும் ஆணவம் உயிருக்கு இயற்கைக் குற்றம் ஆகும்.

இத்தகைய ஆணவம் இப்பொழுது உயிர்களிடத்தில் மிகுந்து நின்று உயிர்களை மயக்கி, உயர்ந்ததாகிய திருவருளை நோக்கவிடாமல் தடுத்து இழிந்தனவாகிய உலக போகங்களையே நாடும்படி செய்கிறது. ஆயினும் இந்த நிலையே என்றும் நீடிக்காது. உயிர் பக்குவம் பெறுகின்ற காலம் வரும். அப்பொழுது திருவருள் ஒளியை உயிர் உணர்ந்து பற்றும். அந்நிலையில் ஆணவ இருள் வலி மடங்கி அகலும்.

உயிர்கள் திருவருளை உணரும் பக்குவ காலம் வரும் வரையில், அவை ஆணவ இருளிலிருந்து சிறிது விடுபட்டு ஓரளவு அறிவு விளக்கம் பெறுவதற்காக உடம்பையும், உடம்பிலுள்ள அறிகருவிகளையும், இந்த உலகையும் இறைவன் மாயையிலிருந்து படைத்துக் கொடுத்திருக்கிறான். இருளில் இடர்ப்படுபவனுக்குச் சிறிய விளக்கொளிபோல மாயாகாரியமாகிய உடம்பு முதலியவை உயிர்களுக்குச் சிறிது அறிவைத் தருகின்றன. மாயை செய்யும் இவ்வுதவியைக் கருதியே "விடிவாம் அளவும் விளக்கு அனைய மாயை" என்றார் ஆசிரியர் உமாபதி சிவம்.

இனி இக்கருத்துக்களை விரிவாகக் காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. ஆணவ மலம் என்பது உண்டு

துன்றும் பவத்துயரும் இன்பும் துணைப் பொருளும்
இன்று என்பது எவ்வாறும் இல்.

**பொருள்:**

இடையறாது தொடர்ந்து வருகின்ற பிறவித் துன்பமும், அது நீங்கிப் பெறுகின்ற பேரின்பமும், உயிர்கள் அதனைப் பெறுவதற்குத் துணையாய் நிற்கும் இறைவனாகிய முதற் பொருளும் ஆகியவை இல்லாத பொருள்கள் என்று சொல்வது எவ்வகையிலும் பொருந்தாது.

அவ்வாறாகவும், மாந்தர் அவற்றை இல்லையெனக் கருதி வருவதற்குக் காரணம் இருத்தல் வேண்டும். அதுவே ஆணவ மலம்.

**சொற்பொருள்:**

துன்றும்- இடைவிடாது தொடர்ந்து வரும், பவத்துயரும்- பிறவித் துன்பமும், இன்பும்- அத்துன்பம் நீங்கி அடைவதாகிய முத்தியின்பமும், துணைப் பொருளும்- அவ்விரண்டையும் உயிர்கள் பெறுவதற்குத் துணையாய் நிற்கும் இறைவனும், இன்று என்பது- இல்லை என்று சொல்வது, எவ்வாறும் இல்- எவ்வகையிலும் பொருத்தம் இல்லாதது. (ஆயினும், உயிர்கள் அவையில்லை என்று கருதி நிற்பதற்குக் காரணம் வேண்டும். அதுவே இருளாகிய ஆணவமலம்.)

**விளக்கம்:**

**பிறவித் துன்பம்:**

துன்பத்தைத் தரும் பல பிணிகளை உடைய உடம்பிலே உயிர் கட்டுண்டிருக்கிறது. இந்த உடம்பு ஊனும் எலும்பும் தோலும் குருதியும் கொண்டு அமைக்கப்பெற்றது. ஊன் முதலியவற்றைத் தனித்தனியே கண்டால் அவை எவ்வளவு அருவருப்பைத் தருகின்றன! ஊனாகிய இறைச்சியைத் தனியே காணும்போது கண்ணை மூடிக்கொள்ளத் தோன்றுகிறது. கை, கால் எலும்புகளையும் தலையோட்டினையும் காணும்போது அச்சம் மேலிடுகிறது. குருதி சிந்திக் கிடப்பதைக் காணும்போது மயக்கமே வருகிறது. இப்படிப்பட்ட அருவருக்கத்தக்க பொருள்களைக் கொண்டு ஆக்கிய இந்த உடம்பு எவ்வளவு கவர்ச்சியை ஊட்டுகிறது! "வெறும் குருதியும் நரம்பும் என்பும் கூடிய கூட்டந்தானே இந்த உடம்பு" என்று யாராவது நினைக்கிறார்களா? இவ்வுடம்பினைப் பெற்ற மாந்தர் அதனிடத்தில் தனிமோகம் கொள்கிறார்கள்; அழகுபடுத்திப் பார்க்கிறார்கள்; ஆசையோடு பேணுகிறார்கள். இந்த மயக்கத்தை என்னவென்பது!

இவ்வுடம்பு உயிருக்கு ஒதுக்கிடமேயன்றி நிலையாக வாழும் இடமன்று. எத்தனையோ பேர் நாம் கண்ணாரக் காணும்படி நடந்தார்; உடுத்தார்; நரைத்தார்; இறந்தார். இறந்தவரைப் பற்றிச் சிலகாலம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். பிறகு அவரைப் பற்றி நினைப்பதும் இல்லை. அவரைப் பற்றிப் பேசுவதும் இல்லை. புதிதாக இறந்தவரைப் பற்றிப் பேசத் தொடங்கி விடுகிறோம்!

உலகிலேயே மிகவும் வியப்பைத் தருவது எது தெரியுமா? உலகில் அன்றாடம் மக்கள் இறந்துகொண்டேயிருக்கிறார்கள். அதைக் கண்டும், "நான் நெடிது இருப்பேன்" என்று ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள். அதுதான் மிக வியப்பைத் தருவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையற்ற உடற் பிறவியில் மாந்தர் படுந்துன்பங்கள் மூன்று வகைப்படும். அவை ஆதி பௌதிகம், ஆதி தைவிகம், ஆதி யான்மிகம் என்பவை. மழை, காற்று, வெப்பம், கால மாறுபாடு முதலிய பொது நிகழ்ச்சிகளால் வரும் துன்பங்கள் ஆதி பௌதிகம் எனப்படும். பிறப்பு இறப்புத் துன்பங்கள், எதிர்பாராத வகையில் தீப்பிடித்து மடிதல், வெள்ளத்திற்கு ஒருசேரப் பலியாதல், கொடுமையான முறையில் சாலை விபத்து ஏற்படுதல் முதலியன ஆதி தைவிகம் எனப்படும். உடம்பிலும் மனத்திலும் வரும் பலவகை நோய்கள், மக்களாலும் பிற உயிர்களாலும் வரும் துன்பங்கள் முதலியன ஆதி யான்மிகம் என்னும் வகையில் அடங்கும். இவையே பிறவித் துன்பங்கள் எனப்படுகின்றன.

அறிவுடையான் ஒருவன் தன் உடம்பின் தன்மையையும் உலகின் துன்ப நிலையையும் கருதுவானாயின் அவன் பிறவாமையைத்தான் விரும்புவான். ஆனால், நம்மில் எத்தனைபேர் பிறவாமையை நாடுகின்றனர்? பெரும்பாலானவர் மேலும் பிறக்கவேண்டும், அனுபவித்தவற்றையே மேலும் அனுபவிக்க வேண்டும் என்றுதானே ஆசைப்படுகின்றனர். இஃது எதைக் காட்டுகிறது? எண்ணற்ற அருளாளர்கள் பிறவித் துன்பம்பற்றி எடுத்துக் கூறியும் அவர்கள் அதனை உணரவில்லை என்பதையே இது காட்டுகிறது.

திருக்குறள் முதலிய அற நூல்களையும், திருமுறைகள் முதலிய அருள் நூல்களையும் பயின்று தேர்ந்தவர் பலர் இருக்கிறார்கள். அவர்களும் பிறவித் துன்பத்தை உணராதவரோ என வினவலாம். ஆம் அவர்களும் உணராதவரேயாவர். உணர்தல் என்பது அனுபவமாக அறிதலைக் குறிக்கும். நெருப்புச் சுடும் என்பதை நாம் அனுபவமாக அறிந்துள்ளோம். அதனாலேயே அதற்கு அஞ்சுகிறோம். அதனைவிட்டு விலகியே நிற்கிறோம். அதுபோலப் பிறவித் துன்பத்தை ஒருவர் உள்ளவாறு உணர்ந்திருந்தால் அவர் அதற்கு அஞ்ச வேண்டும். அதிலிருந்து விடுபடுவதற்கு வழி என்ன என்று தேட வேண்டும். நம்மில் பலர் நூல்கள் வழியாகப் பிறவித் துன்பத்தைத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். வெறும் சொல்லளவில் அறிந்திருக்கிறார்களேயன்றி உள்ளவாறு அறியவில்லை. அவர்கள் உலக வாழ்க்கையிலே விள்ளமுடியாத விருப்பம் கொண்டிருப்பது ஒன்றே அவர்கள் பிறவித் துன்பத்தை உள்ளவாறு உணரவில்லை என்பதற்குப் போதிய சான்று ஆகும்.

பிறவித் துன்பத்தை அறியாமைக்குக் காரணம் என்ன? உயிரறிவில் உள்ள மறைப்பே அதன் அறியாமைக்குக் காரணமாகும். உயிர் என்ற ஒரு பொருளே இல்லை எனவும், பிறவி என்பதும் வினைத்துன்பம் என்பதும் ஆகிய எல்லாம் மக்களை ஏமாற்றுவதற்குப் புனைந்த கட்டுக் கதைகள் எனவும் சிலர் கூறுவர். அவர்களது அறிவில் உள்ள மறைப்பே உயிர், வினைத் துன்பம், மறுபிறப்பு ஆகிய இவற்றை உணரவிடாதபடி செய்து அவை இல்லை எனவும் சாதிக்கத் தூண்டுகிறது. அம் மறைப்பே ஆணவமலம் எனப்படுகிறது.

பேரின்பம்:

உலகில் இன்பம் சிறிதாய் உள்ளது; நிலையற்றதாய் உள்ளது; துன்பம் கலந்ததாய் உள்ளது; ஆனால் இறையின்பமோ அழியாததாய், துன்பக் கலப்பே இல்லாததாய், மேலும் மேலும் வளர்வதாய் இருப்பது. அது பற்றியே அது பேரின்பம் எனப்படுகிறது.

இளிவேனிற் காலம். இனிய மாலைப்பொழுது. வானத்தில் முழுமதி நிலவைப் பொழிகிறது. அந்த இடம் பூக்கள் நிறைந்த பொய்கைக் கரை. அங்கே மெல்லிய பூங்காற்றுத் தவழ்ந்து வருகிறது. நல்ல வீணையின் இசை மிதந்து வருகிறது. அங்கிருந்து இவற்றை

*கண்ணீர் என்பது துயரத்தின் மௌனமொழி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் ஒருங்கே நுகரும் இன்பம் எப்படிப்பட்டதோ அப்படிப்பட்ட சிறப்புடையது இறையின்பம் என்பர்.

கனியும் கரும்பும் இனிய பொருள்கள். அவற்றினும் மங்கை நல்லார் தரும் காதலின்பம் மிக இனியது. அவற்றையெல்லாம் விடச் சிறந்தது உலக முழுதையும் தன் அடிப்படுத்து ஆளும் அரசபோகம். இப்படி அமைந்த பொருளும் பதவியும் ஆகிய இவற்றையெல்லாம் துச்சமெனக் கருதி ஒதுக்கும்படியாக எல்லையற்று விளைவதே இறையின்பம் என்பர்.

இப்படிப்பட்ட இறையின்பம் வெறுங் கற்பனையன்று; ஏட்டளவில் உள்ளதும் அன்று. இப்பிறவிக்கு அப்பாற்பட்டதும் அன்று. அதனை அருளாளர்கள் அனுபவித்துப் பாடியிருக்கிறார்கள். அப் பேரின்பத்தை அனுபவித்த பிற்பாடும் ஐம்பொறிகளினாலே வருகின்ற உலக இன்பம் யாவும் சுவையில்லாமற் போய்விடும். கரும்பும் துவர்த்துப் போய்விடும்; செந்தேனும் கைத்துப் போய்விடும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆயினும் உலக இன்பங்களைவிட்டு விட நமக்கு மனம் வரவில்லை. வேறு இன்பம் இருப்பதாகச் சொல்லியும் நாம் அதை நம்பவில்லை. பேரின்பம் என்பது உள்ளது என்று நாம் உறுதியாக நம்பியிருந்தால் அதை அடைவதற்கு என்ன வழிஎன்று ஆராய்ந்து அவ்வழியிலே சென்றிருப்போம். அவ்வாறு நாம் செல்லவில்லை. பேரின்பத்தில் நமக்கு உண்மையான, உறுதியான நம்பிக்கை இல்லை என்பதையே இது காட்டுகிறது. அதனாலேயே உலக இன்பங்களை இறுகப் பற்றிக்கொண்டிருக்கிறோம். நமது அறிவில் உள்ள மறைப்பே பேரின்பத்தை நோக்கவிடாமல் சிற்றின்பத்தையே நாடும்படி செய்கிறது.

சிலர் பின்வருமாறு சொல்லுகிறார்கள். “இப்பொழுதே பெற்று நுகர்தற்குரிய ஐம்புல இன்பம் இங்கிருக்க, இதைவிட்டுப் போய் இதனினும் சிறந்த இன்பம் உண்டு என்று நம்பி அதைப் பெறுவதற்காகத் தம்மை வருத்திக் கொள்கிறார்களே, அவர்களைப் போன்ற மூடர் வேறு யாருண்டு? தாகமாக இருக்கும்போது தண்ணீர் கிடைக்கிறது. கிடைத்த நீரைப் பருகித் தாகத்தைத் தணித்துக் கொள்ளாமல் அதை வேண்டா என விலக்கி விட்டு வேறு எங்கோ ஓரிடத்தில் தண்ணீர் இருப்பதாகக் கேள்விப்பட்டு அதைத் தேடி அலைந்து துன்புறுகிற கதையைப் போன்றதே பேரின்பத்தை விரும்பிச் செல்வது” என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்களது அறிவிலுள்ள மறைப்பே இப்படியெல்லாம் அவர்களைப் பேச வைக்கிறது. அம் மறைப்பே ஆணவ மலம் எனப்படுகிறது.

### துணைப் பொருள்:

நாம் பிறருக்கு உதவியாக இருக்கும் வரையில் உலகம் நம்மை மதிக்கிறது. இவரால் இனி நமக்கு உதவியில்லை என்று தெரியவரும்போது உலகம் நம்மைப் புறக்கணிக்கிறது. எனவே உலகத்தார் உற்ற சார்பு ஆகார் என்பது விளங்கும். இது கருதியே இறைவனது திருவடி ஒன்றே உயிர்களுக்குப் பற்றுக்கோடு என்றும், பிறவித் துயரத்தைப் போக்கும் மருந்து என்றும் பெரியோர்கள் கூறியுள்ளார்கள். “தாள் அலால் துணையும் இல்லை” என்பது அப்பர் பெருமான் அருளிய வாக்கு.

தாய் தன் மகனிடம் கடைசி வரை அன்பாக இருப்பாள். துணையாக இருப்பாள் என்பார்கள். ஆனால், அவளும் இப்பிறவியில் மட்டுந்தானே இப்படியிருக்க முடியும். இப்பொழுது தாயாக இருப்பவள் மறுபிறவியில் யார் வயிற்றிலோ பிறந்து அவளைத் தாய் தாய் என்று சொல்லுவாள். அப்பொழுது இந்த மகனை நினைக்கவா போகிறாள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குத் தாயாகியாள் என்னைஈங்கு இட்டுத்
தனக்குத் தாய் நாடியே சென்றாள்"

என்று நாலடி கூறுகிறது.

இப்படி உறவு நீங்காமல் என்றும் எல்லாவுயிர்களுக்கும் எவ்விடத்தும் தாய்போல இருந்து அருள் புரிகின்றவன் இறைவன் ஒருவனே. "தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்னடியோங் களுக்கே" எனவும், "புந்தி வட்டத் திடைப்புக்கு நின்றானையும் பொய் யென்பனோ" எனவும் அப்பர் அருளிய மெய்ம்மொழிகள் கடவுள் உண்மையையும், உயிர்களுக்கு அவன் துணைப் பொருளாய் நிற்றலையும் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

ஆயினும் சிலர் கடவுள் உண்மையை மறுத்துப் பின்வருமாறு கூறுவர். "வண்ண மயில் கண்ணைக் கவரும் அழகினை உடையதாய் விளங்குகிறது. அதற்கு யாரும் அந்த அழகைத் தரவில்லை. சின்னக் குயில் இனிமையாகக் கூவுகிறது. அதற்கு யாரும் அந்தக் குரலினிமையைத் தரவில்லை. அவ்வாறே இவ்வுலகின் அமைப்பிற்கும் யாரும் காரணம் இல்லை. ஆனால், சமயவாதிகள் கடவுளே அனைத்திற்கும் காரணம் என்று கூறி உலகத்தாரை மயக்குகின்றனர். அவர்கள் கூற்று நகைப்பிற்குரியது. மலடிக்கு மகன் ஒருவன் இருந்தானாம்! அவன் முயற் கொம்பின்மீது ஏறினானாம்! வானத்தில் பூத்த மலரைப் பறித்தானாம்! இப்படிக் கூறினால் நகைப்புத்தானே உண்டாகும். அப்படியிருக்கிறது அவர்கள் பேச்சு. ஆதலால் இறைவன் ஒருவன் உண்டு என்பது பொய்."

இந்த முறையில் கடவுள் மறுப்பாளர் கூறிப் போவர். அவர்களது அறிவில் உள்ள மறைப்பே இப்படிப் பேச வைக்கிறது எனலாம். அம் மறைப்பே ஆணவ மலம் எனப்படுகிறது.

**மூன்று வழிகள்:**

ஒரு பொருளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு மூன்று வழிமுறைகள் உள்ளன. சுருதி, யுக்தி, அனுபவம் என்பன அவை. சுருதி என்பது உயர்ந்தோர் சொன்ன நூல்கள். யுக்தி என்பது நம் பகுத்தறிவினால் ஆராய்ந்து அறிவது. அனுபவம் என்பது நம் வாழ்க்கையில் நாமே தெரிந்து கொள்வது.

பவத்துயர் முதலியன உண்டு என்பதை இம் மூன்று வழிகளில் நாம் உணர்ந்து கொள்ள இயலும். அவ்வாறாகவும் மாந்தர் அவற்றை அறியாதவராய் அவை இல்லை எனவும் சாதிப்பர். ஆதலால் அதற்குக் காரணமாய் அவர்களின் அறிவை மறைத்திருக்கின்ற பொருள் ஒன்று உண்டு என்பது துணியப்படும் என்று இச்செய்யுளில் கூறுகிறார் ஆசிரியர்.

(தொடரும்...

## நினைவு கூரும் நிகழ்வு.



சுவாமி சித்ருபானந்தா அவர்களின் 1ஆம் ஆண்டு நினைவு தினம் 03.05.2015 ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தில் விசேட நிகழ்வுகளுடன் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

-பேரவையினர்-

# கந்தபுராணம் போதிக்கும் கருத்துக்கள் சில

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

வேத உண்மைகளை விளக்குவன புராணங்கள். புராணங்கள் பதினெட்டு. அவற்றுள் சைவ புராணங்கள் பத்து. அவற்றில் ஒன்று ஸ்கந்தபுராணம். தமிழில் இது கந்தபுராணமாகப் பாடப்பெற்றது. இது காஞ்சியில் குமரகோட்டம் என்னும் கோயிலிலே கந்தப் பெருமானைப் பூசித்து வந்த கச்சியப்ப சிவாச்சாரியாரால் பாடப்பெற்றது. முருகன் "திகட சக்கரம்" என அடியெடுத்துக் கொடுக்க கந்தபுராணத்தைப் பாடினார் என்பது வரலாறு.

கந்தபுராணம் பல கிளைக் கதைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. உட்பிரிவுகள் பலவற்றைக் கொண்டது. அவற்றுள் படலங்கள் பல உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மார்க்கண்டேயப் படலம் என்பதுவும் ஒன்று. மார்க்கண்டேயர் பற்றிய கதைச் சுருக்கம் மக்களால் அறியப்பட்டதொன்று. பதினாறு வயதுவரை வாழக்கூடிய சற்புத்திரன் ஒருவனை மிருகண்டுவுக்கும்- விருத்தைக்கும் பிள்ளையாகக் கொடுத்து அருளிச் செய்தார் சிவபிரான். அந்த வயது வந்ததும் யமனின் பாசக்கயிறு மார்க்கண்டேயர்மீது வீழ்ந்தது. அப்போது சிவனின் மறக்கருணையினால் யமன் வீழ்ந்து மடிந்தான். மார்க்கண்டேயர் என்பவர் இவரேதான். யமன் மாண்டமை காரணமாக பூமியில் இறப்பு நியதி நிறைவேற்றப்படவில்லை. அதனால் உயிர்களின் சனத்தொகைப் பெருக்கம் எல்லையில்லாமல் வளர்ந்தது. இதனால் பூமாதேவி சுமை தாங்க முடியாமல் விஷ்ணுவிடம் முறையிட்டாள். அவர் பிரமா, இந்திரன் தேவர்கள் ஆகியோருடன் சிவபிரானிடம் சென்று பூமாதேவியின் நிலைமையை முறையிட்டார்.

பூமாதேவி திருமாலிடம் மட்டும் முறையிட்ட போதும் இந்திரன் முதலியோரும் பூமாதேவியின்மீது இரக்கம் கொண்டமை பற்றி நாம் சிந்திக்க வேண்டும். எல்லோரும் இதற்கு ஒரு தீர்வு காணும் நோக்கோடு உதவ முன்வந்தமை, இரக்கம் காட்டவேண்டுவதன் முக்கியத்தை உணர்த்தி நிற்கிறது. "பிறர் துன்பத்தை தன் துன்பமாக நினைக்கும் பண்பு மனிதனுக்கும் அவசியம். மனிதன் பின்பற்றவேண்டிய விழுமியங்களின் இரக்கமும் ஒன்று. பிறருக்கு நாம் உதவி செய்ய வேண்டுமானால் நமக்குப் பணிவும் வாக்குச் சாதுரியமும் தேவை. கயிலையில் சிவபிரானிடம் சென்ற இவர்கள் பணிவுடன் சிவனை வணங்குகின்றனர். தமது தலை (சிரசு) சிவனின் பாதங்களில் தொடத்தக்கதாக வீழ்ந்து வணங்கினர். இது பணிவையும் பண்பையும் நமக்கு விளக்கி நிற்கிறது.

இவ்வாறு தேடி வந்தவர்களிடம் நீங்கள் என்னைத் தேடி வந்தமைக்கான காரணம் யாது? என சிவனார் வினவுகின்றார். இது அன்பு பணிவுடையாருக்கு சிவனார் எளிமை மிக்கவர் என்பதை தெளிவுறுத்துகின்றது. விருப்பு வெறுப்பு இன்மை, வேண்டுவார் வேண்டுவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈய்தல் முதலிய தெய்வீகக் குணங்களை தெளிவுறுத்துகின்றமை நோக்கத்தக்கது. இரு தரப்பினருக்குமிடையே நீதிபேச வேண்டுவது பேசுவோனது சிறந்த பண்பாகும். திருமால் சிவபிரானுக்கு பிரச்சினைகளை எடுத்து விளக்கும்போது இங்கே சாதுரியம் மிக்க சமநீதி பேசப்படுகிறது. இத்தகைய நல்ல பண்புகளை கந்தபுராணம் கற்றுத்தருகின்றது.

காத்தல் கடவுளாகிய திருமால் யமனது மரணத்தின் பின்னர் உலகில் பெருகும் உயிர்களைக் காக்கும் வேலையைச் செய்ய முடியாது. மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாக நேரிடுகிறது. பூமாதேவி பாரம் தாங்கமுடியாமல் துன்பப்படுவதுபோல, அனைத்து உயிர்களையும் காத்தல் திருமாலுக்கு பெரும் பிரச்சினையாயிற்று. எனவே சிவனிடம் முறையிடுகின்றார். திருமால் எதிர்பார்க்கும் பலன் ஆவது இங்கே யமனை மீண்டும் உயிர் பெற்றெழச் செய்தல் வேண்டும். ஆயின் முதலில் தனது கஷ்டத்தை விளக்கிவிட்டு மேலே செல்வது சிறப்பு என்பதால், பூமாதேவி படும் கஷ்டத்தை இரண்டாவதாகக் கூற முற்படுகிறார் திருமால். இது ஒரு நடைமுறைச் சிறப்பு ஆகும். எனவே யமனை உயிர் பெற்று எழச் செய்ய திருவருள் புரியுமாறு சிவனை வேண்டுகிறார் திருமால். சிவனின் திருவடிகளைத் தொழுது திருமால் தனது வேண்டுதலைச் சிவனிடம் சமர்ப்பிக்கின்றார். தவறு புரிந்தவரை மன்னித்தல் மனிதப்பண்பு. இங்கே சிவனார் தவறு புரிந்த யமனை மன்னித்து உயிர்பெற்று எழச் செய்கின்றமை உயர்ந்த மனிதப்பண்பாகும். அத்துடன் ஒரு கடமையைச் செய்தவர் இறந்து விட்டால் அல்லது இடம் விலகி விட்டால் பதில் கடமை புரியவேண்டி ஒருவரை நியமித்தல் நியமிப்பவரின் உயர் கடமையாகும். அதையே இங்கே சிவனார் செய்கின்றமை நமக்கொரு பாடமாகும். உயிர்பெற்று எழுந்த யமனிடம் பண்பு காணப்படுகின்றது. அதிகார பீடத்தில் உள்ளவர்களுக்கு அடக்கம் அவசியம் என்பதை இது விளக்குகின்றது. சிவனின் "எழுக" என்னும் மூன்றெழுத்துச் சொல் கருத்து மிக்கதும் மந்திர சக்தி வாய்ந்ததுமாகும். "நீ குற்றமற்றவனாகி குணம் நிறைந்தவனாக விளங்குக" என்பதன் பயன் "எழுக" என்னும் சொல்லில் அடங்கியுள்ளது. எனவே ஆணவம் அழிவையே தரும் என்பது விளக்கப்பட்டுள்ளது. எனவே பணிவின் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

மார்க்கண்டேயர் சிவனிடம் வரம்பெற்று வந்தவர். காசியிலே சிவபூசை செய்து கொண்டிருக்கும்போது சிவபெருமான் அங்கு வெளிப்பட்டு, "யமனின் பாசக்கயிற்றுக்கு இலக்காகாமல் நீண்ட ஆயுள் பெற்றுய்யுமாறு அருள்கொடுத்துள்ளார். எனவே சிவனடியார்கள் என்றும் சிவனே என்னும் கருத்தினைப் புலப்படுத்தியுள்ளார்கள். அது சைவ சித்தாந்த மெய்ப்பொருள். இளமையில் அதிமனித நிலையை அடைந்தவர்களை நாம் இனம்காண வேண்டும். அவர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். மார்க்கண்டேயர் இத்தகையவரே. அதுவும் பொறுப்பான பதவி வகிப்பவர்கள் அதிமனித நிலையடைந்தவர்களை இனம்கண்டு மதிப்பளித்தல் வேண்டுமென்பதை கந்தபுராணம் உணர்த்துகின்றது. சிவன் யமனுக்கு உபதேசம் செய்கிறார். அவரவர் செய்யும் பாவபுண்ணியங்களுக்கேற்ப இறப்பின் பின்னர் சுவர்க்கத்தையோ நரகத்தையோ அடைவது நியமம். எனவே யமனாகிய நீர் அவ்வாறே உள்ள கடமைகளை நிறைவேற்றுவது உனது கடமையாகும். இதில் மார்க்கண்டேயர் விதிவிலக்கானவர். ஏனைய உயிர்கள் திரிகரணங்கள் மூலம் செய்யும் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப சுவர்க்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது நரகத்தை அடைவர். இவ்வாறு கடமை செய்க என சிவனார் யமனுக்கு ஆணையிட்டதும், யமன் சிவனது திருவடிகளை வணங்கி, உயிர் பெற்று எழுந்த தனது எருமை வாகனத்துடன் அங்கிருந்து புறப்பட்டுத் தனது படைகளுடன் தன் கடமையைச் செய்வதற்காக தென்திசை நோக்கிச் சென்றான். கஷ்ட நிலையைத் தீர்த்து வைத்து, இயல்பு நிலையைத் தோற்றுவிக்க வேண்டுவது மேலாட்சி புரிவோர்க்கு அவசியம் என்னும் உண்மையை சிவனார் தன் அருட்செயல்மூலம் இங்கு புரிய வைப்பது சமயத்தைத் தவிர உலகியலுக்கும் பொருந்தும் ஓர் கருத்தாகும்.

இறைவனை திரி கரண சுத்தியோடு வழிபடல் வேண்டும். அதாவது மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் மும்முறை வழிபடுதல் வேண்டும். மனத்தில் நினைத்தவாறே, வாயால் கூறிக்கொண்டு, காயத்தால் வணங்குதல் முறை. யமன் சிவனிடமிருந்து விடை பெற்றதும், அங்கு கூடிநின்ற திருமால், தேவர்கள், முனிவர்கள் யாவரும் சிவபிரானை மூன்று முறை வழிபடுகின்றனர். இவ்வாறு மும்முறை வழிபடுதலானது சமய மரபாகும். அத்துடன் அது ஓர் நடைமுறைச் சிறப்பாகும். மார்க்கண்டேயரும் தன் தவ வலியால் யமனது அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டவராக விளங்கினாலும், அவரது கதையைக் கூறுவோரும் யமனது அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டவராவர். இதை யமனும் அறிந்து கொண்டான். கந்தபுராணத்தில் வரும் சூரனும் இந்த உண்மையை முனிவரின் அறிவுரையினால் உணர்ந்து கொண்டான். தவவலிமையானது தலைமுறை தலைமுறையாக பலன் தருவது இவ்வுண்மையை மார்க்கண்டேயரின் தந்தை, பின், தந்தை வழி பாட்டன் முதலியோரது வாழ்க்கையினை நோக்கி உணர்ந்து கொள்ள முடியும்.

"தவமும் தவமுடையார்க்காகும்
அவம் அதனை அஃதிலார் மேற்கொள்வது"

என்னும் குறள் நோக்கியறிக. வலிமையால் சாதாரண மனிதர்களால் விலக்க முடியாத மரண நியதியை (விதி) வெற்றி கொண்டு, யமனின் ஆணவ வலிமையை ஒழித்துவிட்டு இறவாப் பெருவாழ்வைப் பெற்றார்.

## வேலா வேலா சந்நிதி வேலா

வேலா வேலா வேலா வேலா
சந்நிதி உறையும் வேலா வேலா
சஞ்சலம் தீர்க்கும் வேலா வேலா
வந்திடும் வினைகள் போக்கும் வேலா
வரங்கள் அளித்துக் காக்கும் வேலா
சந்ததி வாழ வைக்கும் வேலா
சண்முக நாதா வேலா வேலா
வேலா வேலா வேலா வேலா

*-கவிஞர் வ. யோகானந்தசிவம்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கனக துர்க்கையம்மன் ஆலயம் (ஈலிங், லண்டன்)

– வல்வையூர் அப்பாண்ணா –

மத்திய லண்டனுக்கு அண்மையில் Ealing - Chappal Road பகுதியில் மிகச் சிறியதொரு இடத்தில் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம் காணப்படுகிறது. சிறிய இடப்பகுதியாக இருந்தாலும் அம்பாளின் கீர்த்தி பெரியது என்பதை தினசரி அம்பாளைத் தரிசிக்கவரும் பக்தர்களின் எண்ணிக்கையை வைத்தே தீர்மானிக்கலாம். வெளிப்புறப் பார்வைக்கு உள்ளே ஒரு கோவில் இருப்பதற்கான எவ்வித அறிகுறியும் இல்லாமல் வழமையான லண்டன் சுற்றாடலில் உள்ளதைப் போன்று வீடுகள் நெருக்கமாக உள்ள இடத்தில் கோவில் அமைந்துள்ளது. நம்மவர்கள் மிக அதிகமாக வாழும் Tooting, Mitcham போன்ற பகுதிகளிலிருந்து 53 நிமிடம் பயணித்தால் Ealingஇல் உள்ள ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தைச் சென்றடையலாம்.

கிழக்குப் பார்த்த கோயில்; ஒரு முகப்பு வாசல்; வாசற் சுவரின் மேலாக சிவன் - பார்வதி திருமணக்காட்சி சீமெந்துச் சிற்பமாக; வாசலைத் தொடர்ந்து வடக்குத் தெற்கான ஒரு மண்டபம். வாகனங்கள் வைக்குமிடம், உணவு பரிமாறப்படும் இடம், ஒரு பக்கமாகவுள்ள சமையலறை (பிரசாதம் தயாரிக்கும் இடம்), களஞ்சிய அறை போன்ற அனைத்துத் தேவைகளின் மையமாக இந்த மண்டபம் அமைவதால் இதனை ஒரு பல்நோக்கு மண்டபம் என்றே கூறலாம்.

இந்த மண்டபத்திலிருந்து உள்ளே செல்லும் ஒரு அகன்ற வாசல். இந்த முகப்பு வாசலின் உட்புறமாக - கருவறைக்கு நேராக - மேலே, துர்க்கை அம்பாளின் பல்வேறு தோற்றங்கள். மகிசாகர துர்க்கை, மகா துர்க்கை, ஜல துர்க்கை, விஷ்ணு துர்க்கை, ருத்திர துர்க்கை, நல துர்க்கை, சூலினி துர்க்கை, மகிசாசுரவர்த்தினி என வரிசையாக துர்க்கையின் அவதாரங்கள் உள்ளனர்.

மையத்தில் கருவறை. கருவறைக்கு மேலே கட்டப்பட்டுள்ள 5 அடுக்கு விமானம் இடத்திற்கு ஏற்றபடி சிறியதாக அமைத்துள்ளார்கள். கருவறையின் உள்ளே ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் நின்ற திருக்கோலத்தில் நிறைந்த அலங்காரத்துடனும், நிறைவான தோற்றப் பொலிவுடனும் அருள்பாலிக்கிறாள். அம்பாளின் முகப்பொலிவும் வசீகரமும் பார்ப்போரை மயங்க வைக்கும் கொள்ளை அழகு. நம்மை மறந்து கைகூப்பித் தொழுது நிற்கிறோம். கருவறையின் மூன்று பக்கச் சுற்றுச் சுவரின் மாடங்களிலும் இலக்குமி, நாகபூஷனி, சரஸ்வதி உள்ளனர். கருவறைக்கு முன்பாக சிறிதளவே உயரமான கொடிமரம் - சிம்மம்-பலிபீடம் ஆகியவையும் உள்ளன. கருவறையின் இடது பக்கமாக வழமையான இடத்தில் சண்டிகேஸ்வரியின் சந்நிதி காண்பப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மேற்கு மூலையிலிருந்து பார்த்தால் பிள்ளையார், சிவன் (லிங்க வடிவில்) கிருஷ்ணன் - ராதை, முருகன் சந்நிதிகள் உள்ளன. ஒவ்வொரு சிறிய சந்நிதியையும் சுற்றிவரக் கூடியதான இடைவெளிகள் காணப்படுகின்றன. முருகன் சந்நிதிக்கு அருகாக உள்ள சிறிய இடத்தில் முத்து - மணிகள் பதிக்கப்பட்ட சிறிய ரதம் (தேர்) நிறுத்தப்பட்டுள்ளது.

வடமேற்கு மூலையிலிருந்து குருவாயூரப்பன், சிவகாமசுந்தரி சமேத நடராஜர், ஐயப்பன், நால்வர் சந்நிதிகள் உண்டு. நால்வர் சந்நிதிக்கு வெளியே பிரேம் பண்ணப்பட்ட அறுபத்துமூவர் படம் சுவரை அலங்கரிக்கிறது. அடுத்திருப்பது தெட்சணாமூர்த்தியின் சந்நிதானம். கல்லால மர நிழலின் கீழ் உபதேசம் பெற்றுக்கொள்ளும் சனகர், சனாதரர், சனந்தரர், சனக்குமாரர் ஆகிய நான்கு முனிவர்களும் தெட்சணாமூர்த்திக்கு முன்னே அமர்ந்திருக்கின்றனர். வடகிழக்கு மூலையில் நவக்கிரகம். நவக்கிரகத்தின் பின்புறம் உள்ள ஒதுக்கத்தில் சிறிய இடத்தில் யாகசாலை உள்ளது. மேற்குப் பார்த்தபடி வைரவர் அமர்ந்துள்ளார். அருகே உற்சவ மூர்த்திகள் வைக்கப்பட்டிருக்கும் சிறிய வசந்த மண்டபம். இந்த வசந்த மண்டபத்திலிருந்துதான் விழாக் காலங்களில் புறப்படும் உற்சவ மூர்த்திகள் ஒற்றை வீதியைச் சுற்றி வருகின்றன.

ஏனைய கோவில்களைப் போலல்லாமல் சிறியதொரு இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் கருவறையின் அமைப்பும் - ஒற்றைப் பிரகாரத்தில் அந்தந்த இடங்களில் அமைந்துள்ள சிறிய சந்நிதிகளும் - சந்நிதிகளின் உள்ளே ஒரே அளவிலான சிறிய மூர்த்தங்களும் - சுத்தமான பிரகாரமும் நம்மவர்கள் அனைவரையும் கவர்ந்து இழுக்கிறது.

நாம் அம்பிகையைத் தரிசிக்கச் சென்றிருந்தவேளை பிரம்மோற்சவத்தின் 10ஆம் திருவிழா. தம்பப் பூசை, அஸ்திரதேவர் உள்வீதி வலம் முடிய இனிய நாதஸ்வர இசையுடன் வசந்தமண்டபப் பூஜை, பூசை முடிந்ததும் சிறிய கேடகத்தில் அம்பாள் முன்னேயும், கணபதியும் முருகனும் இணைந்தபடி பின்னேயும் தொடர வீதி வலம் வந்து, திருவிழாவின் சகல நடைமுறைகளும் கச்சிதமாக நடந்தேறின. விபூதி பிரசாதம் வழங்கப்படுவதற்கு முன்னரே முன் மண்டபத்தில் மதிய போசனம் ஆரம்பமாகிவிட்டது. நீளமான வாங்குகளில் வரிசையாக வைக்கப்பட்டிருந்த சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல், தக்காளிச் சாதம், சாதம் - கறிவகைகள், பழங்கள் என பலவகைப்பட்ட உணவு வகைகளில் நாம் விரும்பியதை- விரும்பிய அளவு எடுத்துக்கொண்டு, அனைவரும் தாம் விரும்பிய இடத்தில் தரையில் அமர்ந்தபடி உணவு உட்கொள்ளுகின்றனர். தரையில் அமர முடியாதவர்களுக்காகவும் - முதியோருக்காகவும் கதிரைகளும் வைக்கப்பட்டுள்ளன.

பிரம்மோற்சவத்தின் தேர்த்திருவிழா மிகப் பிரபல்யமானது. தேர்த்திருவிழா எப்போதும் ஒரு ஞாயிற்றுக்கிழமை வரக்கூடியதாகவே விழாக்காலம் அமைவதால் லண்டனின் பல பாகங்களிலிருந்தும் நம்மவர்கள் பல்லாயிரக் கணக்கில் கூடுகிறார்கள். தேர்த்திருவிழாவன்று மட்டுமே அம்பிகை கோவிலுக்கு வெளியே வந்து தேரேறி கிட்டிய வீதிகளினூடாக வலம் வருகிறது. ஈலிங் பொலிசார் இந்தத் தேர் ஊர்வலத்திற்கான வீதி ஒழுங்குகளை மிகக் கச்சிதமாக செய்து கொடுப்பதுடன், ஏனைய பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெச்சும்படியாகக் கவனிக்கின்றனர். தேரேறும் அம்பிகையை நேரில் தரிசிப்பவர்களைவிட, பல்வேறு தனியார் தொலைக்காட்சியிலும் நேரலையாகப் பலரும் பார்த்து மகிழ்கின்றனர். பொதுவாகக் கூறின் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய பிரம்மோற்சவமும் தேர்த்திருவிழாவும் புலம்பெயர் சைவர்களின் தனிச்சிறப்பான விழாவாகவே அமைகிறது.

## ஒரு பிந்திய செய்தி:

ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகம் வடக்கு - கிழக்குப் பகுதிகளில், குறிப்பாக வன்னிப் பகுதியில் பல்வேறு ரூபங்களில் - பல்வேறு வழியாகவும் வாழ்வாதார உதவிகள் புரிந்து வருவதை சைவ உலகம் நன்கறியும். இந்நிலையில் கடந்த 19.04.2015 தினக்குரல் பத்திரிகையில் பார்த்த செய்தி ஒன்று பலருக்கும் பயனளிக்கும் எனக் கருதுவதால் அதனையும் இங்கு தந்திருக்கிறேன்.

ஈலிங் துர்க்கை அம்மன் ஆலயம் தாயகத்தில் மேற்கொள்ளும் சமூக நல பணிகளை விரிவுபடுத்தும் நோக்கில், A-9 வீதியில் - மாங்குளம் பகுதியில் அமைந்துள்ள அகில இலங்கை சைவ மகாசபை வளாகத்தில் ஒரு புதிய அலுவலகத்தை அமைத்துள்ளார்கள். இந்த அலுவலகத் திறப்பு விழாவில் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளும் கலந்துகொண்டார்கள் என்பதுவும் சிறப்புச் செய்தியாகும். கல்வி - வாழ்வாதார - விசேட தேவைகளுடையோர் தமது பிரச்சினைகளையும் தேவைகளையும் இந்த அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

தொலைபேசி இலக்கம்: 0777740958

மின்னஞ்சல் முகவரி: ealing amman centre@gmail.com



ஈழமணித் திருநாட்டின் சிவபூமி எனப் போற்றப்படும் காரைநகரிலே உதித்த சிவத்தமிழ் வித்தகரான கலாநிதி வைத்தீஸ்வரக்குருக்கள் சைவத் திற்கும் தமிழுக்கும் அருந்தொண்டாற்றியவர். இவர் ஏராளமான இலக்கியங்களைப் படைத்துள்ளார். ஐயா அவர்கள் 25.04.2015 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு நாமும் எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது இழப் பானது ஈடுசெய்யமுடியாத ஒரு பேரிழப்பாகும். அவரது ஆத்மா தில்லைக்கூத்தன் திருவடியை அடையவேண்டுமென நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக.

-பேரவையினர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசிமாத வாராந்த நிகழ்வுகள்

01.05.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "இன்னிசை"

வழங்குபவர் :- செல்வி ஏ. உஷந்தா அவர்கள்

(பக்கவாத்திய சகிதம்)

---

08.05.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "உள்ளம் பெருங்கோயில்"

வழங்குபவர் :- திரு ஐ. சண்முகலிங்கம் அவர்கள்

[இளை. ஆசிரியர்]

---

15.05.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

சொற்பொழிவு :- "மெய்த்துணை"

வழங்குபவர் :- சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்

---

22.05.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

வைகாசிப் பெருவிழா

---

29.05.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

## ஞானச்சுடர் வைகாசிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சி. சிவபாலசிங்கம் அவர்கள்

[இளை. கிராம உத்தியோகத்தர், பொலிகண்டி]

**209ஆவது மலர்**

மதிப்பீட்டுரை :- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

[ஆசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/112/NEWS/2015

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org